பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir


விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 17 | ஞாயிற்றுக்கிழமை 02.09.2018 | கதிர் 301


### இனி இது ரகசியம் அல்ல!

ஒவ்வொரு நாளும் ஸிரிய ஸான அரசியல் விவகாரத்தை அலசுவது அலுத்துவிடும் அல்லவா...! அதனால் அரசியல் விவகாரங்களை ஒட்டி இடம்பெற்ற ஒரு சுவையான சம்பவத்தை இன்று பகிரலாம் என நினைக்கிறேன்.

முனனாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் 03

# சமஷ்டி வேண்டாமெனச் சுமந்திரன் கூறுவாராயின் பதவியொன்றை எதிர்பார்க்கிறார் என்றே அர்த்தம்



## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் காட்டம்

யாழ்ப்பாணம், செப்.02

"நான் ஒன்பது மாகாணங்களுக்கும் சமஷ்டியே உகந்தது என்று சிங்கள மனங்களை மாற்றி வருகின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ் மக்களுக்குத்தான் கொடுத்த வாக்குகளை மறந்து, வடக்கு – கிழக்கில் கூட சமஷ்டி வேண்டாம் என்று கூறுகின்றார் என்றால் – அதுவும் ஒற்றையாட்சியின் கீழ் சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்தியிருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தையே கோருகின்றார் என்றால் – விரைவில் ஏதாவது பதவியொன்றை அவர் எதிர்பார்க்கின்றார் என்று அர்த்தம்."

– இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். பக்கம் 18

# 'சமஷ்டி' என்ற பெயர்ப் பலகைதான் தேவையில்லை என்று சொன்னேன்

## தமது காலிக் கூட்ட சிங்கள உரை குறித்து தெளிவுபடுத்துகின்றார் சுமந்திரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

வடமராட்சி, செப்டெம்பர் 02

"கடந்த வியாழனன்று காலியில் நடைபெற்ற கூட்டத்தில் சிங்களத்தில் உரையாற்றிய நான் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறையை வலியுறுத்தினேன். அப்படியானால் சமஷ்டி அரசமைப்பை மட்டும்தான் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று என்னிடம் கேட்கப்பட்டது. 'சமஷ்டி' என்ற பெயர்ப் பலகை எங்களுக் குத் தேவையற்றது என்ற எனது வழமையான பதிலையே நான் அங்கும் கூறினேன். அதை எல்லா ஊடகங்களும் 'சமஷ்டி' எங்களுக்குத் தேவையில்லை என நான் கூறினேன் எனத் தலைப்புப் போட்டு செய்தி பிரசுரித் திருக்கின்றன."

- இப்படி விளக்கமளித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான எம்.ஏ. சுமந்திரன்.

*(அவரது விரிவான விளக்கம் 2 ஆம் பக்கத்தில்)*

## புலித் தலைமை புத்திசாலித்தனமானது என்று கூறிய முதல் முஸ்லிம் அஸ்மின்

### முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.02

முதலமைச்சரைப் பதவியில் இருந்து நீக்க புலிகள் பாணியில் செயற்பட வேண்டும் என்று மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் கூறியிருக்கின்றமை, முஸ்லிம் மக்களுக்குப் புலிகள் கையால் கிடைத்த பரிகாரத்தை நானும் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத் பக்கம் 18

## கோதுமை மா விலை 5 ரூபாவால் உயர்வு

கொழும்பு, செப்.02

கோதுமை மாவின் விலை நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் ஆகக் பக்கம் 18

## லும்பினி புனித பூமிக்கு மைத்திரிபால பயணம்



காத்மண்டு, செப்.02

நேபாளத்தின் காத்மண்டு நகரில் இடம்பெற்ற பிம்ஸ்ரெக் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாநாட்டு பக்கம் 18

## எமது போராட்டத்தால் அரசு நிச்சயம் கவிழும்

### நாமல் ராஜபக்ஷ உறுதி



கொழும்பு, செப்.02

எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பாரிய போராட்டம் நல்லாட்சி அரசு கவிழப் போகின்றது என்பதைத் பக்கம் 18

## அரசுக்கு கீழ்ப்படியாத இலங்கை இராணுவம்

### ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் விசனம்



ஜெனீவா, செப்.02

இலங்கை இராணுவம் காணிகள் விவகாரத்தில் இலங்கை பக்கம் 18

## மர்மப் பொருள் வெடித்ததில் மீனவர் சாவு!

### மூவர் படுகாயம்

மன்னார், செப்.02

மன்னார்–பள்ளிமுனை கடற்பரப்பில் மிதந்து வந்த மர்மப் பொருளை எடுத்து சோதனையிட்டபோது, அது வெடித்ததில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் மூன்று மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

மன்னார் பள்ளிமுனை கிராமத் பக்கம் 18

## தென்மேற்குக் கடலில் நேற்று நிலநடுக்கம்!

கொழும்பு, செப்.02

இந்தியப் பெருங்கடல் பகுதியில் இலங்கைக்குத் தென்மேற்கே நேற்று முற்பகல் 11.43 மணியளவில் 5.2 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 18

## ஜெனீவாவில் இலங்கைக்கு செப். 12 புதிய நெருக்கடி!

### தன்னிச்சையாகத் தடுத்து வைத்தல் தொடர்பான அறிக்கை மீது விவாதம்

ஜெனீவா, செப்.02

இலங்கை குறித்து முன்வைக்கப்பட்டுள்ள – தன்னிச்சை பக்கம் 18

## வடக்கு – கிழக்கில் காணி விடுவிக்க இன்னும் 5 ஆண்டுகள் செல்லுமாம்

### இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்



கொழும்பு, செப்.02

வடக்கு – கிழக்கில் 19 ஆயிரத்து 300 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றில் 2 ஆயிரத்து 621 ஏக்கர் காணிகள் தனியாருக் பக்கம் 18

# குழப்ப மனநிலையில் உள்ளார் விக்கி அதற்குக் கூட்டமைப்பு பொறுப்பல்ல

## முதல்வரின் கூற்றுக்கு சுமந்திரன் பதிலடி



(எஸ்.நிதர்ஷன்)

முதலமைச்சர் விக்கி தனது நேற்றைய (நேற்று முன்தினம்) உரையில் தனக்கு முன்பாக நான்கு தெரிவுகள் உள்ளன எனச் சொல்லியிருக்கிறார். ஆனால் அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் தனக்கு மூன்று தெரிவுகள் உள்ளன எனக் கூறியிருந்தார். இப்போது நான்கு தெரிவுகள் உண்டு என்கிறார். நாளைக்கு ஐந்து தெரிவுகள் உண்டு எனவும், பத்து நாள்களின் பின்னர் பத்து தெரிவுகள் உண்டு எனவும் அவர் சொல்வார். ஆகவே அவரின் குழப்ப மனநிலைக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர். அவர் தனது மனநிலைக் குழப்பத்தைச் சீர்செய்து தெளிவான விளக்கத்தைச் சொன்ன பிறகு நாங்கள் எங்கள் கருத்தைச் சொல்வது நல்லது.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன்.

பருத்தித்துறையில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

வடக்கு மாகாண முதலமைச்சர் கூட்டமைப்பில் இருந்து வெளியேறித் தனித்துக் கட்சி அமைத்தோ அல்லது வேறு கட்சியில் இணைந்தோ அடுத்த தேர்தலில் போட்டியிட்டால் கூட்டமைப்புக்கு அது தாக்கத்தை ஏற்படுத்துமா? என ஊடகவியலாளர் ஒருவர் சுமந்திரனிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்றைய பத்திரிகைகள் சிலவற்றில் சமஷ்டி அரசமைப்பு எங்களுக்கு தேவையில்லை என்று நான் காலியில் சொன்னேன் எனத் தலைப்புச் செய்திகள் பிரசுரமாகியிருக்கின்றன. ஓரிரு பத்திரிகைகள் செய்தியை வெளியிட முன்னர் என்னோடு பேசியிருந்தார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கை சமஷ்டிக் கொள்கை. சமஷ்டி குறித்து நாங்கள் ஒரு நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாக– கிரமமாக – எடுத்திருக்கிறோம். ஆகையால் சமஷ்டி வேண்டாம் என்று நான் சொன்னேன் எனச் செய்தி வந்திருந்தாலும் அது குறித்து என்னிடத்தே கேட்டுப் பிரசுரித்திருப்பது நன்றாக இருந்திருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாகச் சில ஊடகங்கள் என்னிடம் அது தொடர்பில் கேட்காமல் அப்படியே பிரசுரித்திருக்கின்றார்கள். ஆகையால் இதைத் தெளிவாக விளக்கவேண்டியதொரு தேவை ஏற்பட்டிருக்கின்றது.

### புதிய அரசமைப்பின் வெற்றிக்குப் பிரச்சாரம்

புதிய அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமாகவும், புதியதொரு அரசமைப்பு நாட்டுக்கு அத்தியாவசியம் என்று மக்கள் மத்தியிலே ஒரு பிரசாரமாகவும் தென்பகுதியில் பல்வேறு பிரதேசங்களில் தொடர்ச்சியாகக் கூட்டங்கள் நடந்துவருவது தமிழ் மக்களுக்குத் தெரியாத அல்லது அவ்வளவு பரிச்சயமில்லாத விடயமாக இருந்து வருகிறது. இதற்கு அடிப்படையான காரணம் தமிழ் ஊடகங்கள் இதனை இதுவரை பெரிதாகப் பிரசுரித்திருக்கவில்லை. இன்று வந்த செய்தியில் இருந்தாவது இப்படியொன்று தொடர்ச்சியாக நடந்து வருகின்றதென்பதை முதற்பக்கத்தில் போடுவதற்கு உதவியாக இருக்கிறது. அந்த வகையில் அது நல்ல விடயம்.

காலியில் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னர் நடந்த இந்தக் கூட்டம் அரசமைப்பு முன்னெடுப்பின் ஏழாவது கூட்டமாகும். அதற்கு முன்னர் சம்மாந்துறையில் நடந்திருக்கிறது. அது ஒன்றுதான் தமிழ்ப் பிரதேசத்தில் நடந்த கூட்டம். மிகுதி ஆறு கூட்டங்களும் சிங்களப் பிரதேசங்களிலே நடைபெற்றிருக்கின்றன. இதைப் பழைமையான இடதுசாரிக் கட்சிகள் சில முன்னெடுத்துச் செய்கின்றன. இந்தக் கூட்டங்களில் அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் எல்லாக் கூட்டங்களிலும் பங்குபற்றுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் தான். அதேநேரம் ஓரிரு கூட்டங்களிலே ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களும் கலந்து பேசியிருக்கின்றார்கள். இதனுடைய கருப்பொருள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி வெற்றி பெறவேண்டும் என்பதே.

இந்த அரசமைப்பு தொடர்பில் குறிப்பாகச் சிங்கள் மக்கள் மத்தியிலே விளக்கங்களை எடுத்துச் சொல்லி இதில் உள்ள முக்கிய பிரச்சினைகளான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல் ஆகிய இரண்டு விடயங்களையும் கூடுதலாக முன்னிறுத்தி இந்த அரசமைப்பு மாற்றம் வெற்றி பெற வேண்டுமென்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

ஜே.வி.பி. 20 ஆவது திருத்தத்தை முன்வைத்திருந்தாலும் கூட எல்லாக் கூட்டங்களிலும் முதலாவது தெரிவு புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதே என்றும், அந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமாக இருந்தால் தாங்கள் 20 ஆவது திருத்தத்தைக் கைவிடுவோம் என்றும் தெளிவாகச் சொல்லி வருகின்றார்கள்.

நாங்களும் எங்கள் நிலைப்பாடாக 20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவு என்று கூறியிருக்கிறோம். ஏனென்றால் எங்கள் கொள்கையின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரமுறை ஒழிக்கப்படவேண்டும். ஆனால் அது மட்டும் செய்வதனால் இந்த நாட்டில் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. ஆகவே அடிப்படையான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒரு புதிய அரசமைப்பினூடாக இடம்பெறவேண்டும். ஆகையினால் புதிய அரசமைப்பு உருவாகவேண்டும் என்ற எங்கள் நிலைப்பாட்டை எடுத்துச் சொல்லி வருகின்றோம்.

### இடைக்கால அறிக்கையில் சமஷ்டியின் குணாதிசயம்

இதனை நாங்கள் சொல்லும் போது இடைக்கால வரைவில் உள்ள விடயங்களையும் இப்பொழுது இடைக்கால வரைவில் இருப்பது ஒரு மாதிரி வரைவாக நிபுணர்களால் முன்வைக்கப்பட்டி ருக்கும் விடயங்களையும் சொல்லி வருகின்றோம். அதில் சமஷ்டி என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்படவில்லை. அதே போன்று ஒற்றையாட்சி என்ற சொல்லும் உபயோகப்படுத்தப்படவில்லை. இவை, எல்லோருக்கும் தெரிந்த விடயம். இவை குறித்து பல தடவைகளில் அதாவது நூற்றுக்கணக்கான தடவைகளில் நானே தமிழ்ப் பிரதேசங்களில் தமிழில் விளக்ககங்களை சொல்லியிருக்கிறேன்.

அதற்கமைய சமஷ்டியின் அடிப்படைக் குணாதிசயங்கள் இரண்டைச்சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அது இடைக்கால அறிக்கையிலே உள்ளது. இப்பொழுது மாதிரி வரைவிலும் இருக்கிறது. ஆனால் சமஷ்டி என்ற வார்த்தையைக் குறிக்கும் பெயர்ப்பலகை தேவையில்லை என்பது எங்கள் நிலைப்பாடு. இதற்கான பல சர்வதேச முன்னுதாரணங்களையும் நாங்கள் சொல்லியிருக்கின்றோம். ஆனால் ஒற்றையாட்சி முறையாக இது இருக்கமுடியாது என்பது எங்கள் திடமான நம்பிக்கை.

இந்த வேளையில் சற்று சரித்திரத்தையும் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். தந்தை செல்வா கைச்சாத்திட்ட பண்டா– செல்வா ஒப்பந்தத்திலும், சமஷ்டி என்ற வார்த்தை இருக்கவில்லை. தந்தை செல்வா கைச்சாத்திட்ட டட்லி–செல்வா ஒப்பந்தத்திலும் சமஷ்டி என்ற வார்த்தை இருக்கவில்லை. 2000 ஆம் ஆண்டு சந்திரிக்கா அம்மையார் கொண்டு வந்த புதிய அரசியல் நகலிலும் சமஷ்டி என்ற வார்த்தை இருக்கவில்லை. ஆனால் ஒற்றையாட்சி என்ற வார்த்தை விலக்கப்பட்டிருந்தது. அப்படியான ஒழுங்கு முறைகளுக்குள்ளால் தான் நாங்கள் கடந்து வருகின்றோம்.

### அரசமைப்பைப் பார்த்து மக்கள் பயப்படக்கூடாது

இந்த அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமான நாடாளுமன்றில் பிரேரணை முன்வைக்கப்பட்ட போது, 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், சமஷ்டி என்று சொன்னால் தெற்கிலுள்ளவர்கள் பயப்பிடுகின்றார்கள், ஒற்றையாட்சி என்று சொன்னால் வடக்கில் இருப்பவர்கள் பயப்பிடுகின்றார்கள். ஆகவே ஒரு நாட்டின் அரசமைப்பானது மக்கள் பார்த்துப் பயப்படுகின்ற ஆவணமாக இருக்கக் கூடாது என்று கூறியிருந்தார். ஆகவே நாங்கள் ஒரு நவீன அரசமைப்பை உருவாக்கவேண்டுமென்று ஜனாதிபதி சொல்லியிருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கூற்று எங்கள் இடைக்கால அறிக்கையில் அப்படியே கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே தான் சொற்களில் தங்கியிருந்து குழப்பத்தை விளைவிக்காமல் – பெயர்ப்பலகைகளைப் போட்டு அதனாலே இந்த முயற்சி தோற்கடிக்கப்படாமல் இருப்பதற்காக நாங்கள் சொற்களைத் தவிர்த்து உள்ளடக்கத்தில் ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுமுறையை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம். இது தெளிவாகப் பல தடவைகள் சொல்லப்பட்ட விடயம். இதனைக் கூட்டங்களில் பேசுகின்றபோது சிங்கள மொழியில் மூன்று கூட்டங்களில் உரையாற்றியிருக்கின்றேன்.

இதில் இரத்னபுரியில் உரையாற்றும்போது இந்த நாடு ஒரு நாடாக இருக்கவேண்டுமாக இருந்தால் புதிய அரசமைப்பு தேவை என்றும், தமிழ் மக்கள் ஒரே நாட்டில் வாழ்வதற்கான தங்களுடைய இணக்கப்பாட்டை இதுவரை கொடுத்திருக்கவில்லை என்றும் கூறியிருந்தேன். இதனைக் காலியில் நடந்த கூட்டத்திலும் சொன்னேன். ஆனபடியால் தான் சமூக ஒப்பந்தம் அவசியமானது, நாங்கள் ஒரே நாட்டில் வாழ்வதற்குத் தயார் என்று எங்கள் இணக்கப்பாட்டைக் கொடுப்பதற்கு நிபந்தனையாகச் சொல்வது என்னவெனில், ஒரு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறை ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதே என்றார்.

### பெயர்ப்பலகை வேண்டாம்

காலியில் நடந்த கூட்டத்திலும் சமஷ்டியைப் பற்றிப் பல விடயங்களை நான் சொல்லியிருந்தேன். என்னுடைய பேச்சுக்குப் பிறகு சிங்களத்தில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அப்படியானால் சமஷ்டி அரசமைப்பை மட்டும்தானா நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்கள் என்று சிங்கள மொழியில் கேட்கப்பட்டது. அது என்னுடைய பேச்சின் வெளிப்பாட்டில் இருந்து கேட்கப்பட்ட கேள்வியாகும். நான் வழமையாகச் சொல்லும் பதிலைத்தான் அதிலும் சொல்லியிருந்தேன். அதாவது சமஷ்டி என்ற பெயர்ப்பலகை எங்களுக்குத் தேவையில்லை. அதைத்தான் சொன்னேன். அவ்வாறு சொன்னதை இன்று எல்லா ஊடகங்களும் சமஷ்டி எங்களுக்குத் தேவையில்லை என்று நான் சொன்னேன் எனத் தலைப்புப் போட்டு பிரசுரித்திருக்கிறார்கள்.

ஆகையால்தான் இந்த ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டி எப்பொழுதுமே தொடர்ச்சியாகத் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழிலேயும் சிங்களப் பிரதேசங்களில் சிங்களத்திலும் ஒரே செய்தியைத் தான் நான் சொல்லி வந்திருக்கின்றேன் என்பதை தெளிவுபடுத்துகின்றேன். அதாவது பெயர்ப்பலகை எங்களுக்கு அவசியமில்லை. ஆனால் முன்மொழிந்திருக்கும் வரைவிலே சமஷ்டிக்கான அடிப்படைக் குணாதிசயங்கள் உண்டு. அவை என்ன என்பதைப் பல தடவைகள் நாங்கள் விளக்கியும் இருக்கின்றோம். ஆகவே இந்த விளக்கத்தை ஊடகங்கள் பிரசுரிக்க வேண்டுமென்று தாழ்மையோடு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

### நாடாளுமன்றக் குழு குறித்தும் கூறவேண்டும்

அடுத்ததாக நாடாளுமன்றக் குழு தொடர்பிலும் தெரிவிக்க வேண்டியிருக்கின்றது. அதாவது நாடாளுமன்ற நிதிக் குழுவென்று ஒன்று தற்போதைய நாடாளுமன்றத்திலே புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. பொதுக் கணக்குகள் குழு என்றும் கோப்புகள் கணக்கு குழு என்று இரண்டு குழுக்கள் இருக்கின்றன. அவை இரண்டும் நடந்து முடிந்த கணக்குகளை ஆய்வு செய்யும் குழுக்கள். ஆனால் இந்த நிதிக் குழு என்பது இப்பொழுது வரவு–செலவுத் திட்டத்தை மேற்பார்வை செய்யும் குழு.

அது புதிதாக உருவாக்கப்பட்ட குழு. வரவு–செலவுத் திட்டத்துக்கு முன்னரும் அதன் பின்னரும் நிதி முன்மொழிவுகளை அமுலாக்கம் செய்வதை மேற்பார்வை செய்கின்ற நாடாளுமன்றக் குழு. இந்தக் குழுவின் தலைவராக நான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன். இந்தக் குழு நாடாளுமன்றத்துக்கு வெளியே வேறு மாகாணங்களில் தன்னுடைய அமர்வை வைப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றது. முதலாவது அமர்வு நாளைக்கு ( இன்று) கண்டியிலே இடம்பெறுகிறது. வரவு–செலவுத் திட்டத்திற்கு முன்னதாக மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்து மக்களுடன் கலந்துரையாடும் கூட்டம் தான் நாடாளுமன்ற பொது நிதிக் குழுவின் கூட்டம். அதே நேரத்தில் நாளை 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இரண்டாவது பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

(மிகுதி நாளை)

# சட்டவிரோதமாகத் தொழில் செய்ய மீன்பிடிப் பணிப்பாளர் முழு ஆதரவு

## வடமராட்சி வடக்கு மீனவர் சமாசம் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், செப்.02

வடமராட்சிக் கடற்பரப்பில் சட்டவிரோதத் தொழில் செய்வதற்கு யாழ். கடற்றொழில், நீரியல் வளத்துறைப் பிரதிப் பணிப்பாளரே முழுமையான ஆதரவை வழங்குகிறார் என வடமராட்சி வடக்கு மீனவர் சமாசத் தலைவர் வர்ணகுலசிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடமராட்சிக் கடற்பரப்பில் கடந்த முறை சட்டவிரோதமான முறையில் சுருக்குவலை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 19 பேரையும், அவர்களது படகுகளையும் கடற்படையினர் கைது செய்த போதும், அவர்களைக் கடற்றொழில், நீரியல் வளத்துறைப் பிரதிப் பணிப்பாளர் விடுவித்துள்ளார்.

ஓர் அனுமதிப் பத்திரத்துக்கு ஒரு படகு மாத்திரமே தொழில் செய்ய முடியும். ஆனால் அன்று கைது செய்யப்பட்டவர்களில் ஒரு படகுக்கான அனுமதிப் பத்திரத்தில் பத்துப் படகுகள் தொழில் செய்கின்றன. அது தவிர சிறிய படகுகளுக்கு அனுமதி இல்லாத போதும் அன்று பிடிபட்ட படகுகளில் ஆறு படகுகளுமே சிறிய படகுகளாகும். இவ்வாறு உள்ள போதும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தாமல் பணிப்பாளர் விடுவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் எனக் கூறியபோதும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் விடுவித்துள்ளார்.

இதேபோன்றே கடந்த முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மீன்பிடித்துறை அமைச்சருடனான சந்திப்பில் அனைத்துச் சட்டவிரோத தனியார் நிறுவனங்களையும் வெளியேற்ற அமைச்சர் உத்தரவிட்டிருந்தார். ஆனாலும் இதுவரை எவரும் வெளியேற்றப்படவில்லை. இது தொடர்பாக யாழ். மாவட்டப் பணிப்பாளரைக் கேட்டபோது, தமக்கு உத்தியோகபூர்வமாகக் கடிதம் வரவில்லை எனக் கூறுகின்றார்.

ஆனால் அன்று அமைச்சருடனான சந்திப்பில் இவர் மாத்திரமின்றி கடற்றொழில், நீரியல் வளத்துறைபணிப்பாளரும் இருந்தார். அதன்போதே அமைச்சர் இந்த உத்தரவை பிறப்பித்தார். இந்நிலையில் தமக்கு உத்தியோகபூர்வமான கடிதம் வரவில்லை என கூறுகின்றார் யாழ். பணிப்பாளர்.

இவை தவிர மீனவர்களது படகுகளின் புத்தகங்களை வைத்துக்கொண்டு படகுகளே இல்லாதவர்களுக்கும் எரிபொருள் வழங்குவதாகக் கூறி அதனை விற்று வருமானத்தையும் கொள்ளையிட்டுள்ளார். அத்துடன் நேர்மையாகப் பணியாற்றுகின்ற அதிகாரிகளையும் இடமாற்றம் செய்து எமது பிரதேசத்தில் சட்டவிரோத தொழில் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உதவிவருகின்றார். இவர் சட்டவிரோதத் தொழில் செய்யும் தனியார் கம்பனிகளிடம் விலைபோனவலையே இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்–என்றார். (ஐ-7)

# இந்தியப் பெருங்கடலின் புதிய முத்து துறைமுக நகர்

## சம்பிக்க ரணவக்க பெருமிதம்

கொழும்பில் புதிதாக உருவாக்கப்பட்டுவரும், துறைமுக நகரத்தை இந்தியப் பெருங்கடலின் புதிய முத்து என்று வர்ணித்துள்ளார் பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

சீனமத்தியதொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியப் பெருங்கடலின் புதிதொரு முத்தாகத் துறைமுக நகரம் இருக்கும். இது இந்தப் பிராந்தியத்துக்குப் பொருளாதார வாய்ப்புக்களை கொண்டு வரும்.

துறைமுக நகருக்கு மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் விநியோகங்களை வழங்க இலங்கை அரசு நூறு கோடி டொலர் முதலீடு செய்யும்.

மின்சாரம் மற்றும் குடிதண்ணீரை நாங்களே துறைமுக நகருக்கு விநியோகம் செய்வோம். அதில் அரசு முதலீடு செய்யும்.

துறைமுக நகரத்துக்காக முதலீடு செய்யப்பட்ட நிதியை 10 ஆண்டுகளில் மீளப் பெற்று விட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## இனி இது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரரின் மரண வீட்டில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தங்காலைக்குச் சென்றிருந்தார் அல்லவா? அப்போது நடந்த சம்பவம் இது.

மஹிந்த ராஜபக்ஷவின் மரணமான சகோதரரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்குப் பின்னர் விசாலமான ஹோல் ஒன்றில் மஹிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ போன்றோருடன் அமர்ந்து பொதுவாக உரையாடிக் கொண்டிருந்தார்.

ஜனாதிபதிக்கு தேநீர் வழங்கும்படி சைகை செய்யப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவின் இல்லச் சிப்பந்தி ஒருவர் தேநீரை எடுத்து வந்தார். வெளியில் பாதுகாப்புக்கு நின்ற ஜனாதிபதியின் படைப் பிரிவினர் அந்தச் சிப்பந்தியை வழிமறித்தனர்.

வழமையாக இத்தகைய விடயங்களில் ஒரு Protocol முறைமை – சம்பிரதாயம் – உண்டு.

தேநீர், சிற்றுண்டி போன்றவற்றை முதலில் ஜனாதிபதிக்கு வழங்குவதுதான் அது.

முதலில் தேநீரை ஜனாதிபதிக்குப் பரிமாறுங்கள் என்று சிப்பந்திக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அவர் தலையாட்டி விட்டு உள்ளே சென்றார்.

தேநீர்கிண்ணங்கள் அடங்கிய தட்டை நேரடியாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கொண்டுபோனார் சிப்பந்தி.

மஹிந்தருக்கோ ஒரு மாதிரியாகிவிட்டது. சரியோ, பிழையோ நாட்டின் ஜனாதிபதி விருந்தினராக வந்துள்ளார். அவருக்கு முதல் தேநீரை வழங்காமல் தன்னிடம் வந்து நீட்டுகின்றாரே சிப்பந்தி என்ற எரிச்சல். எனினும், சிரித்துக் கொண்டு தமது தேநீர்க் கிண்ணத்தை எடுத்து அருந்தாமல் ஒரு பக்கத்தில் வைத்துக் கொண்டு "ஜனாதிபதிக்கு வழங்குங்கள்!" என்று சிப்பந்தியை வழிப்படுத்தினார்.

ஜனாதிபதி தேநீர் கிண்ணத்தை எடுத்து, தேநீர் குடிக்கத் தொடங்கிய பின்னர்தான் தமது கிண்ணத்தை அருந்துவதற்கு எடுத்தார் மஹிந்தர். அதுவல்ல விடயம்.

தேநீர் எடுத்துச் சென்ற சிப்பந்தி, தாங்கள் வழிகாட்டியபடி முதலாவது கிண்ணத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கொடுக்கவில்லை என்ற எரிச்சல் அவரது பாதுகாப்புப் படையினருக்கு.

தேநீர் பரிமாறிவிட்டுத் திரும்பி வந்த சிப்பந்தியை வழிமறித்தனர்.

*'ஜனாதிபதிக்கு முதல் தேநீரைக் கொடுக்கச் சொன்னோம். 'ஆம்' என்று தலையாட்டி விட்டு இப்போது மாறிக் கொடுத்திருக்கின்றீரே...?"* – என்று குடைந்தார்கள். விடயம் விளங்காமல் முழுசிய சிப்பந்தி தன்பாட்டில் பதிலளித்தார்.

*"இங்கு வழமையாக விருந்தினருக்குத்தான் முதல் தேநீர் கொடுப்பார்கள். நீங்கள் வழமைக்கு மாறாக ஜனாதிபதிக்கு முதல் தேநீரைக் கொடுக்கச் சொன்னீர்கள். அதனால் வழமைக்கு மாறாக எங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷக்கு தேநீரை வழங்கினேன்."* – என்றார் சிப்பந்தி.

அப்போதுதான் ஜனாதிபதியின் பாதுகாப்புப் படைத்தரப்புக்கு விடயம் விளங்கியது.

தெற்கில் இன்றும் – இன்னும் – பலர் நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் என்றே நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையறாவில் ஒருவர்தான் அந்தச் சிப்பந்தியும் என்பது அவர்களுக்குப் புரிந்தது.

அந்தச் சிப்பந்திக்கு ஒன்றும் சொல்லாமல் விட்டிருந்தால் வந்திருக்கும் விருந்தினரில் முக்கிய மானவருக்கு முதல் தேநீர் கிண்ணத்தை அவர் பரிமாறியிருப்பார்.

*"ஜனாதிபதிக்குக் கொடுங்கள்"* என்று கட்டளையிடப்பட்டதால், தாம் இன்றும் – இப்போதும் – ஜனாதிபதி என்று கருதுபவருக்கு அவர் தேநீரைக் கொடுத்திருக்கின்றார். அவ்வளவுதான்.

இதுதான் இன்றும் தென்னிலங்கைச் சிந்தனைப் போக்கு என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

- மின்னல்-

# வடக்கு முதல்வர் வேட்பாளர் குறித்து சு.க. இறுதி நேரத்திலேயே தீர்மானம்

## கூறுகிறார் அங்கஜன் இராமநாதன்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், செப்.02

"வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தனது ஆதிக்கத்தை முழுமையாகச் செலுத்தும். இதன்போது முதலமைச்சர் வேட்பாளராக நான் களமிறங்குவதா? இல்லையா? என்று இறுதித்தருணத்தில் முடிவு செய்வேன்."

– இவ்வாறு தெரிவித்தார் விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பிரதி அமைச்சரிடம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதுவரை வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படவில்லை. ஆனால் நிச்சயமாக அடுத்த வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது சுதந்திரக் கட்சியில் இருந்து முதலமைச்சர் வேட்பாளர் இறக்கப்படுவார்.

அந்தத் தேர்தலில் சுதந்திரக் கட்சி நல்ல ஒரு போட்டித் தன்மையை வடக்கில் ஏற்படுத்தும். குறிப்பாகத் தற்போதைய நிலைவரங்களின்படி சுதந்திரக் கட்சி மக்களால் வரவேற்கப்படுகின்றது. அந்தக் கட்சி மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்து வருகின்றது.–என்றார்.

கட்சி உங்களை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தினால், அது தொடர்பில் உங்கள் முடிவு எவ்வாறு அமையும் என்று ஊடகவியலாளர்கள் பிரதி அமைச்சர் அங்கஜனிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், அந்த நேரத்தில் அதற்கேற்ற முடிவை எடுப்பேன். இப்போது அமைச்சராக உள்ளபோது மக்களுக்குச் செய்துகொடுக்க வேண்டிய விடயங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த வேலைகளை முடித்துக் கொண்டு தேர்தல் அறிவிக்கப்படும்போது இறுதி முடிவு எடுப்பேன்–என்றார். (ஐ-7)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையைப் பரிந்துரை செய்க!

## பிரிட்டிஷ் எம்.பியிடம் நாடு கடந்த தமிழீழ அரசு எடுத்துரைப்பு



லண்டன், செப்.02

சர்வதேச நீதிமன்றில் இலங்கையை நிறுத்துவதற்கு பிரிட்டன் பரிந்துரை செய்யவேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மக்டொனால் இடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நடந்த இனப் படுகொலை தொடர்பில் பிரித்தானியா மொடேர்ன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மக்டொனாவுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசஉறுப்பினர்களுக்கும் இடையில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசின் விளையாட்டு மற்றும் சமூக நலன் பிரதியமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கம் நெறிப்படுத்தலில் செயற்பாட்டாளரான பொன்ராசா புவலோயன் ஒருங்கிணைப்பில் நுஜிதன் இராசேந்திரம், சொர்ண லிங்கம் யதுர்சன், டக்ளஸ் மெண்டிஸ் அற்புதம், மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்ட இந்தச் சந்திப்பில், இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகள், அரசியல் கைதிகளின் சமூக இணைப்பு , தமிழர் பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், மகாவலி என்ற போர்வையில் வடக்கு நோக்கி ஆக்கிரமிக்கப்படும் தமிழர் நிலப் பகுதிகள் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலும் சர்வதேச நீதிமன்றுக்கு இலங்கையைப் பரிந்துரை செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டது . எதற்காக இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்குப் பரிந்துரைக்க வேண்டும் என்பது பற்றிய மனு கையளிக்கப்பட்டதுடன் ஐ. நா மனித உரிமை சபையினால் கொண்டுவரப்பட்ட 30/1 ,34/1 தீர்மானங்களை எந்தளவிற்கு இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளது என்பது பற்றி ஆராயப்பட்டு அது தொடர்பான அறிக்கையும் வழங்கப்பட்டது.

இவற்றைச் செவிமடுத்த நாடாளுமன்ற உறுப்பினர், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்வதற்கு நாம் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது பற்றித் தெளிவுபடுத்தினார்.

மேலும் நாடு கடந்த அரசால் வழங்கப்பட்ட மனுவில் அதை தாம் ஆதரிக்கிறார் எனக்கையெழுத்திட்டமையுடன் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளில் இந்த விடயம் தொடர்பாகத் தாம் கேள்வி முன்வைப்பார் என உறுதியளித்தார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## விக்கி – சம்பந்தன் தனித் தனி வழி; இனி, சுட்ட மண் என்றும் ஒட்டாது!

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனை, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்வரும் 7 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை கொழும்பில் நேரில் சந்தித்துப் பேசவிருக்கின்றார் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன.**

**அந்தச் சந்திப்பை அடுத்து, கூட்டமைப்புக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி தொடர்பில் ஒரு தீர்வு வரும் – இணக்க நிலை கிட்டும் – என்றெல்லாம் பலரும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.**

**ஆனால், நேற்றுமுன்தினம் மாலையில் நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கும் கருத்துகள் இரு தலைவர்களும் மீண்டும் சேரமுடியாத பிளவு நிலைக்குச் சென்று விட்டனர் என்பதைக் கோடி காட்டுவதாக அமைந்து விட்டது.**

***“2009 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்ட தலைமைப் பாத்திரம் மற்றும் அதன் அணுகுமுறை போன்றவற்றில் அது தோல்வி அடைந்து விட்டது என்றே கூறவேண்டியுள்ளது.”*** **– எனத் தமது உரையில் முதல்வர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருக்கின்றார்.**

**இதனைக் கூறிவிட்டு தொடர்ந்து முதல்வர்** ***“வரலாறு உங்களுக்கு வழங்க முன்வந்துள்ள தலைமைப் பாத்திரத்தை நீங்கள் ஏற்று முன்னெடுக்கத் தயாரா எனத் தமிழ் மக்கள் பேரவையும் மக்களும் நீண்ட காலமாக என்னிடம் கேட்டு வருகின்றார்கள்.”*** **– என்று கூறியுள்ளார்.**

**இந்த இரண்டு வாசகங்களையும் சேர்த்து நோக்கின்ற வாசகர்களுக்கு ஒரு குழப்பம் வருவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது.**

**“2009 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்ட தலைமைப் பாத்திரம் மற்றும் அணுகு முறையில் அது தோல்வி கண்டு விட்டது” – என்ற கருத்து தமிழ் மக்கள் பேரவையின் கருத்தாக மேற்கோள் காட்டப்பட்டு முதல்வரினால் முன்வைக்கப்பட்டதா அல்லது அது முதல்வரின் தீர்மானமாக முன்வைக்கப்பட்டதா என்பதுதான் அந்தக் குழப்பம்.**

**அந்த வாசகம் – அதாவது கூட்டமைப்புத் தலைமை தோல்வி கண்டு விட்டது என்ற கருத்து – முதல்வர் விக்னேஸ்வரனினால் முன்வைக்கப்பட்டதாக அர்த்தப்படுத்தியே பல ஊடகங்களும் (‘காலைக்கதிர்’ உட்பட) செய்தி வெளியிட்டிருக்கின்றன. நோக்கர்களின் புரிதலும் கூட அப்படித்தான் பெரும்பாலும் அமைந்திருக்கின்றது.**

**அதுதான் உண்மை என்றால், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறக் கூடிய சம்பந்தன் – விக்னேஸ்வரன் சந்திப்பு அர்த்தமற்றது, இணக்கம் தரக் கூடியதல்ல என்ற தீர்மானத்துக்கு இப்போதே வந்துவிட முடியும்.**

**2009 மே மாதத்தில் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவுறுத்தப்பட்டபோது, விரும்பியோ, விரும்பாமலோ நமது வரலாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு புதிய அரசியல் பாத்திரத்தை வழங்கி நின்றது.**

**அது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற குடையின் கீழ் கொள்கை ரீதியாக ஒன்றிணைந்த தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் அரவணைத்துக் கொண்டு, தமிழ் மக்களை வழிநடத்தும் தலைமைப் பொறுப்புத்தான்.**

**அந்தக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பு அன்று தொட்டு இப்போது வரை இரா. சம்பந்தன் வசம்தான் உள்ளது.**

**அன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைமைத்துவம் என்ற வரலாற்றுப் பொறுப்பில் கூட்டமைப்பின் தலைமை தோல்வி கண்டு விட்டது என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறுவாரானால் அது நேரடியாக சம்பந்தன் மீதான குற்றச்சாட்டாகவே அமையும் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.**

**சம்பந்தனின் தலைமை தோல்வி கண்டு விட்டதாக பகிரங்கக் குற்றச்சாட்டை முதல்வர் விக்னேஸ்வரன் முன்வைத்த நிலையில் சம்பந்தன் – விக்னேஸ்வரன் சந்திப்பில் இணக்க நிலையோ, சுமூகப் போக்கோ ஏற்படும் என்று கருதுவது அர்த்தமற்றது.**

**தவிரவும், தமிழ் மக்கள் பேரவையில் உரையாற்றிய முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமக்கு முன்னால் நான்கு தெரிவுகள் உள்ளன என்று கூறுகின்றார். அவற்றை வரிசைப்படுத்தியும் குறிப்பிடுகின்றார்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடர்ந்திருப்பதோ அல்லது அதனுடன் சேர்ந்து இணக்க அரசியல் செய்வதோ இந்த நான்கு தெரிவுகளிலும் இல்லவே இல்லை.**

**அப்படியானால் கூட்டமைப்புடன் முதல்வர் இனியும் இணக்க அரசியல் செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது தெளிவானதுதானே...!**

**முதல்வரின் இந்த நான்கு தெரிவுகளையும், கூட்டமைப்பின் தலைமை தோல்வி கண்டு விட்டது என்ற அவரது கருத்தையும் நோக்குவோமானால், முதலமைச்சர் இனிமேலும் கூட்டமைப்புடன் இணக்கப்படுவதற்கான சாத்தியம் அடியோடு அருகிப் போய்விட்டது – அறவே அற்றுப் போய்விட்டது – என்பது பளிங்கு போல் தெளிவாகத் தோற்றும்.**

**முதல்வர் விக்கியும் கூட்டமைப்பின் தலைமையும் சுட்ட மண்ணே. இனி அந்த இரு தரப்புகளும் ஒட்டுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றே தோன்றுகின்றது.**

# படுகொலைகளுக்கு பின்னால் அரசின் மறைமுகங்கள் உண்டு

## சிறீதரன் எம்.பி. காட்டம்

கிளிநொச்சி, செப் 02

மக்கள் கொலைகளுக்கு பின்னாலும் பெண்களின் வன்கொடுமைகளுக்குப் பின்னாலும் அரசின் மறைமுகங்கள் இருப்பது தெளிவாகத் தெரிகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் படுகொலைக்கு நீதி கோரி முறுகண்டி மற்றும் இந்துபுரம் கிராம மட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முறுகண்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டியில் பிறந்து வசித்து வந்த நித்தியகலா கிளிநொச்சி மாவட்டத்தில் உடலமாக மீட்கப்பட்டார். இதைபோல பல செய்திகள் கடந்த காலங்களில் நாங்கள் பார்க்கக்கூடியதாக இருந்தன. வித்தியாவில் தொடங்கி சேயா, றெஜினா, நித்தியா என்று பெண்கள் மீதான படுகொலைகளும் வன்முறைகளும் ஈவிரக்கமற்ற மனிதநேயத்தை நேசிக்காதவர்களுடைய மனித குலத்திற்கு எதிரான குற்றக்கொலையை நாங்கள் அவதானிக்க முடிந்துள்ளது.

இந்த நாட்டில் ஒரு திறந்த வெளிச்சிறைச்சாலையில் நூறு வீதமும் படையினரின் வலைப் பின்னலுக்குள் எங்கள் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

குவிக்கப்பட்டுள்ள பொலிஸார், அதிரடிப்படை, கடற்படை, விமானப்படை என்று எங்கு பார்த்தாலும் புலனாய்வாளர்களின் கண்காணிப்புகளுக்கு மத்தியில் இந்த மக்கள் வாழ்கின்ற சூழலில் பெண்கள் இளைஞர்கள், சிறுமிகள் மீதான தாக்குதல்கள் வன்முறைகள் ஏன் நடைபெறவேண்டும், போர் நடைபெற்ற பிற்பாடு போரில் ஈடுபட்ட சமூகத்தை கேலிக்குரியவர்களாக, காட்டுமிராண்டிகளாக காட்டுதவற்கு – மனிதநேயம் அற்றவர்களாக காட்டுவதற்கு அரச படைகளே பின்புலத்தில் இருந்து இயக்குவது மிக தெளிவாகத் தெரிகின்றது.

அரசு நினைத்திருந்தால் இந்த விடயங்கள் நடைபெறாமல் தடுத்திருக்கலாம். திருமுறிகண்டி பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை என்றால் அதற்குப் பின்னணியில் என்ன காரணங்கள் இருக்கின்றன?

மக்கள் கொலைகளுக்குப் பின்னால், பெண்களின் வன்கொடுமைகளுக்குப் பின்னால் அரசின் மறைமுகங்கள் இருக்கின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

ஆகவேதான் இந்த நாட்டில் ஒரு சுயாட்சியை, எங்களை நாங்கள் ஆளுகின்ற ஓர் ஆட்சிக்காக நாங்கள் பேசுகின்ற காரணங்களும் நியாயத்தன்மைகளையும் உங்களால் புரிந்துகொள்ளமுடியும். இதற்காகத்தான் நாங்கள் போராடுகின்றோம். அரசோடு பேசுகின்றோம், முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

ஆனால் இவ்வளவும் நடைபெறும் காலத்தில் பெண்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளை வன்மையாக கண்டிக்கின்றோம். உரிய இடங்களில் நடைமுறைகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம்.

தொடர்ந்தும் இவ்வாறான துன்பங்கள் நடைபெறக்கூடாது. சகோதரிகள் எங்கள் மண்ணில் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்கவேண்டும்.

வெறுமனவே நாங்கள் குற்றம் புரிபவர்கள் மீது கவனம் செலுத்தாமல் பெண்களாகிய நாங்களும் ஆண்களும் கூட கவனம்கொள்ள வேண்டும். எங்களுடைய பாதுகாப்பில் நாங்களும் சரியாக இருக்க வேண்டும். விளிப்பாக இருக்க வேண்டும்.

இந்த இடங்களில் கஞ்சா போதைவஸ்து கூட எம்மவர்கள் தானே கொண்டு வருகின்றார்கள். இதற்கு எம்மவர்கள்தான் காரணமாக இருக்கின்றார்கள். கசிப்பு யார் விற்றார்கள்? இதனைத் தடுக்க வேண்டிய கடமையும் கடப்பாடும் யாருக்கு இருக்கின்றது? நாங்கள் விழிப்படைந்தால் இலங்கை இராணுவம் அல்ல, பொலீஸ் அல்ல, இலங்கையின் எந்தப் படைகளும் எங்களுக்குச் சவாலாக இருக்க முடியாது. விழிப்பாக இருங்கள். தெளிவாக இருங்கள். நித்தியா போல இன்னும் ஒரு நித்தியாவிற்கு நடக்கக்கூடாது. இது கடைசியாக இருக்கவேண்டும்.

நாங்கள் நாங்களாக வாழ்வதற்கு எங்கள் உரிமைகளை பெற்றக்கொள்வதற்கு ஒரு அணியாக, ஓர் இனமாக நாங்கள் வாழ்கின்ற சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இருப்பவர்கள் இருந்தால் இவ்வாறு நடந்திருக்குமா என்ற வாசகத்தினை நாங்கள் பார்க்கின்றபோது உண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த மண்ணில் இருந்திருந்தால் இப்பொழுதே அந்தக் குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டிருப்பான். ஆனால் ஏன் அவர்கள் இருக்கின்றார்கள் என்று நினைத்துக்கொண்டு எங்களால் சரியாக நடக்கக்கூடாது? நாங்கள் ஏன் நீதியாக நடக்கக்கூடாது? நீதியான முறையில் நாங்கள் ஏன் பயணிக்கக்கூடாது?

ஆகவேதான் கடந்த கால வரலாறுகளை நினைக்கின்ற நாங்கள், அவ்வாறான வாழ்க்கைக்குள் வாழ்ந்தவர்கள், நீதியோடும் நேர்மையோடும் வாழ்ந்தவர்கள், அந்த வாழ்க்கையை நாங்கள்தான் கட்டி எழுப்பவேண்டும். உன்னதமான அந்த உணர்வுகளோடு ஒரு நித்தியா மீது நீங்கள் சத்தியம் செய்துகொள்ளுங்கள் – என்றார். (ஐ)

# அடுத்த தேர்தலில் வெல்வதற்காகவே ஜனாதிபதியை விமர்சிக்கும் கூட்டமைப்பு

## அங்கஜன் இராமநாதன் குற்றச்சாட்டு

தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றத் தவறியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியே ஜனாதிபதி மீது விமர்சனங்களை முன்வைத்து அடுத்த தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற முயற்சிக்கின்றது என்று விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கூட்டமைப்பின் ஆதரவில் ஆட்சிப்பீடம் ஏறிய நல்லாட்சி அரசைத் தேர்தலில் வாக்குப் பெறுவதற்காகக் கூட்டமைப்பே விமர்சிப்பது நகைப்புக்குரியது என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சரிடம் அண்மைக்காலமாகக் கூட்டமைப்பு அரசின் மீது விமர்சனங்களை முன்வைத்து வருவது தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மைத்திரிபால சிறிசேனவை தெரிவு செய்தவர்கள் தமிழ் மக்கள். அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவாக இருந்து வந்தது. ஆனால் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சியை விமர்சித்து வருகின்றது.

விமர்சனங்களை முன்வைப்பது என்பது அரசுக்கு மேலும் அழுத்தங்களைக் கொடுத்து, மக்களுக்கு தேவையானவற்றை அல்லது, மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக இருந்தால் அந்த விமர்சனங்கள் வரவேற்கத்தக்கதாக இருக்கும். ஆனால் அடுத்த தேர்தலுக்குத் தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காகக் கூட்டமைமைப்பு அரசை விமர்சனம் செய்வதை ஏற்க முடியாது.

தற்போது உள்ள நல்லாட்சி அரசில் அங்கம் வகிப்பவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியுமே. இதுமட்டுமல்லாமல் நல்லாட்சி அரசை ஆட்சியில் ஏற்றுவதற்கு கூட்டமைப்பு பங்காளியாக இருந்துள்ளது. இருப்பினும் கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலர் தனியே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மட்டும் விமர்சிக்கின்றார்கள். தமது அரசியல் தந்திரம் காரணமாகவே அவர்கள் ஜனாதிபதியை மட்டும் விமர்சிக்கின்றார்கள்.

நல்லாட்சியில் குறை இருந்தால் இரு கட்சியினருக்கும் அதில் பங்கு உண்டு. கூட்டமைப்புக்கும் அதில் பங்கு உண்டு. இன்னும் ஆட்சி முடிவதற்கு ஒன்றரை வருடங்கள் உள்ளன. அதற்குள் மக்களுக்குச் செய்ய வேண்டியதை செய்ய வேண்டும். ஜனாதிபதியின் மீது தனியே கூட்டமைப்பு விமர்சனங்களை முன்வைப்பது அவர்களின் அடுத்த கட்டத் தேர்தல் களத்தை எதிர்கொள்வதற்கான யுத்தியாகவே இருக்கும் – என்றார். (ஐ –7)

### நாளை

**03.09.2018**
**திங்கட்கிழமை**
நட்சத்திரம் : ரோகிணி மா.5.44 வரை
திதி: அட்டமி பி.ப. 3.058 ரை
சுபநேரம் : 12.05 – 1.35 வரை
இராகுகாலம் : 7.35 – 9.05 வரை

# ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு என்ற சந்தேகத்தில் இலங்கை அமைச்சரின் மருமகன் ஆஸியில் கைது

ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில், இலங்கையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் ஆஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டுள்ளார். மொஹமட் கமர் நிலார் நிஸாம்டீன் எனும் 25 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபாவின் மருமகன் என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர், கலாநிதி பட்டப்படிப்பிற்காக ஆஸ்திரேலியா சென்றிருந்தவர் என்றும், ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்தவர் என்றும் தெரிய வருகிறது.

இந்த இளைஞரின் மடிகணினியில் ஐ.எஸ். அமைப்பினால் உந்துதலளிக்கும் வகையிலான விடயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. தீவிரவாத நடவடிக்கைக்குத் துணைபோகும் வகையிலான விடயங்களைச் சேகரித்தல், அது தொடர்பிலான ஆவணங்களைத் தயாரித்தல், அதில் ஈடுபடுதல் அல்லது அதற்கு உதவியாக இருத்தல் எனும் சட்டத்தின் கீழ், அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவரது கணனியில், தீவிரவாதத்திற்குத் துணைபுரியும் வகையில், இடங்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பிலான முக்கியமான பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன என அந்நாட்டுப் பொலிஸார் ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டுள்ளனர். மனோதத்துவ நிபுணர்கள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் மூலம், குறித்த தகவல்களில் உள்ள விடயங்கள் குறித்துத் தாங்கள் ஆராய்ந்து வருகின்றனர் எனவும், தகவல் சேகரிக்கப்பட்டுள்ள இடங்கள், மிக முக்கியத்துவம் வாய்ந்தவை எனவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஸெட்லேண்டில் (Zetland) அவர் தங்கியிருந்த இடத்தை நேற்றுக் காலை சோதனையிட்டபோது, பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களைத் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டுகள் மிகவும் முக்கியமானவை என்பதோடு, மிகப் பாரதூரமானவை எனவும், அவற்றைக் குறைவாக மதிப்பிட முடியாது எனவும் ஆஸ்திரேலிய சமஷ்டிப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மாணவருக்கான வீசா அனுமதியின் அடிப்படையில் ஆஸ்திரேலியா சென்றுள்ள நிஸாம்டீனின் வீசா, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நிறைவடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நிஸாம்டீன் ஆஸ்ரேலியாவில் இதுவரை எவ்வித குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை எனவும், ஐ.எஸ். அமைப்பிலோ அல்லது எவ்வித தீவிரவாத அமைப்புகளுடனோ தொடர்புட்டதற்கான எவ்வித சான்றுகளும் இல்லை எனவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும் இவ்விடயத்தால் பொதுமக்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பிலான வழக்கு உள்ளூர் நீதிமன்றமான வெவர்லி (Waverley) நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அந்த வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் 24 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கிறார் என நீதிவான் அறிவித்துள்ளார்.

வழக்கு தொடர்பில் நிஸாம்டீனினால் பிணை கோரப்படாத போதிலும், பிணை வழங்க முடியாது என உத்தியோகபூர்வமாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில் ஒக்டோபர் 24 ஆம் திகதி வரை, எட்டு வாரங்களுக்கு நிஸாம்டீன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குற்றத் தீர்ப்புக்கு எதிராக ஞானசாரர் உயர் நீதிமன்றத்துக்குச் செல்கின்றார்



கொழும்பு, செப். 02

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்து வழங்கிய குற்றத் தீர்ப்பு மற்றும் அத்தீர்ப்புக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டை ஏற்க மறுத்து மேன்முறையீட்டு நீதிமன்று நேற்று முன்தினம் வழங்கிய உத்தரவு ஆகியவற்றை எதிர்த்து தேரர் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் மேற்படி உத்தரவுகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் விசேட மேன்முறையீடொன்றை முன்வைக்கப்போவதாக தேரரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.


ஞானசார தேரருக்கு சிறைத் தண்டனை விதிக்கும் தீர்ப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மேன் முறையீட்டு மனுவை, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையன்று நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியமையை அடுத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு நிராகரிக்கப்பட்டால் அதனை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஞானசார தேரருக்கு எதிரான தீர்ப்பு கடந்த ஓகஸ்ட் 8 ஆம் திகதி நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்டது. இந்த தீர்ப்புக்கு எதிராக 42 நாள்களுக்குள் முறைப்பாட்டை முன்வைக்க வேண்டியிருந்தது. தற்பொழுது மேன் முறையீட்டுக்கு 20 நாள்களே செலவாகியுள்ளன.

தேவையான சகல ஆவணங்களையும் தயார் செய்து கொண்டு அடுத்த வாரத்துக்குள் உயர் நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் தேரரின் சார்பில் ஆஜராகியுள்ள சட்டத்தரணி மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

# கந்தபுராண எழுச்சி அறிநெறி விழாவின் இன்றைய நிகழ்வுகள்



இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்ற தொனிப்பொருளில், நல்லூர், கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா நிகழ்வுகள் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்துவருகிறது.

அந்தவகையில், பதினெட்டாம் நாள் நிகழ்வுகள், இன்று ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் குழுவினரின் பஜனை நிகழும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, தெல்லிப்பளைப் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், சைவப்புலவர் செ.கந்த. சத்தியதாசனின் ஈசனை இகழ்ந்தோர்பால் இருப்பாரோ? எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருஎக நுண்கலைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் நிருத்தியாஞ்சலி ஆகியவை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள்ளன.

# புதிய வடிவமைப்புடன் 'சின்மய நாதம்' இன்று வெளியீடு

யாழ் சின்மயா மிஷனின் காலாண்டுச் சஞ்சிகையான சின்மய நாதம் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, புதிய பரிணாமத்தில் புதிய வடிவில், இன்று நல்லைக்கந்தப்பெருமானின் திருக்கார்த்திகைத் திருவிழாவாகிய இன்று ஞாயிறு மாலை 7.30 மணியளவில் இல 700, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சின்மயஞானவேல் ஆச்சிரமத்தில் வெளியிடப்படவிருக்கின்றது. இத்துடன் சின்மயா மிஷன் மாதாந்த செய்திமடலும் வெளியிடப்படும்.

செல்வி. வி.சதுர்த்திகாவின் இறைவணக்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து செல்வன்.க.அபினாத் வரவேற்புரையை வழங்க இதழாசிரியர் திருமதி. ஓம்சக்தி யசோதன் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்து தலைமையுரையை ஆற்றுவார். யாழ் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்கள் ஆசியுரை வழங்குவார்.

வெளியீட்டு உரையை யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி. யாழினி மதீபன் நிகழ்த்துவார்.

முதற்பிரதியை சுவாமிஜிடம் இருந்து நல்லூர் இலங்கை வங்கி முகாமையாளர் தங்கராசா சுதாகரனி பெற்றுக்கொள்வார். செல்வி.ரீ. கிருஷ்ணப்பிரியாவின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெறும்.

அனைவரையும் யாழ் சின்மயா மிஷன் அன்புடன் அழைக்கின்றது.

# இலங்கை இராணுவம் நடத்திய பாதுகாப்புக் கருத்தரங்கு பூர்த்தி



கொழும்பு, செப்.02

இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட 8ஆவது கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு நேற்று முன்தினம் மாலை நிறைவடைந்தது.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் வியாழனன்று 8 ஆவது கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்திருந்தார்.

நேற்று முன்தினமும் நேற்றும் நடந்த இந்தக் கருத்தரங்கில் பல்வேறு நாடுகளின் இராணுவ, பாதுகாப்பு நிபுணர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கில், 115 வெளிநாட்டு பாதுகாப்பு நிபுணர்களும், சிறிலங்கா படைகளைச் சேர்ந்த 800 பேரும் பங்குபற்றினர்.

வெள்ளிமாலை இலங்கை இராணுவத்தளபதியின் உரையுடன் இந்தக் கருத்தரங்கு நிறைவடைந்தது.

இந்தக் கருத்தரங்கில் சமூக ஊடகங்கள் மற்றும் அதனைச் சார்ந்த தரப்புகளின் அச்சுறுத்தல்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமூக ஊடகங்கள் பாதுகாப்புக்கு மறைமுகமான அச்சுறுத்தலாக மாறியிருக்கின்றன எனக் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இன்று

நல்லூர், செப்.02

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் உற்சவத்தை யொட்டி, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு, இன்று மாலை 6.45 - 8.15 வரை நடைபெறும்.

இளங்கலைஞர் மன்ற மாணவிகளின் வயலினிசை –

வயலின் – சிவசுப்பிரமணியம் பிருந்துஜா, பிரிந்தாபரன் தனயாயினி, தவகுமாரன் தாட்சாயினி, புஸ்பராசா தாரணி, மிருதங்கம் – பி.ஞானவேல்.

இசைக்கச்சேரியில்–

பாட்டு:– பத்மநாதன் சிவமைந்தன் வயலின்:– அ.ஜெயராமன், மிருதங்கம் –ஞா.வசந், முகர்சிங் – ஜெ.சாரங்கன். (இ)

காலைக்கதிர்
Kalaikkathir



# இன்று 52 ஆவது பீடாரோஹண விழாக் காணும் நல்லை ஆதீனம்



தெய்வத் தமிழ்ச் சுடர்'
இராசையா ஸ்ரீதரன்

இலங்கை திருநாட்டில் அமைந்திருக்கும் ஒரேயொரு ஆதீனம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமாகும். இந்தச் சிறப்பு மிக்க ஆதீனம் இன்று 52 ஆவது பீடாரோஹண விழாக் காண்கின்றது. யாழ்ப்பாணத்து நல்லூரிலே கந்தன் ஆலய மேற்கு வீதியிலே அழகாக அமைந்திருக்கின்ற இந்த நல்லை ஆதீனம் 1966 இல் ஆரம்பிக்கப்பட்டது.

“மணியாகவதர்” என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட கதாப் பிரசங்கியான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆதீனம் ஒரு புனிதத்துடன் கூடிய புண்ணிய அறப்பணியாற்றும் ஓர் அற்புத நிறுவனமாகும்.

இந்தியாவிலேயுள்ள மதுரை ஆதீனத்துக்குச் சென்று கா கஷாயம் பெற்றுத் துறவு பூண்டு தம்பிரான் சுவாமிகளாகி இலங்கைக்கு வந்து சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பாடுபடுகின்ற இந்த நல்லை ஆதீனம் உருவாக்கப் பெற்றது.

தம்முடைய தொண்டையினாலேயே தொண்டாற்றிய கதாப்பிரசங்கம் செய்தே சைவம் வளர்த்தவர் சுவாமிகள். இவருடைய கணீரென்ற குரலினாலே அடியார்கள் அனைவரும் ஆனந்த பரவச நிலையிலே கட்டுண்டு மயங்கியே இருப்பர். இவரைப் போலக் கதாப்பிரசங்கம் செய்ய ஒருவருமே இல்லை. இலங்கையில் மாத்திரமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர்,லண்டன் முதலாய இடங்களிலும் கதாப்பிரசங்கம் செய்து புகழ்பூத்த மேதையாகத் திகழ்ந்தவர் இவர்.

இன்றைய பீடாரோஹண விழாவில் முற்பகல் 10 மணியளவில் ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் பூசை



வழிபாடுகள் இடம்பெறும். திருமுறை ஓதல், மங்கள இசை, வேதபாராயணத் தின் பின்னர் கொலுப்பூசையாகி பட்டணப் பிரவேசம். கோயில் வீதிவலம் நிகழ்ந்து விழாவுக்கு வருகை தந்த அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

இப்போது ஆதீன முதல்வராக இருக்கின்ற வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள் சாந்தமே உருவானவர். தம்முடைய குருநாதர் நல்லை குருமணியின் வழி நின்று திருஞான சம்பந்தர் ஆதீனத்தை நல்ல முறையில் நடத்திச் செல்கின்றார்.

எங்கெல்லாம் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் அவருடைய அருளாசியுரை இருக்கும். நாட்டு மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு ஓர் அருமையான வழிகாட்டியாகத் திகழும் சுவாமிகள் அறிவுரையும் அர்த்தமுள்ள வாழ்வியல் நெறிமுறைகள் பற்றியும் அழகாக எடுத்துக் கூறி நல்வழிப்படுத்துவார்.

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவ நாள்களில் ஆதீனத்திலே பல்வேறு சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். விழாக் காண வரும் அடியார்களுக்கு தாக சாந்திக்காக தண்ணீர்ப் பந்தல் சேவையும் நடைபெறுகிறது. மதிய வேளை அன்னதானமும் வழங்கப்படும்.

மேலும் ஆதீன கலா மண்டபத்தில் தினசரி கலை நிகழ்வுகள், சொற்பொழிவு நிகழ்ச்சிகள், சங்கீத இசைக் கச்சேரிகள் இடம்பெறுவது சிறப்பம்சமாகும். அத்துடன் நல்லைக் கந்தப் பெருமானுடைய திருவிழாவிலே அவரை வரவேற்று நிறைகுடம் பூரண கும்பம், குத்துவிளக்கேற்றி மாவிலை தோரண அலங்காரத்துடன் அர்ச்சனை வழிபாடியற்றும் பக்தி பூர்வமான நிகழ்வும் நடைபெறுகின்றது.

இந்த நல்லை ஆதீனத்தை ஸ்தாபித்ததன் நோக்கம் என்னவெனில் இலங்கை மணித் திருநாட்டில் இந்தியாவிலிருப்பது போல ஆதீனம் அமைக்கப் பெற்று சைவத்தின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும் என்பதேயாகும். அந்த வகையில் இங்கு வாழும் மக்கள் நன்னெறி நின்று மகிழ்ச்சியுடன் கூடி மங்களகரமான நல்வாழ்க்கையிற் திளைத்து முருகன் அருளாலே சீரோடுஞ் சிறப்



போடும் வாழ்ந்து ஆதீனத்தின் அறப்பணிச் செயற்பாடுகளுக்கு நல்லாதரவு நல்கி வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்து ஒத்துழைப்பு வழங்குவதே தலையாய கடனாகும். *



# கோவில் பிரசாதமாக தங்கக் காசுகள்!

கோவில் என்றாலே நம்முடைய நினைவுக்கு முதலில் வருவது அது எந்த மதத்துக்குக் கடவுளின் கோவில் என்பது தான். அதைத்தாண்டி, நமக்கு ஞாபகம் வருவது அந்த கோவிலின் அமைப்பு, அங்கு கொடுக்கப்படும் பிரசாதமும் தான்.

பிரசாதம் சில கோவில்களில் திருநீறு, பூக்கள், அம்மன் கோவிலாக இருந்தால், மஞ்சள், குங்குமம் ஆகியவையும் கொடுப்பார்கள். பெருமாள் கோவிலில் துளசியை பிரசாதமாகக் கொடுப்பார்கள். அதைத்தாண்டி, சாப்பிடு வதற்கான கொடுக்கப்படும் பிரசாதங்களும் உண்டு. அவை அவ்வப்போது மாறும். அதாவது லட்டு, புளியோதரை, எலுமிச்சம் பழ சாதம், பொங்கல், பருப்பு கூழ், சுண்டல் இப்படி என்னவெல்லாமோ கொடுப்பார்கள். தங்கக் காசுகள் என்னென்னவோ பிரசாதங்கள் கொடுத்து வாங்கியிருப்போம். ஆனால் எந்த கோவிலிலாவது தங்கக் காசுகளை பிரசாதமாகக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறோமா? இல்லை.

நாம் தான் நேர்த்திக் கடன் என்ற பெயரில் தங்கத்தை கடவுளுக்குப் படைப்போம். ஆனால், இந்தியாவில் ஒரு கோவில் தங்கக் காசுதான் பிரசாதம்.

இந்த அற்புதக் கோவிலானது, மகாராஷ்டிர மாநிலத்தின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ளது. அதாவது ரத்லம் என்னும் ரத்னபுரி பகுதியில் தான் இக் கோவில் இருக்கிறது.

இந்த ரத்னபுரி கோவிலுக்குள் உறைந்திருக்கும் கடவுள் யார் தெரியுமா? நமக்கு



வளங்களை அள்ளித் தருகின்ற லட்சுமி தேவியின் கோவில் தான் அது. இங்குள்ள மகாலட்சுமியின் அருகில் அந்த கோவிலுக்குள் நுழைந்து விட்டு வரும் ஒவ்வொருவருக்குமே கிடைக்கிறது. வறுமை போக்க வெறுமனே இங்கு வருபவர்களுக்கு பக்திக்காக மட்டும் தங்கம் பிரசாதமாகக் கொடுப்பது இல்லை. இங்கு வருகின்ற ஏழைகள், தங்களுடைய வறுமையைப் போக்கிக் கொள்வதற்காகவே முக்கியமாக இங்கு வருகின்றவர்களுக்கு தங்கக் காசுகள் பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றன. இந்த கோவிலுக்கு வரும் பக்தர்கள், குறிப்பாக வசதி படைத்தவர்கள் தாங்கள் செலுத்துகின்ற காணிக்கையைப் பணமாகச் செலுத்துவதில்லை. காணிக்கை செலுத்த நினைப்பவர்கள் தங்களால் இயன்ற அளவு தங்கம் அல்லது வெள்ளியை காணிக்கையாகச் செலுத்துகின்றனர். பொதுவாக நாம் கோவிலுக்கு செலுத்துகின்ற பணம், தங்கம், வெள்ளி ஆகிய அத்தனையும் கோவில் நிர்வாகத்துக்கும் அரசுக்கும் கோவில் திருப்பணிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றமை தான் வழக்கம். ஆனால் இந்த கோவிலைப் பொறுத்தவரையில், பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்துகின்ற அத்தனை தங்கமும் வெள்ளியும் பெரிய மலை போல குவித்து வைக்கப்பட்டிருக்கும்.

இந்த மலை போல குவிக்கப்படும் தங்கம் மற்றும் வெள்ளிப் பொருள்களை, வருடத்தின் முக்கியப் பண்டிகையாக இந்தியாவில் கொண்டாடப்படுகிற தீபாவளியன்று கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பிரசாதமாக அந்த தங்கம் மற்றும் வெள்ளி வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டு




தீபாவளியன்று மட்டும் தான் தங்கம் பிரசாதமாக வழங்கப்படும். தினமும் வழங்கப்படும் வழக்கம் இங்கு கிடையாது.

இங்கு பிரசாதமாக தங்கம் கிடைத்து விட்டால், வாழ்க்கையில் பணக்கஷ்டம், வறுமை என அத்தனையும் தீர்ந்து மகாலட்சுமியே தங்களுடைய வீடுகளுக்குள் நுழைவதாகவே பக்தர்கள் கருதுகிறார்கள். இந்த தங்கக் காசை இறைவனின் அருளாக பாவிப்பதால், அதை யாரிடமும் கொடுப்பதோ விற்பதோ கிடையாது. *

காலைக்கதிர்
Kalaikkathir





## மகாவலி நில ஆக்கிரமிப்புத் திட்டம்:

# தமிழரின் இருப்பை ஒழிப்பதே அதன் முக்கிய இலக்கு!

தமிழர்களின் குடிப்பரம்பலை இல்லாதொழிக்க டி.எஸ். சேனநாயக்க என்ற சிங்கள அரசியல் சாணக்கியரால் திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்டதுதான் தமிழ்ப் பிரதேசங்களில் முனைப்புடன் செயற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள். தொடர்ச்சியாக இருக்கும் தமிழர் பாரம்பரிய நிலப்பரப்பைக் கூறுபோடும் தந்திரோபாயமே சிங்களக் குடியேற்றங்கள். இலங்கையைச் சிங்களவர்களுக்கே உரிய பௌத்த நாடாக்கும் நோக்கில் நீண்ட காலத்திட்டமாக உருவாக்கப்பட்டது தான் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள்.

மகாவலித்திட்டம் 1961ஆம் ஆண்டில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசால் முன்னெடுக்கப்பட்ட ஒரு திட்டமாகும். நில அபகரிப்புடன் கூடிய சிங்களக் குடியேற்றங்களுக்கு இது ஒரு மிகச் சிறந்த வழியாக இருக்கும் என மதிநுட்பத்துடன் வகுக்கப்பட்டது. மகாவலி கங்கைத் திட்டத்தை உருவாக்கும்போது சிங்களத்தால் வரண்ட பிரதேசங்களுக்கான நீர்ப்பாசனம், மின் உற்பத்தி நிலையங்கள் என்று பல திட் டங்களைக் கூறி ஐ.நாவில் இருந்து நிதி பெறப்பட்டது. 1964 ஆம் ஆண்டு ஐ.நாவில் அபிவிருத்தித் திட்டம் மூலம் 11 லட்சத்து 46 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறப்பட்டது. நிதி கிடைக்கப்பெற்றதும் இந்தத் திட்டத்தின் வேலைகள் முழு மூச்சுடன் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, படித்த சிங்கள இளைஞர்களுக்கு வேலை வழங்கப்பட்டு, இத் திட்டத்தை ஆரம்பித்தார் சிறிமாவோ பண்டாரநாயக்கா. நீதியான அரசாக இருந்திருந்தால் அந்தந்தப் பிரதேச மக்களுக்கு உரிய பயிற்சிப்பட்டறை களை நடத்தி, வேலை வாய்ப்பைக் கொடுத்து, அந்தப் பிரதேச மக்களையே குடியமர்த்தியிருப்பார்கள், மாறாக தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்களவர்களுக்கே முதலிடம் வழங்கப்பட்டது.

முதலாவது பகுதி 1965ஆம் ஆண்டுகள ஆய்வாகவும் இரண்டாவது பகுதி 1967ஆம் ஆண்டும் தொடங்கப்பட்டது. சிறிமாவுக்குப் பின்பு பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்கா மகாவலித் திட்டத்தை மேலும் துரிதமாகச் செயற்படுத்தினார். மகாவலித்திட்டத்தின் ஊடாகக் கிடைத்த நிதியுதவியுடன் தெற்குப் பகுதிகள் மிகத் துரிதகதியில் முன்னேற்றப்பட்டன.

மணலாற்றுப் பகுதியில் தமிழர்களால் நடத்தப்பட்ட சிலோன் பாம், டொலர் பாம், கென்ட் பாம் போன்றவற்றை காலப்போக்கில் ஜே. ஆர். ஜெயவர்தன அரசில் தமிழர்களை வலுக்கட்டாயமாக விரட்டி விட்டு சிங்கள வர்கள் பறித்துக்கொண்டனர்.

திருகோணமலைக்கும் முல்லைத் தீவிற்கும் இடையில் அமைந்துள்ள இதயபூமியைக் கைப்பற்றுவதன் ஊடாக தமிழர் பாரம்பரிய தொடர் நிலப்பரப்பைத் துண்டாடுவதே சிங்களத்தின் நோக்கமாக இருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் எழுச்சி அடைந்த காலத்தில் சிங்களத்தின் குடியேற்றத்திட்டங்கள் அனைத்தும் முடக்கப்பட்டன. அந்தக் கால கட்டத்தில் தான் தமிழர்கள் பூர்வீக நிலங்கள் பாதுகாக்கப்பட்டன.




### அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை அறிக்கை

**சிங்களவர் பாதிக்கப்பட்டால் உடன் நிவாரணங்கள்; தமிழர்கள் பாதித்தால்...?**

2016 ஜுன் மாதம் ஆவிசாவளை கொஸ்கம – சாலவ இராணுவ முகாமில் உள்ள ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியதில் பாதிக்கப்பட்ட அத்தனைச் சிங்களக் குடும்பங்களுக்கும் உடனடியாக நட்டஈடும் கொடுத்து புதிய வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டன. சிங்களவர்கள் பாதிக்கப்பட்டால் விரைந்து செயற்படும் இனவாத அரசு இப்படியான கரிசனையை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களிடம் காட்டுவதில்லை.

**2009ம் ஆண்டு ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின் பேரினவாதம் தலைதூக்கி தனது கோர முகத்தை மீண்டும் காட்டத் தொடங்கியுள்ளது. 'நல்லாட்சி' என்று தம்மைத்தாமே கூறிக் கொள்ளும் ரணில் - மைத்திரி அரசு தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவோம் என்று கூறிய வண்ணம் மறுபுறத்தில் தமிழர்களின் இருப்பை ஒழிப்பதிலேயே குறியாக இருக்கின்றது இந்த பேரினவாத அரசு.**


2009ம் ஆண்டு ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின் பேரினவாதம் தலைதூக்கி தனது கோர முகத்தை மீண்டும் காட்டத் தொடங்கியுள்ளது. 'நல்லாட்சி' என்று தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் ரணில் – மைத்திரி அரசு தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவோம் என்று கூறியவண்ணம் மறுபுறத்தில் தமிழர்களின் இருப்பை ஒழிப்பதிலேயே குறியாக இருக்கின்றது இந்த பேரினவாத அரசு. சந்திரிக்கா அம்மையார் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ அரசுகளில் மகாவலித் திட்டத்தை அதிகம் கையாண்டவர் வேறு யாரும் அல்லர். இதே மைத்திரி பால சிறிசேனதான் என்பதை மக்கள் மறக்கக் கூடாது. மகாவலி கங்கைத்திட்டத்தில் புதைந்து கிடக்கும் பேரினவாதக் கொள்கையானது தமிழர்களை இன வழிப்புச் செய்வதற்காகவே தீட்டப்பட்டது.

**எம்மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளது கூட்டமைப்பு**

ஒற்றையாட்சி அரசியல் அடிமைகளாக இருக்கும் கதிரை நாயகர்களான கூட்டமைப்பினர் மைத்திரி – ரணில் அரசின் 2016, 2017, 2018 வரவு – செலவுத் திட்டங்களை எவ்வித கேள்வியும் இன்றி முழுமையாக ஆதரித்தார்கள். வாக்குப் போட்டு நாடாளுமன்றம் அனுப்பிய தமிழ் மக்களுக்கு பெரும் துரோகம் இழைத்துள்ளது கூட்டமைப்பு. அரசியல்வாதிகளை நம்பிப் பிரயோசனம் இல்லை என்பதை நிரூபிக்கவே இந்த வாரம் ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்றுகூடி பேரெழுச்சியை ஏற்படுத்தி உள்ளனர். இனி மக்கள் புரட்சி ஒன்று ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது என்பது உறுதியாகின்றது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கூற்றுப்படி மணலாறு பறிபோனால் ஒட்டுமொத்த தமிழர் தேசமுமே பறிபோனதிற்குச் சமம். ஆகவே களத்திலும், புலத்திலும் போராட்டங்கள் வெடிக்க வேண்டும். சர்வதேசம் தமிழருக்குச் செய்த துரோகத்தை அவர்கள் முற்றத்தில் நின்றே கேட்போம். ஒட்டுமொத்தத் தமிழர்களும் பேரெழுச்சி கொண்டால் மட்டுமே இப்படியான பூர்வீக நில அபகரிப்புகளை நிறுத்த முடியும். களமும் புலமும் நேர் கோட்டில் பயணித்தால் மட்டுமே ஈழத் தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வு கிட்டும். ஆகவே தாயக மக்களை ஒரு தேசியமாகச் சிந்தித்துச் செயற் பட வைக்க எல்லா அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து செயற் பட வேண்டும் என அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை சார்பாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஐ.நாவில் நடைபெறவிருக்கும் 38 வது மனித உரிமை பேரவையின் அமர்வை முன்னிட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் தமிழின அழிப்புக்கு நீதி கோரும் மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வில் அனைத்து புலம் பெயர் வாழ் தமிழ் மக்கள் அனை வரும் ஒன்றுகூடி எமக்கு இழைக்கப்பட்ட இழைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம். *






# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**02.09.2018 – 08.09.2018**

சந்திராஷ்டம நாள் - சித்திரை 3ஆம், 4ஆமங் பாதங்கள், அவிட்டம், விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

2018 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 17 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஸப்தமித்திதி இரவு 8.47 வரை பின்னர் அஷ்டமி. நட்சத்திரம். கார்த்திகை இரவு 8.48 மணி வரை பின்னர் ரோகினி. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 4.45 மணி முதல் 6.17 மணி வரை

**சுபநேரம்** - காலை 9.04 மணி முதல் 10.34 மணி வரை

இன்று கார்த்திகை விரதம், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஆவணிமாத தேய்பிறை ஸப்தமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - கார்த்திகை

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)**

## மேஷம்:

நன்மையான வாரம். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். நீண்ட காலம் கைக்கு வராத பணம் வந்து சேரும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குல தெய்வப் பிரார்த்தனைகளை முடிப்பார்கள். வியாபாரத்தில் திட்டமிட்டபடி லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் நிம்மதி உண்டாகும். வேலை தேடி அலைவோருக்கு வேலை கிடைக்கும். சொத்துப் பிரச்சினைகள் தீரும். வழக்குகள் சாதகமாக முடியும்.

## ரிஷபம்:

மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் நலக் கோளாறு விலகும். நல்ல சுற்றுப்புற சூழ்நிலை உள்ள இடத்துக்கு வீட்டை மாற்றுவார்கள். சிலருக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். உறவினர்களுடன் இருந்த பழைய பிரச்சினைகள் தீரும். வியாபாரத்தில் புது முதலீடு செய்து லாபம் ஈட்டுவார்கள். குடும்பத்தில் அடிப்படை வசதிகள் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

## மிதுனம்:

சலனம் மிகுந்த வாரம். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். எண்ணியவை நிறைவேறாமற் போகும். நண்பர்கள், உறவினர்களுடன் பகைமை உண்டாகும். உடல் நலக் கோளாறு ஏற்படும். வியாபாரத் தொழில் போட்டிகள் உண்டாகும். வாகனக் கோளாறு ஏற்படும். வழக்குச் சிக்கலும் ஏற்படலாம். மன உளைச்சல் வந்து நீங்கும். வீண் அலைச்சல்களும் உண்டாகும். உத்தியோகத்தில் மறைமுக அவமானங்கள் ஏற்படும். வேலைச் சுமை அதிகரிக்கும். கடன் சுமையால் மன அவஸ்தை ஏற்படும்.

## கடகம்:

ஆக்கபூர்வமான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பகையாய் இருந்த உறவுகள் மீண்டும் உறவு கொண்டாடுவார்கள். செய்யும் தொழில் முன்னேற்றம் அடையும். உத்தியோகத்தர்கள் திறமை, சேவையின் அடிப்படையில் உயர்வுகளைப் பெறுவார்கள். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். மனைவி வழி உறவினர்களால் நன்மை உண்டாகும். சிலருக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

## சிம்மம்:

மத்திமமான வாரம். வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தேகசுகம், குடும்பசுகம் ஓரளவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மத்திம முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். வீண் அலைச்சல்களும் அதிகரிக்கும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். விலையுயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும். யாருக்கும் பிணை போதல் கூடாது. நகை, பணம் இரவலாக வாங்குவது கூடாது. பயணத்தின் போது அவதானம் தேவை.

## கன்னி:

உயர்வான வாரம். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் மட்டத்தில் செல்வாக்குக் கூடும். வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும். சிலருக்கு அரசு வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும். மாணவர்களுக்கு வெளிநாடு சென்று உயர் கல்வி கற்கும் வாய்ப்பு அமையும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். வாகன வசதிகள் பெருகும். கடன் சுமை குறையும் பெண்களுக்கு ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும். சுயதொழில் மேம்படையும்.

## துலாம்:

கவலையான வாரம். வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். எண்ணிய கருமங்கள் கைகூடாமற் போகும். சுய தொழில் ஆதாயம் குறையும். திருமணப் பேச்சுவார்த்தைகள் தோல்வி அடையும். உடல் நலக் குறைவு உண்டாகும். பெற்றோரைப் பற்றிய கவலை உண்டாகும். வியாபாரத்தில் எதிர் பார்த்த வருமானம் குறையும். திட்டமிட்ட படி பிரயாணம் அனுகூலமாகாது. நண்பர்கள் விரோதித்துக் கொள்வார்கள்.

## விருச்சிகம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். வீடு பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப அமைதி குன்றும். முன்கோபம், உறவினருடன் பகை, வீடு வாங்குவதில் சிக்கல்கள், உடல் உபாதை ஆகியவை ஏற்படலாம். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவலைகளும், அலைச்சல்களும் வந்து நீங்கும். பெண்கள் ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நன்மை தரும். உத்தியோகத்தர்களின் கோரிக்கை தாமதமாகும்.

## தனுசு:

யோகமான வாரம். தன லாபம் பெருகும். குடும்பத்தில் அன்பு, பாசம் அதிகரிக்கும். உத்தி யோகத்தில் உயர்வுகளும் எதிர்பார்க்கும் இடத்துக்கு மாற்றமும் கிடைக்கும். மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதற்கு அரச உதவிப் பணம் கிடைக்கும். பெண்களுக்கு அரசு வழியால் தொழில் பயிற்சிகளும், வேலையும் கிடைக்கும். எதிர்பார்த்த வகையில் திருமண யோகம் உண்டாகும். சொத்துத் தகராறு சுமுகமாகத் தீர்வடையும். சிலருக்கு தொழில் ரீதியாக வெளிநாட்டுப் பயண வாய்ப்பு அமையும்.

## மகரம்:

இனிமையான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணைவார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் இவர்களின் அசாத்தியத் திறமைகளைக் கண்டு அதிகாரிகள் வியப்படைவார்கள். சிலருக்கு வீடு கட்டும் பணி முழுமையடையும்.

## கும்பம்:

துயரமான வாரம். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். உடன்பிறந்தவர்களுடன் உரசல் வரலாம். வழக்குகள் தோல்வி அடையும். பணம் எவ்வளவு வந்தாலும் எடுத்து வைக்க முடியாத படி செலவுகள் வரும். உடல் நலக் கோளாறுகள் ஏற்படலாம். வேலைச் சுமை அதிகரிக்கும். வாகனப் பழுது வந்து நீங்கும். கொடுக்கல், வாங்கலில் சச்சரவுகள் உண்டாகும். கொடுத்த கடனை மீளப் பெறுவது கடினமாக இருக்கும். வியாபாரத்தில் போட்டிகளால் லாபம் குறையும்.

## மீனம்:

விருத்தியான வாரம். பொருளாதாரம் மேம்படும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். எண்ணிய கருமங்கள் துல்லியமாய் நிறைவேறும். சகோதர உறவு பலப்படும். வியாபாரம் விருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடையும். பெண்களின் சுயதொழில் முன்னேறும். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு கௌரவப் பதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு, மதிப்பு உயர்வடையும். புது நட்புகளால் பெரும் ஆதாயமடைவார்கள்.

# கிளிநொச்சியில் கர்ப்பிணி நித்தியகலா படுகொலை:

# இருவரின் தவறால் குழந்தைகளுக்கு நேர்ந்துள்ள அவலம்!

- முரளி -



சமகாலத்தில் வடக்கு கிழக்கில் என்னதான் நடக்கின்றது? என்ற கேள்விக்கு யாராலும் பதில் கூற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அரசியல், சமூகம், பொருளாதாரம் என அனைத்து துறைகளும் இங்கு சீரழிந்து விட்டன.

நாளுக்கு நாள் வடக்கு கிழக்கு அரசியலில் பெரும் குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதிகார போட்டி தலைதூக்கியுள்ள நிலையில், தமிழ் தலைமைகள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றனர்.

இது தான் இப்படியென்றால் சமூக சீரழிவு என்பது அங்கு வேறு ஒரு ரகத்தில் அரங்கேறி வருகின்றது. கொலை, கொள்ளை, வாள் வெட்டு, வன்புணர்வு, என என்றும் இல்லாத அளவிற்கு வடக்கு கிழக் கில் குற்றச்செயல்கள் நடக்கின்றன.



அந்த வகையில், கடந்த இரண்டு நாட்களாக பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் படுகொலை சம்பவம் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. ஒரு பிள்ளையின் தாயான 32 வயதுடைய நித்தியகலா என்ற பெண் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி – பன்னங்கண்டி பகுதியிலிருந்து கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் இளம் பெண்ணொருவர், இரணைமடு நீர்ப்பாசன கால்வாய்க்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

முல்லைத்தீவு, முறிகண்டி பகுதியைச் சேர்ந்த 32 வயதான கருப்பையா நித்தியகலா என்ற பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தானே இந்த கொலையைச் செய்தேன் என ஒப்புக்கொண்டுள்ளார். அதே சமயம், கொலை செய்யப்பட்ட பெண் கணவரை பிரிந்து வாழும் நிலையில், ஐந்து மாத கர்ப்பிணியாக இருந்துள்ளார்.

குறித்த பெண்ணுடன் தனக்கு தொடர்பு இருந்தது. அவரது வயிற்றில் வளர்ந்த குழந்தை என்னுடையது தான். அதனால் அவள் தன்னை கூட்டிச் செல்லுமாறு வற்புறுத்தினாள்.

பின்னர் நாம் இருவரும் நஞ்சு குடித்து இறந்துவிடுவோம் என்று முடிவெடுத்து, அதற்கான முயற்சிகளை மேற்கொண்ட நிலையில், அந்தப் பெண்ணை கொலை செய்தேன் எனச் சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

**தகாத உறவால்....?**

கொலை செய்யப்பட்ட பெண், நல்லடக்கம் செய்யப்பட்டுவிட்டார். கொலை செய்தவர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர்களின் பிரச்சினை முடிந்து விட்டது.

ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பார்கள். அது போல் இந்த இருவருக்கும் இடையில் காணப்பட்ட தகாத உறவு ஓர் எல்லைக்கு சென்று இறுதியில் கொலையில் முடிந்து விட்டது.

இந்தச்சம்பவத்தில் பலரின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டது. குறிப்பாக மூன்று குழந்தைகள் மற்றும் ஓர் அங்கவீனமான முன்னாள் போராளி ஒருவரின் வாழ்க்கை கேள்விக்குள்ளாகியுள்ளது.

அத்துடன், அவர்கள் சார்ந்த குடும்பம், உறவினர்கள் என பலரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர், விடுதலைப் புலிகள் காலத்தில், புலிகளின் காவல்துறையில் இருந்த ஒருவர் எனவும், அவரின் மனைவி அங்கவீனமான முன்னாள் போராளி ஒருவர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தத் தம்பதியினருக்கு இரண்டு குழந்தைகள் இருக்க, உயிரிழந்த பெண்ணுக்கு ஒரு குழந்தை இருக்கின்றழது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆக மொத்தம் இந்தக் கொலைச் சம்பவத்தினால் முக்கியமாக நான்கு பேரின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

**நிர்க்கதியான குழந்தைகளின் எதிர்காலம் என்னவாகும்?**

இனி அந்தக் குழந்தைகளும், அந்த அங்கவீனமான பெண்ணும் சமூகத்தில் எவ்வாறு வாழ்க்கையை கொண்டு செல்லப்போகின்றார்கள் என்ற கேள்வியெழும்பியுள்ளது. அந்தக் குழந்தைகளின் எதிர்காலம் என்ன?

> **பெரியவர்கள் செய்த தவறுக்காக தண்டிக்கப்பட போவது அவர்களின் குழந்தைகள் என்று கூறினாலும் மிகையாகாது. ஏனெனில், அந்த குழந்தைகள் இனிவரும் காலங்களில் சமூகத்தில் பல்வேறு புறக்கணிப்புகளுக்கு ஆளாவார்கள் என்பது நிச்சயம்.**





இந்தச் சமூகத்தில் தொடர்ந்தும் எவ்வாறு அவர்கள் வாழப்போகின்றார்கள் என்ற கேள்வியெழுந்துள்ளது. ஏனெனில் எங்களது சமூகம் அவ்வாறான ஒரு கட்டமைப்பைக் கொண்டுள்ளது.

பெரியவர்கள் செய்த தவறுக்காக தண்டிக்கப்பட போவது அவர்களின் குழந்தைகள் என்று கூறினாலும் மிகையாகாது. ஏனெனில், அந்த குழந்தைகள் இனிவரும் காலங்களில் சமூகத்தில் பல்வேறு புறக்கணிப்புகளுக்கு ஆளாவார்கள் என்பது நிச்சயம்.

அதுவே அவர்களின் எதிர்காலத்தை வீணாக்கி விடும் என்பதே நிதர்சனம். அவர்களால் பாடசாலை சென்று நிம்மதியாக கல்வி கற்க முடியாது. அங்கு அவர்களுக்கு பல்வேறு புறக்கணிப்புகள் ஏற்படும்.

புறக்கணிப்பு என்பதைவிட வீண் பழிச்சொல்லுக்கு ஆளாவது நிச்சயம். அதுவே அவர்களுக்கு ஒரு வெறுப்பை ஏற்படுத்தும். அது மட்டுமல்லாது அவர்களைச் சுற்றியிருக்கும் சமூகமும் அவர்கள் மீது வீண் பழியினையே சுமத்தும்.

இதன் பின்னர் அந்த பிள்ளைகளை எங்களது சமூகம் பார்க்கும் பார்வையே வேறு விதமாகத்தான் இருக்கும். அவர்களுக்கு உதவி செய்வதற்குக் கூட இந்த சமூகம் நிச்சயம் தயக்கம் காட்டும்.

யாருடனும் நெருங்கி பழக முடியாது. எந்தவொரு பொது நிகழ்வுகளிலும் கலந்துகொள்ள முடியாது. ஏன் உறவுகள் கூட சில நேரங்களில் ஒதுக்கிவைத்துவிடும். இவ்வாறான சம்பவங்களை நாங்கள் எங்கள் சமூகத்தில் பார்க்க முடிகின்றது.

**இனத்துக்காகப் போராடிய பெண்ணின் நிலை...?**

இவ்வாறான நிலை அந்த குழந்தைகளின் எதிர்காலத்தை இல்லாமல் செய்துவிடும். அது மட்டுமல்லாது தன் இனத்திற்காக போராடிய அந்த அங்கவீனமான பெண்ணின் நிலை இன்னும் பரிதாபத்துக்குரியதாகும்.

பெற்றோர்கள் செய்த தவறுக்காக குழந்தைகள் தண்டிக்கப்படுவதும், அவர்களின் எதிர்காலம் வீணடிக்கப்பட போவதும் கவலைக்குரிய ஒரு விடயமாகும். ஒரு கட்டுக்கோப்பாக இருந்த சமூகத்தில் வாழ்ந்த இருவர் செய்த தவறு பலரையும் பாதித்துள்ளது.

இது போன்று தமிழர் தாயகப் பகுதிகளில் கடந்த காலங்களில் மிகவும் கொடூரமான கொலை சம்பவங்கள் இடம்பெற்றிருந் தன. வித்தியா, ரெஜினா, ஹரிஸ்ணவி என பலர் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் கொலை செய்யப்பட்ட போதெல்லாம் எங்கள் சமூகம் போராட்டங்களையும், கண்டனங்களையும் வெளியிட்டிருந்ததுடன், எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

அரசாங்கத்திற்கும், பாதுகாப்பு தரப்பினர்களுக்கும் பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்திருந்தனர். எனினும், இது போன்ற சம்பவங்கள் எங்கள் சமூகத்தில் அவ்வப்போது அறங்கேறிக் கொண்டு தான் இருக்கின்றன.

ஆகையினால் இதன் பின்னணி குறித்து ஆய்வு செய்ய வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கின்றது. ஏனெனில், திறந்தவெளி சிறைச்சாலையில், பாது காப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் தாயகப் பகுதியிலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

வடக்கு, கிழக்கு பகுதிகளோடு ஒப்பிடும் போது தென்னிலங்கையில் இவ்வாறான கொடூரமான சம்பவங்கள் இடம்பெறுவதில்லை. அப்படியானால் வடக்கு கிழக்கு பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றனவா என்ற சந்தேகமும் எங்கள் மத்தியில் ஏற்படுகின்றது.

எது எவ்வாறான போதிலும், இரண்டு பேருக்கு இடையில் காணப்பட்ட தகாத உறவு அவர்களில் குழந்தைகளின் எதிர்காலத்தை நிச்சயம் பாதித்துள்ளது என்பதே நிதர்சனமான உண்மை. *



# சங்க இலக்கியங்களில் கருத்தொருமித்த காதல்!

## சில வேளைகளில் ஊடலும் தான்!!

பழங்கால தமிழ் மக்களின் வாழ்வியல், ஒழுக்கம், ஒழுக்காறுகள் (அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை நம் சங்க இலக்கிய பாடல்கள் 'குன்றின்மேல் இல்ல விளக்கு' போல் தெள்ளத்தெளிவாக படம் பிடித்து காட்டுகின்றன. நாம் அனைவரும் அறிந்த ஒன்றேயாயினும் ஓர் அடிப்படை விளக்கம் தேவையாதலால் சிறுகுறிப்பு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலப்பரப்புகளில் வாழ்ந்த மக்களின் மரபுகளை தேனாக சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது. திணைகள் என்றசொல்லிற்கு எண்ணற்ற பொருள் உண்டு. நிலம், மண், பூமி, ஒழுக்கம், நிகழ்விடம் போன்றவைகள் இருந்தாலும் நிலமும் பொழுதும் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே பிற பொருள்கள் விளக்கப்படுகின்றன. ஐவகை திணைகளில் வாழ்ந்த மக்களின் உலகியல் சார்ந்த வாழ்வை அறம் என்றும், இல்லறம் சார்ந்த வாழ்வை புறம் என்றும் பகுக்கப்பட்டுள்ளது. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் நூல்களில் அனைத்து பாடல்களும் அடக்கம்.

**காதல் - தமிழரின் மரபு**

பழந்தமிழரின் வாழ்வில் திருமணத்திற்கு முந்தைய காதல், வாழ்வியல் நெறி முறையாகவே இருந்துள்ளது. திருமணத்திற்கு முந்தைய 'காதல் வாழ்வை', களவொழுக்கம் என்றும், திருமணத்திற்கு பிறகு 'அவர்களின் இல்லற வாழ்வு', கற்பொழுக்கமாகவும் போற்றப்பட்டுள்



என. இவை சார்ந்த நிகழ்வுகளும், அதன் கதாப்பாத்திரங்களும் அகப்பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. காதலனும், காதலியும் தலைவன், தலைவி என்று வர்ணிக்கப்பட்டாலும் பாங்கனும் (நண்பன்), பாங்கியும் (தோழி) இல்லாமல் எவ்வாறு காதல் வளர்ப்பது ?!!! ஒரு சில காட்சிகளை பாா்ப்போம். பாடல்கள் மேற்கோள் இல்லாமல்.

**முதல் சந்திப்பு**


எதிர்பாராத சூழ்நிலையில் காதலன் காதலி சந்தித்தல், நல்ஊழின் ஏவலால் காதல் வயப்படுதல், இயற்கைப் புணர்ச்சி தெய்வப் புணர்ச்சி என்று கூறப்படுகிறது. அம்பு பட்ட யானை சினம் கொண்டு ஓடி வரும் பொழுது காதலன் காதலியை காப்பாற்றுகிறான். இருவருக்குள் காதல் மலர்கிறது. பெரும்பாலும் இவ்வகை காட்சிகள் குறுந்தொகையில் ஓவியங்களாக காண்பவர்களுக்கு புலப்படும்.

**செவிலித்தாய் குறி கேட்டல்**

குறிகூறும்குறத்தியிடம்தலைவியின் செயல்களில் மாற்றத்தைக் கண்ட செவிலித்தாய் இந்த மாற்றத்திற்கு காரணம் என்ன என்று வினவுகிறாள். குறத்தி குறி சொல்லும் முன் வழக்கமாக பாடும் மலைகளை பற்றிய பாடல்கள் அனைத்தையும் பாடுகிறாள். தலைவனின் மலை பற்றிய பாடல் வரும் பொழுது அங்கே வரும் தோழி, குறத்தி, அந்த மலையை பற்றிய பாடலை மட்டும் பாடு, பாடு, பாடிக் கொண்டே இரு என்று சொல்லி செவிலித்தாயின் ஐயத்தை உறுதி படுத்துகிறாள்.

சினம்கொண்டயானையிடம்இருந்து தலைவியை தலைவன் காப்பாற்ற உருவான காதலையும், இருவருக்குள் இருக்கும் உறுதியையும் தோழிசெவிலித் தாயிடம் கூறுகிறாள். தலைவனின் பண்புகள், குடும்ப சூழல், அழகு போன்றவற்றை தோழிக்கு ஆதரவாக விளக்குகிறாள்.

மற்றொரு பாடலில், பெண் யானையின் மூச்சு காற்றில் வரும் சுவாசத்தை நுகரும்ஆண்யானைஅன்புடன்அதனை துதிக்கையிலே தழுவி அன்பு பாராட்டுவதை போல வரும் உவமைகள் மிளிரும். இரவில் தலைவியை சந்திக்க தோழியிடம் தலைவன் தூது அனுப்புகிறான்.



அதற்கு தோழி, இரவுக்குறி வந்து சந்திக்கும்செயல்கூட உங்கள்திருமணத்தை தாமதப்படுத்தும். தோழி உடல் பொலிவிழந்து வருகிறாள் என்பதை போல தலைவனின் ஒழுக்கத்தை கண்டிப்பதாக காட்சி அமையும்.


**இடந்தலைப்பாடு**

இருவரும் சந்தித்த இடத்திலே மீண்டும் சந்திப்பது இடந்தலைப்பாடு என்று பொருள். இருவரும் முதல் முறை சந்தித்த அதே இடத்தில் மீண்டும் காண வேண்டும் என்ற ஆர்வத்தில் இரண்டாம் நாளும் காணப்போவதைக் குறிப்பிடுவதாக அமையும்.

இருவரின் சந்திப்புக்கு சில தடைகள் ஏற்பட்டு சில நாள்கள் சந்திக்க முடியாமல் போனமையால் தலைவன் தலைவியின் பிரிவால் உடல் இளைத்தான். சோர்வான அவன் முகம் கண்ட பார்ப்பான நண்பன் காரணத்தை உணர்ந்து தலைவனுக்கு துணை செய்கிறான் பாங்கன்.

**இரவுக்குறி**


இரவுக்குறி இடத்திற்கு வரும் தலைவன், தலைவியிடம் தன் வருகையை தெரியப்படுத்த அங்கிருந்த ஒரு மரத்தின் மீது ஒரு சிறு கல் ஒன்றை எறிவான். அங்குள்ள பறவைகள் சத்தமிடும். இதே போல பறவைகள் ஓசையை உணர்ந்த



தோழி ஆவலுடன் வந்து காண அது வேறொரு காரணமாக இருக்கிறது. தலைவன் இல்லாத ஏமாற்றம் அல்லகுறிப்பிடுதல் என்று விளக்கப்படுகிறது.

தலைவன் மனதில் திருமண எண்ணத்தை தோழிவிதைக்கிறாள். மலையின் மேல் உள்ள சிறு கொம்பிலே காய்த்திருக்கும் பலாப்பழம் எவ்வாறு முதிர்ச்சி அடைந்தவுடன் தானாக கீழே விழுந்து சிதையுமோ அது போல நீ இவளை மணந்து கொள்ளாது போனால் தன்னை தாங்கி நிற்கும் உயிரை விட்டு விடுவாள். ஆகையால் இவளை ஊறறிய நீ மணப்பாயாக என்று தோழி கூறும்படி பாடல் அமையும்.

திருமணத்திற்கு வரைபொருள் வேண்டி தலைவன் தலைவியை பிரிகிறான். பாட்டுடைத்தலைவனின் குன்றை



பார்த்துக்கொண்டு அமர்ந்திருக்கிறாள். தலைவியின் மனம் அறிந்த தோழி தலைவனின் மலையில் மலர்ந்த காந்தள் மலரை தலைவிக்கு அளிக்கிறாள். தலைவனின் குன்றை காணும் பொழுது தம் முடைய பசலை நோய் தீருகிறது என்று என்கிறாள் தலைவி.


பொதுவாக அகம் சார்ந்த பாடல்களில் புலவர்கள் காட்சியை விளக்க தோழி கதாப்பாத்திரத்தைப் பயன்படுத்தி கொண்டார்கள் போலும். தலைவன், தலைவி சிறப்புகள் மற்றும் அவர்களின் உணர்வுகள் தோழியின் மூலம் அதிகம் வெளிப்படுகின்றமையை நாம் காணலாம்.

பொருள் ஈட்ட தலைவன் தலைவியை பிரிதலும், பிறகு ஏற்படும் சில நிகழ்வுகளும் பாலைத்திணையின் உரிப்பொருளாக கொண்டது. அகநானூற்றில் இதன் பாடல்கள் அதிகம்.

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேட கானகத்தின் வழியே வேற்று நாடு நோக்கி செல்லும்பொழுது உருவான காதலின் வலியை உணர்த்துவது போல அமைந்த பாடல் ஒன்றில், போர்முனையில் அகப்பட்டுகொண்டதை போல கை, கால்கள் கட்டப்பட்டுள்ளன என்று தனிமையின் நிலையையும், நடந்து வந்த களைப்பையும் தலைவன் குறிப்பிட்டு பாடுகின்றான்.

வீடுகளும் சிதைவுற்று, பெரிய முதுகினை உடைய யானை உராய்வதால் நன்கு செதுக்கி அமைத்த வீட்டின் விட்டமும் சாய்ந்து இருப்பதை போல தன்னுடைய நிலை இருப்பதை காதலி உணர (வெளிக்காட்டு) மாட்டாள். கார் கூந்தலும் சிவந்த அணிகலன்களும் கொண்ட அவள் நள்ளிரவில் பெருமூச்சு விட்டு, அவளின் கண்களில் நீர் பெருக்கோடு தனிமையில் இருப்பாள். அவள் கண்களிலிருந்து வழிகின்ற நீரை தன் மெல் விரல் நகத்தால் வழித்து எறிவாள். இவ்வாறு செல்லும் பாலைத்திணையின் வர்ணனைகள்.

மருதத்திணையில் தலைவன் தலைவிக்கு இடையிலான ஊடலும், ஊடல் நிமித்தமும் பாடல்களாக நிறைந்துள்ளன. கணவன் பரத்தையிடம் சென்று விட்டு திரும்புதல் போன்ற நிகழ்வுகளும் இதில் அடக்கம். பரத்தை என்ற சொல்லிற்கு ஆடல், பாடலில் சிறந்தவர் அல்



லது மற்றொரு பெண்டிர் என பல பொருள்படுகிறது. இந்த திணையில் துணைகதாபாத்திரமாகபாணன்உண்டு. பரத்தமை வீட்டிற்கு சென்ற கணவன் மீண்டும் வீடு திரும்ப பாணனிடம் தூது விடுகிறான். தலைவியிடம்வந்தபாணன் தலைவனின் தேர் பரத்தமை சேரிக்கு இதுநாள் வரை சென்றதில்லை என்கின்றான். மாயத்தலைவனின் சொற்களை மற்றொரு பரத்தமை நம்பி இருப்பாள். அவளின் ஊடலை நீ சென்று தீர்ப்பாயாக என்று தலைவி கூறுவாள். ஊடல், ஊடல் தணிந்து இருவரும் சேர்த்தல், விருந்தோம்பல் போன்றவை சுவைபட இத்திணையில் உண்டு.

இறுதியாக, இல்லற வாழ்வில் இருவரும் நுழைந்த பிறகு மனம் ஒத்து வாழ்க்கை நடத்துவதுடன் அறநெறிகளையும் கடைபிடித்தமையைச் சங்க இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைத்து வழிகாட்டியாக திகழ்கின்றன. பெண்ணீயம் தொடர்பான முற்போக்கு சிந்தனைகள் அவர்களுக்கு இருந்துள்ளன. அகத்திணை அவர்களின் இல்லற வாழ்வை விளக்குவதைப்போல, புறத்திணையில் பெண்களின் கல்வி, வீரம், புலமை, புகழ் போன்றவற்றை நாம் காண முடிகிறது. இல்லற வாழ்விற்கு அவர்கள் அளித்த விழுமியங்கள் நிகழ்கால சமூகத்திற்கு ஒரு சான்றுஎன்றால் அது மிகையாகாது.! *



# இவர் ஆணா, பெண்ணா?

# விரும்பிய வாழ்க்கையை வாழ்கிறார் றிஸ்வான்!

நீங்கள் ஆணா பெண்ணா என, என்னிடமே பலர் நேரடியாகக் கேட்டிருக்கின்றார்கள் என்று கூறிவிட்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தார் றிஸ்வான்.

பெரும்பாலும் முழுமையாக முகச் சவரம் செய்த நிலையில் தான் றிஸ்வான் காணப்படுவார். ஆனாலும், அவரைச் சந்தித்த அன்றைய தினம், மெல்லிய தாடியுடன் இருந்தார்.

எங்கள் உரையாடல் முக்கியமானதொரு கட்டத்தை எட்டியிருந்தது. தயங்கித் தயங்கி பேசிக் கொண்டிருந்த அவர், திறந்த மனதுடன் உரையாடும் நிலைக்கு வந்திருந்ததை புரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு பெண்ணைப் போல், தன்னை றிஸ்வான் ஒப்பனை செய்திருந்தார். பெண்கள் விரும்பிச் செய்யும் அலங்காரங்களோடு அவரைக் காண முடிந்தது.

எப்போது இப்படி மாறினீர்கள் என்று அவரிடம் கேட்டோம்; அவர் பதில் கூறினார். பதிலை பதிவு செய்வதற்கு முன்னர், றிஸ்வானைப் பற்றி தெரிந்து கொள்வது நல்லது.

**யார் இந்த றிஸ்வான்?**

இலங்கையின் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஹப்புக்கஸ்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் றிஸ்வான்.

முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த இவர், வீட்டில் மூன்றாவது குழந்தை. இவருக்கு 5 சகோதரர்கள் இருக்கின்றார்கள். றிஸ்வானுக்கு இப்போது 26 வயது.

2013 ஆம் ஆண்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

இப்போது படிப்பை நிறைவு செய்துள்ளேன் எனக் கூறும் றிஸ்வான், பட்டமளிப்பு விழாவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்.

**அழகுக்கலையில் ஈடுபாடு**

அழகுக்கலை நிபுணராக றிஸ்வான் தொழில் செய்து வருகிறார். அதற்கான படிப்பையும் தொடர்ந்து வருகின்றார். கூடவே, சிகை அலங்கார நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறார்.

பல்கலைக்கழகத்தில் இரண்டாமாண்டு படிக்கும்போது, அழகுக்கலைத் தொழிலில் தான் ஈடுபடத் தொடங்கி விட்டார் என அவர் கூறுகின்றார்.

தொழில் ரீதியாக மற்றவர்களுக்கு ஒப்பனை (மேக்கப்) செய்யத் தொடங்கிய போது, நானும் ஒப்பனை செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைப் பட்டேன். எனக்குப் பிடித்தவாறு ஒப்பனை செய்து கொள்ளத் தொடங்கினேன். ஆனால், நான் செய்து கொள்ளும் ஒப்பனை மிகையாக உள்ளதாகவும், அது எனக்கு பெண்மைத் தோற்றத்தைத் தருகிறது என்றும், என்னிடம் ஏராளமானோர் கூறுகின்றனர். இருந்தபோதும், எனக்கு இது பிடித்திருக்கிறது; விரும்பியே நான் இதைச் செய்து கொள்கிறேன் என்கிறார் றிஸ்வான்.

**திருநங்கை தோற்றம்**

இவருடைய அலங்காரம், நடை, உடை மற்றும் பாவனைகளை வைத்து, இவரை ஒரு திருநங்கையாகவே பெரும்பாலானோர் பார்க்கின்றனர்.

இலங்கையில் திருநங்கைகள் பற்றிய பேச்சுக்களும், புரிதல்களும் மிகக் குறைவாகவே உள்ளன. இதனால், ஏராளமான அவமானங்களையும் தொந்தரவுகளையும் றிஸ்வான் சந்தித்து வருகின்றார்.

எவ்வாறாயினும், தன்னை 'திருநங்கை' எனும் வகுப்புக்குள் சேர்த்து விடக் கூடாது என்று றிஸ்வான் கூறுகின்றார். ஏனென்றால், நான் அப்படியில்லை என்கிறார்.

பெண்களைப் போன்ற செயல்பாடுகள் என்னிடம் இருந்தாலும், முழுமையாக ஒரு பெண்ணைப் போல் மாற வேண்டும் என்கிற விருப்பம் எனக்கு இல்லை என வலியுறுத்தி கூறினார் றிஸ்வான்.

**பாலியல் துன்புறுத்தல்கள்**

இருந்தபோதும், பெண்கள் எதிர்கொள்ளக் கூடிய பாலியல் துன்புறுத்தல்களை விடவும் அதிகளவு கொடுமைகளை, ஆண்களிடமிருந்து தான் எதிர்கொண்டதாகக் கூறி, அவற்றை றிஸ்வான் விவரித்தார்.

ஊரிலிருந்து பல்கலைக் கழகத்துக்கு வருவதற்காக ஒருநாள் பஸ்ஸில் பயணித்தேன். இரவு 10 மணி தாண்டியிருக்கும். காரைதீவு சந்திப்பில் இறங்கினேன். அங்கிருந்து பல்கலைக் கழகத்துக்கு 10 கிலோமீற்றர் செல்ல வேண்டும். ஆனால், அந்த வேளையில் நான் செல்வதற்கான பஸ் எதுவும் கிடைக்கவில்லை. அப்போது, மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் எனக்கு உதவி செய்வதாகக் கூறி, என்னை ஏற்றிக் கொண்டார். ஆனால் அந்தப் பயணம் திசை மாறியது. அவர் என்னை வேறு இடத்துக்கு அழைத்துச் சென்றார். நான் எவ்வளவு கூறியும் இடையில் அவர் வாகனத்தை நிறுத்தவேயில்லை என்று றிஸ்வான் கூறினார்.

ஆனாலும், அந்த நபர் மோட்டார் சைக்கிளை நிறுத்திய இடத்திலிருந்து நான் தப்பி ஓடினேன். அந்த நபர் என்னைத் துரத்தினார். நான் வயல் வெளிக்குள் இறங்கி சேற்றுக்குள் கால்கள் புதையப் புதைய ஓடினேன். பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஓரிடத்தில் மறைந்திருந்துதான் இறுதியில் தப்பித்தேன்.



பி.பி.சி. செய்தியாளர்களிடம் அவர் கூறிய தகவல்கள்

பாலியல் துஷ்பிரயோகம் செய்வதற்காகவே, அந்த நபர் என்னை அப்படி விரட்டினார் என்று விவரித்தார் றிஸ்வான்.

**எதிர்கொள்ளும் சமூக சிக்கல்கள்**

தற்போது தனது சொந்த இடத்திலிருந்து நூற்றுக்கணக்கான தூரத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில், வாடகை வீட்டில் றிஸ்வான் வசித்து வருகின்றார்.

ஓரிடத்தில் அழகுக்கலை நிலையம் நடத்தினேன். அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் வந்து எனது அலங்காரத்தையும், அந்த ஒப்பனையோடு அமையும் தோற்றத்தையும் மாற்றிக் கொள்ளுமாறு என்னிடம் கூறினார்கள். வாடகைக்கு வீடு தருவதற்குக் கூட, பலரும் ஆலோசிக்கின்றனர். அப்படித் தந்தாலும், குறுகிய காலத்துக்குள் வேறு இடம் பார்க்கச் சொல்கிறார்கள். ஆனால், யாருக்காகவும் எதற்காகவும் என்னை மாற்றிக் கொள்ள நான் விரும்பவில்லை. என்று றிஸ்வான் கூறினார்.

## திருநங்கையாகவே பலரும் பார்க்கின்றனர்

எனக்காகவே நான் வாழ்கிறேன். இந்த வாழ்க்கையை எனக்குப் பிடித்தது போல் வாழவே விரும்புகின்றேன். நான் இப்படி என்னை மாற்றிக் கொண்டபோது, இதற்கு எதிராக எவ்வாறான பிரச்சினைகளெல்லாம் எழும் என்பதை அறிந்தே இருந்தேன். அவற்றை எதிர்கொள்வதற்கான சக்தியும் என்னிடமுள்ளது என்று நம்பிக்கையுடனும் பேசினார் றிஸ்வான்.

**றிஸ்வானின் குடும்பம்**

எவ்வாறாயினும் எனது குடும்பத்தார் என்னை ஒதுக்கிவிடவில்லை. ஆனால், எனது இந்த செயல்பாடுகளை அவர்கள் தங்களுக்கு ஏற்படும் அவமானமாகப் பார்க்கின்றார்கள். எனது நடவடிக்கைகளால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்று அச்சப்படுகின்றார்கள். அதை என்னிடமே கூறியுமிருக்கின்றனர் என்று அவர் கூறினார்.

ஆனால், இப்படி என்னை அலங்காரப்படுத்திக் கொள்வதிலிருந்தும், இவ்வாறாக நடந்து கொள்வதில் இருந்தும் என்னால் விடுபட முடியவில்லை. புகைத்தல், மதுபானம் அருந்துதல், போதைப் பொருள் பழக்கம் போன்றவற்றுக்கு மனிதர் அடிமையாகுவதைப் போல், இப்படி ஒப்பனை செய்து கொள்வதற்கு நான் அடிமையாகி விட்டேன். இதிலிருந்து நான் விடுபடவும் விரும்பவில்லை என்கிறார் றிஸ்வான்.

அழகுக்கலைத் தொழில் மூலம் மாதம் தோறும் நல்ல வருமானம் றிஸ்வானுக்குக் கிடைக்கிறது. மூன்று, நான்கு லட்சம் ரூபாய் வரை கூட சம்பாதிக்க முடிவதாகவும் அவர் கூறுகிறார்.

**சட்டத்துறை பட்டப்படிப்பு**

கலைத்துறையில் பட்டத்தைப் பெற்ற கையோடு, சட்டத்துறையில் பட்டப் படிப்பை ஆரம்பிக்க வேண்டும் என்கிற ஆசை றிஸ்வானிடம் உள்ளது. அதற்கு தேவையான பெருந்தொகைப் பணத்தை, தனது அழகுக்கலைத் தொழில் மூலமாகவே பெற முடியும் என்றும் அவர் சொல்கிறார்.

அரச தொழிலொன்று எனக்குக் கிடைத்தாலும், நான் இப்போது செய்து வருகின்ற அழகுக்கலைத் தொழிலை விட்டு விடப் போவதில்லை என்கிறார் றிஸ்வான்.





அவரின் இந்த துணிவு மற்றும் நம்பிக்கைகளுக்கு இடையே, இறக்கி வைக்கப்படாத ஏராளமான சோகங்கள் இருகின்றமையையும் அவரின் பேச்சில் மறைந்திருப்பதை கவனிக்க முடிந்தது.

என்னில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுடனும், என்னில் நான் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்களுடனும் யாருக்கும் எந்தவிதமான கெடுதல்களுமின்றி நான் வாழ விடும்புகிறேன். அதை ஏன் இந்தச் சமூகம் தடுக்கிறது? என்று றிஸ்வான் கேள்வி எழுப்புகிறார்.

இங்கு எழுதியவற்றை விடவும் எழுதப்படாத, எழுத முடியாத ஏராளமான கேலிகள், அவமானங்கள், துன்புறுத்தல்களை தினமும் சந்தித்துக் கொண்டு தான் தான் 'விரும்பிய' வாழ்க்கையை றிஸ்வான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

*

# சிவப்பு அங்கி தேவதை



கிராமத்தில் துறுதுறுவென்று ஒரு சின்னப் பெண் இருந்தாள். பாட்டிக்கு அவளை மிகவும் பிடிக்கும். சிவப்பு வண்ண மென்மையான அங்கி ஒன்று வேண்டும் என்று கேட்டாள். பாட்டியும் வாங்கிக் கொடுத்தார். அந்தச் சிவப்பு அங்கி அவளுக்கு மிகவும் அழகாக இருந்தது. அதனால் எல்லோரும் அவளை, ‘சிவப்பு அங்கி தேவதை’ என்று அழைத்தனர்.

காட்டுக்குள் வசித்த பாட்டி, திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் படுத்துவிட்டார். சிவப்பு அங்கி தேவதையை அழைத்தார் அம்மா.

“இந்த கேக் துண்டையும், பழரசத்தையும் பாட்டி சாப்பிட்டால் உடம்பு சரியாகி விடும். வெயில் வருவதற்கு முன்பே கிளம்பி விடு. போகும்போது பாதையை விட்டு விலகாதே. மெதுவாக நடந்து செல். ஓடினால் கையில் இருக்கும் போத்தல் விழுந்து உடையலாம். அறைக்குள் நுழையும்போது, ‘காலை வணக்கம்’ என்று சொல்ல மறக்காதே என்று சொல்லி, சிவப்பு அங்கி தேவதையை அனுப்பி வைத்தார் அம்மா.

முதல் முறை பாட்டியைப் பார்க்கத் தனியாகக் கிளம்பியதால், சிவப்பு அங்கி தேவதைக்கு சந்தோம் தாங்க முடியவில்லை. வண்ணத்துப்பூச்சிகளும் தும்பிகளும் பறந்துதிரிந்ததை மிகவும்ரசித்தாள். அவளை அறியாமலே ‘லால லா’ என்று பாட ஆரம்பித்தாள்.

சற்றுத் தூரம் நடந்த பிறகு, ஒரு செடியில் ஸ்ட்ராபெர்ரி பழங்கள் பழுத்திருப்பதைக் கண்டாள். ஒன்றைப் பறித்துச் சுவைத்தாள்.

அடடா! என்ன சுவை! பாட்டிக்கும் கொஞ்சம் எடுத்துச் செல்லலாம் என்று சொல்லிக்கொண்டே, ஸ்ட்ராபெர்ரிகளைப் பறித்தாள்.

மீண்டும்நடக்கஆரம்பித்தாள். மிகப்பெரியவண்ணத்துப் பூச்சி ஒன்று அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது. வண்ணத்துப்பூச்சியின் பின்னால் ஓடினாள். திடீரென்று வழி தவறினாள்.

ஐயையோ! அம்மா சொன்னதை மறந்துவிட்டு, வழி தவறி விட்டேனே? இப்போது என்ன செய்வது? என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டாள்.

ஒரு மரத்துக்குப் பின்னால் இருந்து கவனித்த ஓநாய், மெதுவாக வெளியே வந்தது. என்ன இந்தப் பக்கம், தனியா வந்திருக்கே? என்று கேட்டது.

என் பாட்டிக்கு உடம்பு சரியில்லை. அதான் கேக்கும் பழரசமும் எடுத்துச் செல்கிறேன்.

அப்படியா! பாட்டி எங்கே வசிக்கிறார்?

இந்தக் காட்டில்தான்! அரை கிலோ மீற்றர் உள்ளே போனால் மூன்று பெரிய ஓக் மரங்களும், பாக்கு மரங்களும் இருக்கும். அதற்குக் கீழே உள்ள வீட்டில்தான் பாட்டி இருக்கிறார்.

’அடடா! இன்னிக்கு எனக்கு நல்ல விருந்து. பாட்டியையும் பேத்தியையும் சுவைத்துவிடலாம்!’ என்று நினைத்தது ஓநாய்.

இந்தக் காட்டில் நீ தனியாகச் செல்லலாமா? பெரியவர்கள் யாரும் வரவில்லையா? என்று அக்கறையோடு கேட்பதுபோல் நடித்தது ஓநாய்.

அம்மாவுக்கு அவசர வேலை. அதான் என்னை அனுப்பினார். உன்னைப்போல் நல்லவன் இருக்கும்போது எனக்கு என்ன பயம்? என்று கேட்டாள் சிவப்பு அங்கி தேவதை.

அதானே, நான் இருக்கும்போது இங்கே பயம் ஒன்றும் இல்லை. அங்கே பார் அழகான பூக்கள்! என்று பேச்சை மாற்றியது ஓநாய்.

பூக்களைச் சேகரித்தாள் சிவப்பு அங்கி தேவதை.

இது யாருக்கு?

பாட்டிக்குப் பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும்.

ஓ! அப்படியா! அதோ அங்கே பூக்கள் அதிகம் இருக்கின்றன. அவற்றையும் பறித்துவிட்டு, பாட்டியைப் பார்க்கச் செல். நான் வருகிறேன் என்று கிளம்பியது ஓநாய்.

ஒவ்வொரு பூவைப் பறிக்கும் போதும் தூரத்தில் மற்றொரு பூ அழகாகத் தெரிந்தது. ஒவ்வொன்றையும் பறிக்க ஓடினாள்! ஓடினாள்! ஓடிக் கொண்டே இருந்தாள். காட்டின் மையப் பகுதிக்கே சென்று விட்டாள்.

ஓநாய் பாட்டியின் வீட்டுக்குச் சென்று மெதுவாகக் கதவைத் தட்டியது.

யாரது? என்று கேட்டார் பாட்டி.

உங்கள் பேத்தி சிவப்பு அங்கி தேவதை வந்திருக்கிறேன். கேக்கும் பழரசமும் கொண்டு வந்திருக்கிறேன். கதவைத் திறங்கள் என்றது ஓநாய்.

என்னால் அசையக் கூட முடியாது. தாழ்ப்பாளை மேலே தூக்கிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வா என்றார் பாட்டி.

கதவைத் தள்ளிக் கொண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது ஓநாய். உடல் நிலை சரியில்லாத பாட்டியைக் கட்டிப் போட்டு, கட்டிலின் கீழே தள்ளிவிட்டது. பிறகு பாட்டி அணிந்திருந்த ஆடைகளை அணிந்து கொண்டு, தொப்பியால் முகத்தை மூடியபடி, கட்டிலில் படுத்துக் கொண்டது ஓநாய்.

திடீரென்று சிவப்பு அங்கி தேவதைக்குப் பாட்டியின் நினைவு வந்துவிட்டது. வீட்டைத் தேடி ஓடினாள்.

வீடு திறந்து கிடந்தது. இன்று ஏதோ சரியில்லாதது மாதிரி இருக்கே என்று யோசித்தவள், பாட்டி, காலை வணக்கம். உங்களுக்காக என்ன கொண்டு வந்திருக்கேன் என்று பாருங்கள்? என்று கத்தினாள் .

பதில் இல்லை. படுக்கைக்கு அருகே சென்று, போர்வையை விலக்கினாள். தொப்பியைத் தூக்கிப் பார்த்தவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

எப்படி இவ்வளவு பெரிய காதுகள்? கண்களும் வேற மாதிரி இருக்கே? கைகள் ஏன் இவ்வளவு நீளமாக இருக்கின்றன? அப்புறம் அந்த வாய் ஏன் இப்படி அண்டா மாதிரி அகலமாக இருக்கிறது? என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சிவப்பு அங்கி தேவதை.

நீ சொல்வதைக் கேட்பதற்குப் பெரிய காதுகள். உன் அழகைப் பார்த்து ரசிக்கப் பெரிய கண்கள். உன்னை வாரி அணைக்க நீளமான கைகள் என்று சொல்லிக் கொண்டே, சிவப்பு அங்கி தேவதை மீது பாய்ந்தது ஓநாய். அவளையும் கட்டிப் போட்டு கட்டிலுக்குக் கீழே படுக்க வைத்தது. பிறகு தானும் கட்டிலில் படுத்து தூங்கிவிட்டது.

அந்த வழியே வந்தார் ஒரு வேட்டைக்காரர். என்ன இது, பாட்டி யின் குறட்டை கர்ண கொடூரமாக இருக்கே? என்று கேட்டுக்கொண்டே வீட்டுக்குள் எட்டிப் பார்த்தார். ஓநாய் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

‘ஆஹா! சரியான வேட்டை. உன்னை தான் தேடிக் கொண்டிருந்தேன்’ என்று நினைத்துக்கொண்டே அருகில் வந்த வேட்டைக்காரருக்குத் திடீரென்று பாட்டி ஞாபகம் வந்தது. கட்டிலில் ஓநாய், அப்படியானால் பாட்டி எங்கே என்று சுற்றுமுற்றும் தேடினார். கட்டிலுக்கு அடியே பாட்டியும் சிவப்பு அங்கி தேவதையும் இருப்பதைப் பார்த்தார். உடனே இருவரின் கட்டுகளையும் அவிழ்த்து விடுவித்தார். ஓநாயை அழைத்துச் சென்றார். பாட்டியும் சிவப்பு அங்கி தேவதையும் நிம்மதியாகப் பழரசம் சாப்பிட்டனர்.



**மேலே கொடுக்கப்பட்டிருக்கும் படத்தில் எத்தனை கையுறைகள் உள்ளன என்பதைக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.**

# தொட்டால் சுருளும்...!!!

சிறுவயதில்நம்மில்பெரும்பாலானோர் ரயில் பூச்சி என்று நாம் அழைக்கும் அதிகமான கால்களை உடைய ஒரு கறுப்புவண்ண பூச்சியை பார்த்திருப்போம். மிக வேகமாக ஊர்ந்து செல்லும் அந்தப்பூச்சியை நாம் தொட்டதும் அது வட்டமாக சுருண்டு கொள்ளும். அந்தப்பூச்சியின் நீளம் அதிக பட்சமாய் 4 முதல் 5 செ.மீ வரை இருக்கக்கூடும். அதே போன்றதொரு பூச்சி... ஆனால் அதன் நீளம் கிட்டத்தட்ட 12 முதல் 15 செ.மீ வரையானது. அவ்வளவு நீளமான உயிரினம். அழகாக ஊர்ந்து செல்லும் இந்தப் பூச்சி தொட்டதும் தன்னை தற்காத்துக்கொள்ளும் முயற்சியாக சுருண்டு நடிக்கிறது.





ஒரு வண்ண மயமான இலைப்புழு வகை பூச்சி .



இதன் நீளம் 4 முதல் 5 செ.மீ வரையும் அகலம் கிட்டத்தட்ட 2செ.மீவரையும் இருக்கக்கூடும். ஆனால் இதை தொட்ட போது தனது தலைப்பகுதியை உடலில் வால்பகுதிக் குள் நுழைத்து ஒரு பந்து போல தன்னை மாற்றிக்கொள்ளும்.





# இது எந்த நாடு?

## ஆயிரம் ஏரிகளின் நாடு



**கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.**

1. வட கிழக்கு ஐரோப்பாவிலுள்ள ஒரு நாடு. ரஷ்யாவிடமிருந்து 1917இல் சுதந்திரம் பெற்றது. ஐரோப்பிய யூனியனில் 1995இல் இணைத்துக் கொண்டது.
2. ஸ்வீடன், நோர்வே, ரஷ்யா ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டது.
3. இதன் தலைநகரம் ஹெல்சிங்கி. 1952இல் ஒலிம்பிக் போட்டிகள் இந்த நகரில்தான் நடந்தது.
4. பழுப்பு நிறக் கரடி இந்த நாட்டின் தேசிய விலங்கு. சாம்பல் நிற ஓநாய்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.
5. Whopper Swan என்ற அன்னம் தேசியப் பறவை. பறக்கக் கூடிய, அதிக எடை கொண்ட பறவைகளில் இதுவும் ஒன்று.
6. இந்த நாட்டில் சுமார் 1,87,000 ஏரிகள் உள்ளன. அதனால் ‘ஆயிரம் ஏரிகளின் நாடு’ என்ற பெயரும் இதற்கு உண்டு.
7. இந்த நாட்டுக் கொடியில் இருக்கும் நீலம் ஏரிகளையும், வெண்மை பனியையும் குறிக்கின்றன.
8. இந்த நாட்டின் மென்பொறியாளர் Linus Benedict Torvalds உருவாக்கிய ஓபன் சோர்ஸ் மார்கெட்டிங் சிஸ்டம் Linux.
9. மிகப் பெரிய அலைபேசி நிறுவனமான நோக்கியா, இந்த நாட்டைத்தான் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.
10. பெண்கள், குழந்தைகள் முன்னேற்றத்திலும் அனைவருக்கும் சம உரிமை அளிப்பதிலும் முன்னணி வகிக்கும் நாடு. 1907ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தேர்தலில் 19 பெண்கள் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**விடை: ஃபின்லாந்து**

# காலமும் 07 கணங்களும்

## தமிழர் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற

# பொன்னாலையின் வரலாற்றை எழுதியிருக்கும் மூத்த படைப்பாளி வரதர்

- முருகபூபதி - ஆஸ்திரேலியா -

இலங்கையில் மூவினத்தவர்களினதும் அரசியல் வாழ்வை நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு துப்பாக்கியின் வேட்டுக்கள் புரட்டிப்போட்ட சம்பவம் நடந்த வடஇலங்கையின் யாழ்.குடா நாட்டுக்கு வடமேற்கே அமைந்த பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில் பற்றி அறிந்தவர்கள் அநேகர்.

1975 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி வேலுப்பிள்ளை பிரபாகரனின் கரத்திலிருந்த துப்பாக்கியிலிருந்து சீறிப்பாய்ந்த தோட்டா அன்றைய யாழ்ப்பாண நகர மேயர் அல்ஃபிரட் துரையப்பாவை உலகிலிருந்து விடைபெறச்செய்தது.

அன்று தொடங்கிய பிரபாகரன் முன்னிலை வகித்த ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வருவதற்கு ஏறக்குறைய நான்கு தசாப்தங்கள் சென்றன. அல்ஃபிரட் துரையப்பா முதல் காமினி வரையில் தொடர் எழுதிய அற்புதனும் துப்பாக்கி வேட்டிலேயே விடைபெற்றார்.

இலங்கை அரசியல் வரலாற்றை உன்னிப்பாக கவனித்தால், சில தமிழ்த் தலைவர்கள் கோயில்களிலும் தேவாலயத்திலும் வழிபடச்சென்றவிடத்து தமது உயிரைக் காணிக்கையாக்கியிருப்பது தெரிய வருகிறது.

அவ்வாறே காத்தான்குடி மசூதியில் தொழுகை நடத்தச்சென்ற முஸ்லிம் சகோதரர்களும் துப்பாக்கி வேட்டுக்களுக்கு தமது இன்னுயிரை காணிக்கையாக்கி இருக்கின்றனர்.

அல்ஃபிரட் துரையப்பாவில் தொடங்கி ஜோசப் பரராஜசிங்கம், மகேஸ்வரன் வரையில் இக்காணிக்கை நீடித்திருக்கிறது. இம்மூவரும் கோயில் வளாகத்தில் பரகதியடைந்தாலும் இச்சம்பவங்களின் சூத்திரதாரிகள் இதுவரையில் சட்டத்தின் கையில் சிக்கி சரியான முறையில் நீதியினால் தண்டிக்கப்படவில்லை. பிரபாகரன்தான் துரையப்பாவைக்கொன்றார் என்ற தகவல் காலம் கடந்தே கசிந்தது.

இவ்வாறு அரசியல் ஏடுகளில் பதிவான பொன்னாலையின் சரித்திரத்தை இலக்கியமாக்கிய எம்மில் ஒருவர் பற்றியதே இந்தப்பதிவு. அவர்தான் வரதர் என அழைக்கப்பட்ட ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தி.ச. வரதராசன்.

அவர் தாம் பிறந்து தவழ்ந்த பொன்னாலைக் கிராமம் பற்றி இவ்வாறு வர்ணிக்கிறார்.


மிகச் சிறிய கிராமம். அப்போது மிக ஏழைக்கிராமம் என்றுகூடச்சொல்லலாம். ஏழைக் கிராமமாக இருந்தபோதிலும் அதற்கு ஒரு செல்வாக்கும் நல்ல வரலாறும் உண்டு. அந்தப்பெருமையைத்தந்தது பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம். அந்தச்சுற்றுவட்டாரமெங்கும் மிகவும் புகழ்வாய்ந்த ஆலயம்.

ஏதோ ஒரு காலத்தில் அந்தக்கோயிலுக்கு பிரமாண்டமான கட்டடங்களும் ஏழு வீதிகளும் இருந்தமையைச் சொல்வார்கள். கடைசியாக ஒல்லாந்தர் அந்தக்கோயிலை இடித்து சங்கிலித்தொடராக ஆட்களை நிறுத்தி அந்தக் கற்களைச் சங்கானைக்கும் வேறு இடங்களுக்கும்



கொண்டுசென்று வேறு கட்டடங்கள் கட்டியதாகச் சொல்வார்கள்.

சிறுவயதில் எங்களுடைய விளையாட்டுக்களம் அந்தக் கோயிலும் அதன் வீதிகளும்தான் என்று 1928 ஆம் ஆண்டளவில் நான்கு வயதுச்சிறுவனாக இருந்த காலத்தில் அந்தப்பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம் எவ்வாறு இருந்தது என்று 1991ஆம் ஆண்டு எழுதுகிறார்





வரதர். தற்பொழுது அந்த ஆலயம் 108 அடி உயரமான இராஜகோபுரத்துடனும் புதிய மணிமண்டபத்துடனும் காட்சி அளிக்கிறது.

ஆனால் , அந்தக்காட்சியை காண்பதற்கு அவரும் இல்லை.! அந்த இடத்தில் பலியான அல்ஃபிரட் துரையாப்பாவும் இல்லை! புகலிடத்திலிருந்து அந்த ஆலயத்தின் தற்போதைய தோற்றத்தையும் அதன் கீர்த்தியையும் இணையத்தில் எம்மால் பார்க்கமுடிகிறது.

தாம்பிறந்த பொன்னாலை ஊரின் மகிமையை வாசகர்களுக்கு நீண்ட பதிவில் (மல்லிகை - மார்ச் 1991) சொல்லியிருக்கும் வரதருக்கும் எனக்கும் இடையிலான இலக்கிய நட்புறவு சாசுவதமானது.

அவருடைய தலைமையில் எனக்கு வரவேற்புக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் 1986 ஆம் ஆண்டு நடந்தது. பின்னர், பல ஆண்டுகள் கடந்து, 1999 இல் கொழும்பில் எனது தலைமையில் அவருக்கு வரவேற்புக்கூட்டம் நடந்தது. இரண்டையும் ஒழுங்குசெய்தவர் மல்லிகை ஜீவா. அதன்பின்னர் நான்கு ஆண்டுகள் கடந்து 2003 ஆம் ஆண்டு அவருக்கும் எனக்கும் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விருதுகள் கிடைத்தன.

வழங்கியவர் தற்பொழுது பிரதமராக பதவியிலிருக்கும் ரணில் விக்கிரமசிங்க. (2003 இலும் ரணில்தான் பிரதமர்) வரதருக்கு அந்த ஆண்டுக்கான சாகித்தியரத்னா விருது வழங்கப்பட்டது. இலங்கை கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட சாகித்திய விருதுவழங்கும் விழாவுக்கு இந்தியாவிலிருந்து பிரதமவிருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார் பேராசிரியரும் எழுத்தாளருமான கன்னட இலக்கிய மேதை யூ.ஆர். அனந்தமூர்த்தி.

அன்றைய விழாவில் வரதருக்கான சாகித்தியரத்னா விருதுக்குரிய சிறப்புரையை சாகித்திய அமைப்பின் தமிழ்ப்பிரிவுச் செயலாளர் பேராசிரியர் க.அருணாசலம் தமிழில் நிகழ்த்தினார். அரசியல் தலைவர் களும் பௌத்த பிக்குகளும் தமிழ், முஸ்லிம், சிங்கள எழுத்தாளர்களும் நிறைந்திருந்த அந்த மண்டபத்தில் அந்த ஆண்டின் சாகித்தியரத்னா அமைதியாக அமர்ந்திருந்து பூமாலையையும் விருதையும் சான்றிதழையும் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார்.

மறுநாள் கொழும்பில் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் நண்பர் ஸ்ரீதரசிங்கின் இல்லத்தில் இலக்கிய நண்பர்கள் இணைந்து அவருக்கு தேநீர் விருந்துபசாரம் வழங்கினோம்.

அதிர்ந்துபேசத்தெரியாத வரதர் ஈழத்தின் மூத்த இலக்கியவாதி. எழுத்தாளர், பதிப்பாளர், இதழ்களின் ஆசிரியர். அத்துடன் ஓர் அச்சகத்தின் அதிபர். எந்தவொரு எழுத்தாளருடனும் அவருக்கு முரண்பாடுகள் ஏற்பட்டன எனத் தகவல் ஏதும் இல்லை. எனக்கு அவரை 1975 ஆம் ஆண்டு முதல் முதலில் அறிமுகப்படுத்தியவரும் மல்லிகைஜீவாதான். அவருடைய ஆனந்தா அச்சகத்திற்கு அழைத்துச்சென்ற ஜீவாவிடம், இவர் யார்? என்று நான் கேட்டபோது, பூபதி

## ஈழத்து மறுமலர்ச்சி இலக்கிய முன்னோடி சாகித்தியரத்னா தி.ச. வரதராசன் (1924 – 2006) நினைவுகள்

இவர்தான் எங்கள் வரதர் என்றார்.


அவரை அதற்கு முன்னர் எங்கோ பார்த்தது போன்ற நினைவு கனவாக மனதில் விரிந்தது. எங்கள் ஊரில் நான் பாடசாலை மாணவனாக இருந்த காலப்பகுதியில் எமது தாய்மாமனாரிடம் கடற்கரைவீதியில் ஒரு பலசரக்கு அரிசிக்கூப்பன் கடை இருந்தது. அதனை பாலா கடை என்று ஊரில் அழைப்பார்கள். நாம் எமது மாமாவைபாலா மாமா என்போம்.

இலங்கையிலிருக்கும் தமிழ்க்கடைகள், மற்றும் தமிழர்களினால் நடத்தப்படும் அமைப்புகள், கோயில்கள், முதலானவற்றைப் பற்றிய விபரங்களை முகவரிகளுடன் வெளியிட்ட வரதர் பலகுறிப்புகளையும் இலங்கையின் அனைத்துப்பிரதேசங்களிலும் வதியும் தமிழ் மக்கள் பற்றிய தகவல்களையும் வரிசைக்கிரமமாக தொகுத்து வரும் இந்த வரதர்தான் என்பதையும் அன்றைய சந்திப்பில் அறிந்துகொள்ள முடிந்தது. வரதர் பலகுறிப்புகள் என்ற பெரிய தொகுப்பு நூலில் எமது மாமாவின் கடை முகவரியும் அவர் பற்றிய விபரங்களும் இருந்தன.

இலங்கையின் மேற்குக்கரையில் வாழ்ந்த தமிழ்மக்களைப்பற்றிய குறிப்புகளை தேடிவந்து சேகரித்த வரதர் - அந்தக்காலத்தில் பஸ்ஸிலும் ரயிலிலும் கால்நடையாகவும் அலைந்து அலைந்து தகவல் திரட்டி அந்தக் குறிப்புகளை தொகுத்து அழகாக பைண்ட் செய்து வெளியிட்டு எமது தமிழ்மக்களின் பயன்பாட்டுக்கு உதவினார்.

இன்று தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர் வழிகாட்டி நூல்கள் பல ஆண்டுதோறும் வெளியாகின்றன. ஆஸ்திரேலியாவில் வெளியாகும் Yellow Pages முதலான தொகுப்புகளுக்கு ஈடானது வரதரின் பலகுறிப்புகள். அதற்காக அவர் செலவிட்ட நேரம் பெறுமதியானது. அவரிடம் சொந்தமாக ஆனந்தா அச்சகம் யாழ்ப்பாணத்தில் இருந்தது. அதனால் ஆனந்தன், தேன்மொழி, வெள்ளி, புதினம், அறிவுக்களஞ்சியம் முதலான இதழ்களையும் நடத்தியவர்.

1946ஆம் ஆண்டளவில் வெளியான மறுமலர்ச்சி இதழின் ஆசிரியர் குழு



விலும் அங்கம் வகித்தவர். தேன்மொழி இதழுக்கு வரதருடன் இணையாசிரியராக இருந்தவர் மகாகவி உருத்திரமூர்த்தி.

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அக்காலத்தில் உந்துசக்தியாக விளங்கிய யாழ். மறுமலர்ச்சிச் சங்கத்திலும் வரதர் இணைந்திருந்தவர். பின்னாளில் பல எழுத்தாளர்களின் நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டிருக்கிறார்.

எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய ஒருமைப்பாடு மாநாட்டை கொழும்பில் நடத்தியபொழுது வெளியிட்ட புதுமை இலக்கியம் மாநாட்டு மலரையும் வரதரே அச்சிட்டுத்தந்தார். அவர் எமது சங்கத்தில் இணைந்திருந்தார் என்று ஜீவாவின் ஒரு குறிப்பு சொல்லியிருந்தாலும், நான் அறிந்தமட்டில் அவருக்கு எமது சங்கத்துடன் அடிப்படையில் தீவிரமான உறவு இருந்ததா..? என்பது சந்தேகமே. கம்யூனிஸ்டுகள் அதிகம் அங்கம் வகித்த அச்சங்கத்தில் வரதர் அதிகம் ஈடுபாடு காண்பிக்காதுவிட்டாலும், யாழ். இலக்கிய வட்டத்தில் இணைந்திருந்தார். வரதர் முற்போக்கான சிறுகதைகளை எழுதியிருந்தபோதிலும்





தன்னை ஒரு முற்போக்கு வாதி என்று பிரகடனம் செய்துகொண்டதில்லை. வரதரின் கற்பு என்ற சிறுகதை குறிப்பிடத்தக்கது.

1975 ஆம் ஆண்டு முதல் முதலில் நான் அவரைச் சந்தித்தபொழுது எனது முதல் நூலின் (சுமையின் பங்காளிகள்) பிரதிகள் சிலவற்றை வாங்கி தமது அச்சகத்தில் அமைந்த புத்தகக்கடையில் விற்பனைக்கு வைத்தார். அவற்றை கண்ணாடி அலுமாரியில் காட்சிப்படுத்த முன்னர் ஒரு பிரதியை பணம்கொடுத்து வாங்கினார். ஓராண்டு கழித்து எனது நூலின் பிரதிகள் விற்ற பணத்தை கழிவுகள் எதுவும் இன்றிகையிலே தந்தார். தமிழ் எழுத்தாளன் வாழ்வை நன்கு தெரிந்த எழுத்தாளர் வரதர்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

**இந்தக் கட்டுரை இன்று (02.09.2018) தென்னை தினத்தினை ஒட்டி பிரசுரிக்கப்படுகிறது.**



# தென்னைகளுக்கு நோய்த் தாக்கங்கள்;

## கட்டுப்படுத்தி பயன் பெறுவோம்

### தண்டு கசிவு நோயும் கட்டுப்படுத்தலும் (Stem bleeding disease and its control)

தென்னைகளுக்கு தண்டு கசிவு ஒரு பொதுவான நோயாகும். மின்னல் மேலதிகமாக உரமிடல், தீயால் ஏற்படும் சேதம், பெரும் மழை அல்லது வெள்ளம், செவ்வண்டுத் தாக்கம் ஆகிய காரணிகளால் அடி மரத்திலிருந்து தண்டுக் கசிவு ஏற்படும். இச் சந்தர்ப்பத்தில் எல்லா தென்னை மரப்பட்டையில் நீளப் பாடான வெடிப்புத் தோன்றும். 'செரே ரோசிஸ்ரிஸ் பரடொக்சா" (Ceratocystis paradoxa) என்னும் பங்கசு பலவீனம் அடைந்த இழையங்களைத் தாக்கி ஊடுருவும். பங்கசுத் தாக்கம் கசிவை அதிகரிக்கச் செய்யும்.

**அறிகுறிகள் -**

தென்னை மரத்தின் அடியில் (தண்டில்) நீளப்பாடான வெடிப்பு தோன்றி செங்கபில துரு நிறமான திரவம் கசிவதே ஆரம்ப அறிகுறியாகும். இப் பகுதி கருமையாகி முடிவில் நரை கலந்த சிவப்பாக மாறும். இந் நோய் பல பகுதிகள் ஒன்று சேர்ந்து பெரிய பகுதிகளை உண்டாக்கும். நாட் செல்ல இப் பகுதியில் இருந்து திரவம் கசியாது. திரவம் கூழ்போல் தடித்து பிசின் போல் தோன்றும். கீறுகளாகக் கட்டிபடும். தொற்றல் ஏற்பட்ட பகுதியின் சிறு துண்டைக் கூரிய கத்தியால் மேலாக வெட்டி



எடுத்தால், கீழ் உள்ள நார்த் தன்மையபான இழையம் கறுப்பு நிறமாகவும் உக்கியும் காணப்படும்.

உருண்டையாக பருத்த அடி கொண்டு வீரியமாக வளரும் இளம் மரங்களில் இதேபோல வெடிப்பைக் கொண்டிருக்கும்.

✻ தீயினாலும், மின்னலினாலும் ஏற்பட்ட பாதிப்பை இலகுவில் கண்டு பிடிக்கலாம். பரிகாரத்தைத் தொடங்கு முன்பு செவ்வண்டுத் தாக்கம் உள்ளதா எனப் பார்ப்பது முக்கியமானதாகும். (வண்டு வெளி வரும் துவாரங்கள் அரிக்கப்பட்ட தும்பு, வண்டரிக்கும் சத்தம் முதலின அறிகுறியாகும்.)

✻ போசணைகளினதும், நீரினதும் சடுதியான உள்ளெடுப்பும், மரப்பட்டையில் வெடிப்பை ஏற்படுத்தி பங்கசு உட் செல்ல வழி வகுக்கும்.

✻ தண்டுக் கசிவினால் இளம் மரங்களே கூடியளவு தாக்கப்படுகின்றன. சிகிச்சை செய்யாவிடின் மரம் விரைவில் பட்டுவிடும்.

**தண்டுக் கசிவுக்கான ஏனைய காரணிகள் -**

"கனோடேமா" (Ganodema boninians) என்ற பங்கசுவால் தாக்கப்பட்ட தென்னைகளிலும் தண்டுக் கசிவு ஓர் அறிகுறியாகும். மரத்தின் அடிப்பகுதியில் அடைப்புக்குறி போன்ற பங்கசு இழைகள் இந் நோயின் பிரத்தியேக அறிகுறி ஆகும். இன்னோர் வகையான பங்கசு Ganodema Lusidam இனாலும் ஏற்படலாம்.

✻ போசனைகளினதும், நீரினதும் சடுதியான உள்ளெடுப்பும், மரப் பட்டையில் வெடிப்பை ஏற்படுத்தி பங்கசு உட் செல்ல வழிவகுக்கும்.

✻ தண்டுக் கசிவினால் இளம் மரங்களே கூடியளவு தாக்கப்படுகின்றன. சிகிச்சை உடனடியாக செய்யாவிடின் மரம் விரைவில் பட்டுவிடும்.

✻ தண்டுக் கசிவினால் தாக்கப்பட்ட மரத்திலிருந்து குரும்பைகள் வாடி விழுவதுடன், ஓலைகள் கருவி தண்டின் அனேகமான பகுதிகள் உக்கியும் காணப்படும். இந்த நிலையில் தான் மரம் இறப்பு ஏற்படும்.

**கட்டுப்பாட்டு முறைகள் -**

✻ இந் நோயை ஆரம்பத்தில் கண்டு பிடித்தால், குணமாக்குவது சுலபம்.

✻ பாதிக்கப்பட்ட கரிய நிறப்பரப்புக்களை அல்லது பிசின் வடிகின்ற பகுதிகளை கூரிய கத்தியினாலோ, உளி, கைக்கோடாரி உதவியுடனோ ஆரோக்கியமான இளம் சிவப்பு நிற இழையங்கள் வெளிப்படும் வரை (மேற்பட்டை மட்டும்) உக்கிய கரித் தன்மையான, நார்த் தன்மையான பட்டையும் முற்றாக அகற்றப்படல் வேண்டும். இதனை, உடனேயே ஓரிடத்தில் போட்டு எரித்து விட வேண்டும். பின்பு, தாக்கப்பட்ட பகுதி வெட்டப்பட்டு தொற்றால் ஏற்பட்ட இழையால் துப்பரவாக்கப்பட்டு 'போடாக்ஸ்' கலவையினை (Bordeaux Mixture) தும்பினால் அல்லது பிரசினால் தாராள மாக பூச வேண்டும். போடாக்ஸ் பசையும் பாவிக்கலாம்.

✻ மேற்கூறப்பட்ட செயன்முறைகளுடன் மேலதிகமாக கசிவு ஏற்பட்ட இடத்திற்கு ஓர் அடிக்கு மேலாக இரண்டு அங்குல அளவு அகலத்திற்கு மரத்தில் சுற்றிவர மேற்பட்டையை வெட்டி அகற்றிய பின்பு போடோ கலவையினை பூச வேண்டும். இதனால் பங்கசு தாக்கம் மேற்பட்டையினூடு தென்னை மரத்தின் நுனிக்கு (வட்டுப் பகுதிக்கு) செல்வதனைத் தடுக்க முடியும்.

✻ 10 நாள்களின் பின்பு வேறு தொற்றாலோ அல்லது கசிவோ கவனிக்கப் படாத இடத்து காயங்கள் மேல் கரித்தார் அல்லது சொலிக்கனம் பூசலாம்.

✻ இப்படியான சில சந்தர்ப்பங்களில் கறையான்கள் துணைப்பீடைத் தாக்கத்தையும் உண்டாக்காலம்.

✻ தண்டு கசிவு மின்னலினால் ஏற்பட்டிருக்குமாயின், தண்டின் அடிப்பகுதியில் சரிவான துவாரங்களை ஏற்படுத்தி திரவங்களை வெளிப்படுத்தல் நல்ல பயனளிக்கும். பின்பு அந்த துவாரங்களை



சிமெந்தால் மூடிவிடலாம்.

✻ கட்டுப்பாடு செய்ய முயற்சிக்கும் முன்பு தென்னைச் செய்கையாளர்கள் தண்டு கசிவுக்கான காரணத்தை கவனமாக ஆராய்ந்து கட்டுப்பாடு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

**போடாக்ஸ் பசை (Bordeaux Paste)**

2.25 லீற்றர் நீரில் 450 கிராம் செப்பு சல்பேற் (துரிசு) கரைத்து பெறப்பட்ட கரைசலுடன் 450 கிராம் சுட்ட சுண்ணாம்பு சேர்த்து கரைத்துப் பெற்ற பசை தான் "போடாக்ஸ் பசை". (Bordeaux Paste) ஆகும்.



**போடாக்ஸ் கலவை (Bordeaux Mixture) தயாரித்தல்**

மட்பாண்டங்களைப் பாவித்து பின்வருமாறு கலவை தயாரிக்கவும்.

செப்பு சல்பேற்று (துரிசு) – 200 கிராம்

நீறிய சுண்ணாம்பு – (Quickline) 200 கிராம்

நீர் – 25 லீற்றர்

### தென்னையில் குருத்தழுகல் நோயும், அதன் கட்டப்பாடும் Bud rot Disease and its Control Method)

குருத்து முளை அழுகல் நோய் தென்னையைக் கொல்லக் கூடிய ஒரு நோயாகும். வளரும் முளையைத் தாக்கும் "பைற்றோப்தொறா பாமிவோறா" (Phytopththora Pamivora) எனும் பங்காசால் இந் நோய் ஏற்படும். வளரும் முளை தாக்கப் பட்டால் மரம் குணமடையாது. இலங்கை யில் இந்நோய் அதிகளவு இல்லை. ஆயினும் இந்நோய் தூரம் ஒரு மரத்தில் அங்கும் இங்குமாக இருக்கலாம்.

✻ ஏனைய பங்கசுகளைப் போல் ஈரளிப்பான சீதோஷன நிலையின் போது முளை அழுகல் கூடவாக இருக்கும்.

✻ கீழ் நடுகை செய்யப்பட்ட தென்னைகளில் இது கூடுதலாகவும், அடிக்கடி வெள்ளத்திற்குள்ளாகும். ஆற்றங்கரைகளில் உள்ள தென்னை மரங்களிலும் கூடுதலாக காணப்படும்.

3 – 45 வருட வயதுடைய தென்னைகளைத் தாக்கும்.

**அறிகுறிகள்**

அழுகி முளை சரிந்து விழும் போது தான் இந் நோய் வெளியாகும். இந் நிலையில் குணமாக்க முடியாது. முளைப் பகுதியைக் கூர்ந்து சோதித்தால் ஈட்டி போல் தோன்றும். குருத்தின் அடியில் கறை பிடித்து வாடியிருக்கும். இளம் ஓலைகளும் மஞ்சளாக மாறக் கூடும். குருத்தினைக் கையால் இழுக்கும் போது கையுடன் வந்து விடும். அத்துடன் துர் நாற்றம் வீசும்.

✻ வாடிய தென்னோலை கபில நிறமாக மாறி காய்ந்து போகும். அதேவேளை கீழ்ப்பகுதி தென்னோலைகள் ஆரோக்கியமானதாக இருக்கும். இப் பருவத்தில் பூந்துணர் கருகுதலும், முதிராத காய்கள் (குரும்பை) விழுதலும் ஏற்படும்.

**கட்டுப்பாடு -**

✻ நோய் வாய்ப்பட்ட மரங்களைத் தறித்து உடனடியாக வட்டுகளை எரிக்கவும். முளை அழுகல் நேரத்துடன் அவதானிக்கட்டால் முளைப் பகுதியை 'போடோ கலவை' அல்லது 1% வீதம் செப்பு பங்கசு, நாசினியைக் கொண்டு நன்றாக வட்டினை நனைக்க வேண்டும்.

✻ காய்க்கின்ற, முதிர்ந்த மரங்கள் தாக்கப்பட்டால், காய்கள் முதிரும் வரை குலைகளை வைத்திருக்கலாம்.

✻ இருந்தாலும் பங்கசுவைக் கொல்வதற்காக முளைப் பகுதியை "போடோ" கலவையினால் நனைக்கவும்.

**தடுப்பு முறை**

நோய் வாய்ப்பட்ட மரத்தைக் குணப்படுத்துவது மிகவும் கடினமாயினும் நோய் பரவுவதனைத் தடுக்கலாம். தாக்கப்பட்ட மரங்களைச் சுற்றிவரவுள்ள மரங்களுக்குத் தடுப்பு முறையாக "போடோ" கலவை அல்லது 1% செப்பு பங்கசு கொல்லி அல்லது மிகவும் வசதியாக பங்கசு கொல்லி பொட்டலங்களை யும் பாவிக்கலாம். "போடோ" கலவை அல்லது செப்பு பங்கசு நாசினி பாவித் தால், மரத்தின் முளைப் பகுதியை 2–3 கிழமைகளுக்கு ஒரு முறை நன்றாக நனைக்கவும். பங்கசு கொல்லிப் பொட்ட லங்களைப் பின்வருமாறு தயாரிக்கலாம்.

முதலில் செப்பு சல்பேற்றை (துரிசு) 5 லீற்றர் தண்ணீரில் ஒரு சாக்குப் பையில் போட்டு கரைவதற்காக ஓர் இரவு முழுவதும் தொங்க விடவும். கரையும் சுண்ணாம்பை வேறாக 20 லீற்றர் நீரில் கரைத்து மெல்லிய துணியின் ஊடாக வடிக்கவும். செப்பு சல்பேற் கரைசளை சுண்ணாம்புக் கரைசலுடன் ஒன்று சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

**குறிப்பு**

1. கலவை தயாரிக்கப்பட்டவுடன் பாவிக்க வேண்டும்.

2.சகல பங்கசு நாசினிகளும் ஆபத்தானவை, கவனமாகப் பாவிக்க வேண்டும்.

3. வேறு செப்பு பங்கசு நாசினிகளையும் பாவிக்கலாம்.

இலங்கையில் பெருமளவு செப்பு பங்கசு நாசினிகள் சந்தைப்படுத்தப் பட்டுகின்றன இவற்றில் ஏதாவது ஒன்றை போத்தலில் எழுதியுள்ள வழிகாட்டி முறையில் பாவிக்கலாம்.

**குறிப்பு -**

✻ இந்தியாவில் தண்டு கசிவு நோய் தென்கைளுக்கு வரும் முன்பே அறிந்து கொள்ளும் உபாயமாக தென்னந் தோட்டங்களில் தென்னையைச் சுற்றியுள்ள வட்டப் பாத்திகளில் துவரைச் செடிகளை வளர்த்து வருகின்றனர். அந்த துவரைச் செடிகளை கவனமாகக் கண் காணித்து வர வேளண்டும். அந்தத் துவரைச் செடியின் தண்டுப் பகுதியிலுள்ள பட்டைகளில் பிளவு (வெடிப்பு) தோன் றினால் அந்த தென்னந்தோட்டத்தில் தென்னைகளுக்கு சாறுவடிதல் நோய் (தண்டு கசிவு நோய்) வர வாய்ப்பு உள்ளது என முன் கூட்டியே அறிந்து கொள் கின்றனர்.

**ஜெ.சத்தியேந்திரன்**
சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ,
தென்னை பயிர்ச்செய்னை சபை,
யாழ்ப்பாணம்.

# மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை நாமும் வாழ்ந்து காட்டுவோம்!

## சினிமா பாணியில் சிந்திக்காதீர்கள்!!



பெற்றோர்கள் பார்த்து செய்து வைத்த திருமணத்தில் பிரச்சினை வருவதற்கு முக்கிய காரணம் எதிர்பார்ப்புகளும், கனவுகளும்தான். நான் டொக்டருக்கு படித்தவன். எனக்கு பத்தாவது வரை படித்த பெண்ணை திருமணம் செய்துவிட்டார்கள் என்பார்கள் சிலர்.

'எனக்கு கணவராக வருபவர் நன்றாக ஆங்கிலம் பேசுவார், நன்றாக கார், பைக் ஓட்டுவார், பெண்களிடம் அதிகம் பேச மாட்டார் என்று நினைத்திருந்தேன்' என்பார்கள் சிலர். 'குண்டாக இருக்கிறார், பல்லு எடுப்பாக இருக்கிறது, கறுப்பாக இருக்கிறார் இவரோடு வெளியில் செல்லவே அசிங்கமாக இருக்கிறது' என்பார்கள் சிலர். இவை, சமூகம் நம்மைப் பார்த்து என்ன சொல்லும் என்பதை மனதில் கொள்வதால் ஏற்படும் பிரச்சினை.

நாம் நமக்காக வாழ்கிறோம். சமூகம் என்ன நினைக்கும் என்பதை கவனத்தில் கொள்வதற்கு முன் உங்களை கல்யாணம் செய்து கொண்டவரின் மன நிலை பற்றி யோசியுங்கள். நாம் அழகாக இருக்கிறோம், நம்மிடம் இவ்வளவு திறமையிருக்கிறது என்பது நினைவில் இருப்பது போல் நாம் பட்ட அவமானங்களையும் நினைவில் கொள்வது நல்லது.

அது, நம் கால்களை எப்போதும் தரையில் வைத்து கொள்ள உதவும். எவ்வளவு பெரிய சண்டையானலும் சரி அதை தீர்த்து வைக்க, மூன்றாம் நபரின் துணையை நாடாதீர்கள். அது பெற்றோராக இருந்தாலும் சரி. உங்களைப் பற்றிய ரகசியங்கள் உங்களிடம் மட்டுமே இருக்க வேண்டும்.

மீறி வெளியில் தெரிந்தால் அது உங்கள் மீதான நம்பிக்கையை குறைத்துவிடும். மகிழ்ச்சி, கோபம் இவையெல்லாம் மற்றவர்களால் நமக்கு கிடைத்துவிடும். ஆனால் திருப்தி நம் மனதில் இருந்து வந்தால்தான் உண்டு.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள்தான் ராஜா, ராணி. சினிமாவில் நடப்பதெல்லாம் யதார்த்த வாழ்க்கையிலும் நடக்கும் என்று எண்ணுவது தவறு. உங்கள் கனவுகளோடு சினிமாக்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளாதீர்கள். யதார்த்தம் என்பது சினிமாக்களில் வருவதைக் காட்டிலும் நிறைய மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.



# நகங்கள் உடையாமல் பாதுகாப்பதற்கு வழிமுறைகள் தெரியுமா?

சிலருக்கு ஏதாவது சின்ன வேலை செய்தாலே நகங்கள் உடைந்து போய் விடும்படி இருக்கும். இதற்கு காரணம், சரியான ஊட்டம் இல்லாததுதான். இன்னும் சிலருக்கு நகங்கள் கடினத் தன்மையுடன் இருக்கும். நகங்கள் உடையாதபடி, நீண்டு வளர உங்களுக்கு எளிமையான வழிமுறைகளைப் பார்க்கலாம்.

தினமும் நகங்களுக்கு பாதாம் எண்ணெயை இரவில் தூங்கப்போகும் முன் தடவி வாருங்கள். நகங்கள் ஊட்டம் பெறும். உங்களுக்கு கடினமான நகங்கள் இருந்தால், ஒலிவ் எண்ணெயை நகங்களில் தடவி நீவி விட்டால் மென்மையாக மாறிவிடும்.

கால் விரல்களில் சிலருக்கு சொத்தை ஏற்படும். கைகளில் கூட உண்டாகும். இதற்கு சிறந்த தீர்வு ரோஸ் வோட்டரை நகங்களுக்கு தடவி வாருங்கள். சொத்தை நகம் கீழே விழுந்து, புதிய நகம் முளைக்கும். இது தவிர நகங்கல் உடையாமலிருக்க கீழே சொல்லப்பட்டிருக்கும் குறிப்பைப் பயன்படுத்துங்கள்.

தேவையானவை :

எலுமிச்சை சாறு –1மேசைக்கரண்டி

பாதாம் எண்ணெய் – அரை தேக்கரண்டி

லாவெண்டர் போன்ற ஏதாவது வாசனை எண்ணெய் – சில துளிகள்

பாதம் எண்ணெயை சூடுபடுத்தி, அதில் எலுமிச்சை சாறை விடவும். பின் வாசனை எண்ணெயை கலந்து ஒரு பஞ்சினால் நகத்தில் தேய்க்கவும். வாரம் 3 நாள்கள் இப்படி செய்யுங்கள். நகங்கள் உடையமாட்டா. பலம் பெறும். வேகமாகவும் வளரும்.

உங்கள் நகங்கள் ஆரோக்கியத்தின் குறியீடு. நகத்தின் ஓரங்களில் ஏதாவது தொற்று ஏற்பட்டால் கூட அது ரத்த நாளங்களை எளிதில் சென்றடையும். ஆகவே அடிக்கடி நகத்திற்கு 'பொலிஷ்' போடாமல் நகத்தின் இடுக்களை சுவாசிக்க விடுங்கள். இயற்கையான மருதாணியை அரைத்து போடுவதால் நகங்களில் உண்டாகும் பாதிப்புகள் மறைந்துவிடும்.

# சருமத்தைப் பிரகாசமாக்க சிறந்தது முல்தானி மெட்டி

## பயன்படுத்தி பாருங்களேன்!



அழகை அதிகரிக்க உதவும் ஓர் அற்புதமான அழகுப் பொருள் தான் முல்தானி மெட்டி. இதைக் கொண்டு ஒருவர் தங்கள் சருமத்திற்கு பராமரிப்பு கொடுத்து வந்தால், சருமத்தின் நிறம் அதிகரிப்பதோடு, பல்வேறு சரும பிரச்சினைகள் வராலும் தடுக்கலாம். ஏனெனில் முல்தானி மெட்டியில் சரும பிரச்சினைகளைப் போக்கும் பண்புகள் ஏராளமாக நிறைந்துள்ளன.

ஒரு சிறிய பாத்திரத்தில் முல்தானி மெட்டி பொடியைப் போட்டு, ரோஸ் வோட்டர் சேர்த்து பசையாக கலந்து கொள்ளுங்கள். பின் அதை முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் நீரில் கழுவுங்கள். இப்படி வாரத்திற்கு 3 முறை செய்து வந்தால், முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை நீங்கி, முகம் பொலிவோடும் பிரகாசமாகவும் இருக்கும்.

ஒரு பாத்திரத்தில் 1மேசைக்கரண்டி பாதாம் கலவைமா, 1 மேசைக்கரண்டி பால் மற்றும் சிறிது முல்தானி மெட்டி பொடி சேர்த்து பசையாக கலந்து கொள்ள வேண்டும். பின் முகத்தை நீரால் கழுவி, தயாரித்து வைத்துள்ள கலவையை முகத்தில் தடவி காய்ந்த பின், நீரால் கழுவுங்கள். இப்படி வாரத்திற்கு 2 முறை செய்தால், சருமம் மென்மையாக இருக்கும்.

ஒரு பாத்திரத்தில் 2 மேசைக்கரண்டி தக்காளி சாறு, 2 மேசைக்கரண்டி முல்தானி மெட்டி, 1 தேக்கரண்டி சந்தன பவுடர் மற்றும் 1 தேக்கரண்டி மஞ்சள் தூள் சேர்த்து கலந்து கொள்ளுங்கள். பின் அதை முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவுங்கள். இந்த முறையை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால், முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நீங்கி, முகம் பளிச்சென்று காணப்படும்.

1மேசைக்கரண்டி முல்தானி மெட்டி பொடி, 1 மேசைக்கரண்டி தேன் மற்றும் 1 மேசைக்கரண்டி பப்பாளி கூழ் சேர்த்து கலந்து பசையாக செய்து கொள்ள வேண்டும். பின் அதனை முகத்தில் சரிசமமாக தடவி, நன்கு காய வைத்து, பின் நீரால் கழுவ வேண்டும். இந்த முறையை வாரத்திற்கு 2–3 முறை பயன்படுத்தினால், விரைவில் முகம் பொலிவுறும்.

ஒரு பாத்திரத்தில் 2 மேசைக்கரண்டி முல்தானி மெட்டி பொடியுடன், 1 மேசைக்கரண்டி எலுமிச்சை சாறு மற்றும் 1 தேக்கரண்டி ரோஸ் வோட்டர் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின் அதை முகத்தில் தடவி, 1/2 மணிநேரம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும். இந்த முறையைத் தொடர்ச்சியாக பயன்படுத்தும் போது, சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை நீங்கி, முகப்பரு வருவது தடுக்கப்படும்.

# சமூகவலைத் தளங்களைக் கையாளும் பெண்களே சிக்கல்களில் சிக்கிவிடாதீர்!

## அடிமையாகிப் பின்னர் தவிக்காதீர்கள்!!



சமூகவலைத்தளங்களில் உலவும் பெண்கள் தங்கள் பாதுகாப்பே முதன்மையானது என்பதை மறந்துவிடக் கூடாது. உங்கள் பாதுகாப்பிற்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவமே உங்களை பிரச்சினைகளில் சிக்காமல் விழிப்புடன் வைத்திருக்கும்.

முகநூல் உபயோகிப்பவர்கள் முன்பின் அறிமுகமில்லாதவருடன் வரம்போடு தகவல்களை பரிமாறிக் கொள்ளவேண்டும். அவர்களையும் வரம்பு மீற அனுமதித்துவிடக் கூடாது.

வலைத்தளத்தில் நீங்கள் பதிவிடும் பதிவுகளை வைத்தே உங்களின் மன நிலையை பிறர் கணித்துவிடக்கூடும். எனவே உங்கள் பதிவுகளின் மீது கவனம் செலுத்தி உங்கள் பலவீனம் வெளியாகாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் சுயவிவரங்களை ஆயிரக் கணக்கான மக்கள் உலவும் வலைத் தளத்தில் தெரிவித்து உங்கள் தனிமைக்குள் அடுத்தவர் பிரவேசிக்க அனுமதிக்காதீர்கள்.

'சைபர் கிரைம்' குற்றங்கள் பெருகிவரும் இந்தக் கால கட்டத்தில் உங்கள் தகவல்களின் பாதுகாப்பு என்பது சமூக வலைத்தளங்களினால் கேள்விக்குறியாகி விட்டதுஎன்பதைஎப்பொழுதும்கவனத்தில்வைத்திருங்கள்.

சில இளம்பெண்கள் 'லைக்'குகளை குவிப்பதற்காக அரைகுறை ஆடைகளில் வீடியோக்களில் தோன்றுகின்றனர். இது ஆபத்தை விலை கொடுத்து வாங்குவது போன்றதாகும்.

சமூகவலைத்தளங்களில் உலவும் பெண்கள் தங்கள் பாதுகாப்பே முதன்மையானது என்பதை மறந்துவிடக் கூடாது. உங்கள் பாதுகாப்புக்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவமே உங்களை பிரச்சினைகளில் சிக்காமல் விழிப்புடன் வைத்திருக்கும்.

உங்களது பொருளாதார நிலை, குடும்ப உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள், குழந்தைகள் படிக்கும் பள்ளி மற்றும் குழந்தைகளின் புகைப்படங்கள், உங்களின் தனிப்பட்ட புகைப்படங்கள் போன்றவற்றை சமூக வலைத் தளத்தில் ஒருபோதும் பதிவிடக்கூடாது.

தினமும் குறிப்பிட்ட நேரத்தை மட்டும் அதில் செலவிடுங்கள். அதிக நேரத்தை செலவிட்டு அதற்கு அடிமையாகிவிடாதீர்கள்.

## இளையோர் மன்ற குறும்பட போட்டி முடிவுகள்

இளவாலை யாகப்பர் ஆலயம் (நெருடல்) குறும்படம் முதலாம் இடம். உரும்பிராய் மிக்கேல் ஆலயம் (இடையன்) குறும்படம் இரண்டாம் இடம். சாவகச்சேரி லிகோரியார் ஆலயம் (வெளிச்சம்) குறும்படம் மற்றும் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயம் (விழிகள்) குறும்படங்கள் மூன்றாம் இடம். மணல்காடு பங்கு இளையோரின் (இறை திட்டம் தேடும் இளையோர் பயணம்) குறும்படம் சிறப்புப் பரிசு

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## கிறிஸ்தவரின் சக்தி வாய்ந்த பணி செபிப்பது

ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆற்றக்கூடிய முதல் மறைப்பரப்புப் பணி செபிப்பது. அதுவே மிகுந்த சக்தி வாய்ந்ததாகவும் உள்ளது என்ற சொற்களை திருத்தந்தை தன் டுவிட்டர் செய்தியாக ஒகஸ்ட் 29 இல் வெளியிட்டார். மேலும் ஒகஸ்ட் 26, கடந்த ஞாயிறு, முன்னாள் திருத்தந்தை முதலாம் ஜான்பால் அவர்கள் திருஅவையின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டதன் 40 ஆம் ஆண்டு நினைவு சிறப்பிக்கப்பட்டது.

# மன்னார் முன்னாள் குரு முதல்வர் குரூஸ் அடிகளாரின் குருத்துவ சேவை





மன்னார், செப்.02

மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவும் முன்னாள் குருமுதல்வருமான ஏ.சேவியர் குரூஸ் அடிகளார் தமது 80ஆவது அகவையில் குருத்துவத்தின் 57ஆவது நிறைவு தினத்தை 20 டிசெம்பர் 2017 அன்று கொண்டாடினார்.

மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்னர் யாழ் மறைமாவட்டத்திலும் பிரிக்கப்பட்ட பின்னர் மன்னார் மறைமாவட்டத்திலும் சீரோடும் சிறப்போடும் பணியாற்றிய ஏ.சேவியர் குரூஸ்அடிகளார் 1938ஆம் ஆண்டு பிறந்தவர். அவர் 1961ஆம் ஆண்டு உரோமாபுரியில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

பின்னர் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் (1962 - 1965) உதவிப் பங்குத்தந்தையாகவும் உயிலங்குளத்தில் (1965 - 1967) பங்குத்தந்தையாகவும் பின்னர் முருங்கன் பங்குத்தந்தையாகவும் (1968 - 1970) யாழ் புனித மடுத்தீனார் குருமட அதிபராகவும் (1972 -1976) பணியாற்றினார். 1976-1978 காலப்பகுதியில் உரோமாபுரியில் உயர் கல்வியை மேற்கொண்ட பின்னர் 1978 - 1981 காலப்பகுதியில் யாழ் அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தையாக பணியாற்றியுள்ளார். 1981ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வரரக பணியாற்றிய இவர் அதே பணியோடு மன்னார் மறைமாவட்ட புனித செபஸ்தியார் பேராலய பங்குத்தந்தையாகவும் (1981 - 1986) மறைமாவட்ட நிதி முகாமையாளராகவும் (1987 - 1989) மன்னார் மறைமாவட்ட சிறிய குருமட அதிபராகவும் (1989 -1995) பின்னர் மீண்டும் மறைமாவட்ட நிதி முகாமையாளராகப் (1959 - 2007) பணியாற்றியுள்ளார். பின்னர் மன்னார் மறைமாவட்ட சிறிய குருமட அதிபராக (2007- 2012) பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ளார். இவர் யாழ் புனித மடுத்தீனார் குருமட அதிபராக (1972 -1976) பணியாற்றிய காலம் புனித மடுத் தீனார் குருமட வரலாற்றில் பொற்காலம் என யாழ் மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றும் குருக்கள் தெரிவிக்கின்றனர்.

## உண்மையின் எண்ணங்கள்

மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குரு ஏ.சேவியர் குரூஸ் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவானவரான ஏ.சேவியர் குரூஸ் அடிகளார் தமது 80ஆவது அகவையில் குருத்துவத்தின் 57ஆவது நிறைவு தினத்தை 20 டிசெம்பர் 2017 அன்று கொண்டாடினார் என்பது மகிழ்வான செய்தியாகும்.

அவருக்கு யாழ் மன்னார் மறைமாவட்டங்கள் சார்பாக காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்னர் யாழ் மறைமாவட்டத்தில் புனித மடுத்தீனார் குருமட அதிபராக (1972 - 1976) பணியாற்றிய காலம் புனித மடுத்தீனரர் குருமட வரலாற்றில் பொற்காலம் எனவும் அவரிடம் சிறப்பான பயிற்சியை பெற்றோம் எனவும் யாழ். மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றும் குருக்கள் தெரிவிக்கின்றனர். மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவானவரான ஏ.சேவியர் குரூஸ் அடிகளார் தமது 80ஆவது அகவையில் அமைதியான ஓய்வு காலத்தைப் பெற இறை அருள் வேண்டுவோம்.

## தேசிய கத்தோலிக்க இளையோர் கொடி வாரம் இன்று பூர்த்தி

தேசிய கத்தோலிக்க இளையோர் வாரம் 26 ஒகஸ்ட் 2018 முதல் இன்று 02 செப்ரெம்பர் 2018 வரை கடைப்பிடிக்கப்பட்ட போது யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் அது முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநர் அன்ரன் ஸ்ரிபன் அடிகளாரோடு யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய உறுப்பினர்களும் இணைந்து 2018ஆம் ஆண்டின் தேசிய கத்தோலிக்க இளையோர் வாரத்தை யாழ் மறைமாவட்ட ஆயர்



மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆசியோடு வைபவ ரீதியாக ஆரம்பித்த போது எடுக்கப்பட்ட படம் இதுவாகும்.

## இளையோர் செபமாலை செபிக்க உதவும் கரித்தாஸ் அமைப்பு

எருசலேமில் வாழும் கிறிஸ்தவக் குடும்பங்களின் பொருளாதார நிலைமையை முன்னேற்றவும் இளையோரை செபமாலை செபிப்பதற்கு தூண்டவுமென எருசலேம் கரித்தாஸ் அமைப்பு 15 இலட்சம் செபமாலைகள் தயாரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது. செபமாலைகள் தயாரிப்பதன் வழியாக வாழ்க்கைத்தரத்தை மாற்றுதல் என்ற திட்டத்தில் சிறிய ஒலிவ் மரத் தொழிற்கூடங்களில் ஏறத்தாழ 250 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளது எருசலேம் கரித்தாஸ். இத்திட்டத்தின் வழியாக மக்களுக்கு பாதுகாப்பான ஒரு வருங்காலத்தை அமைத்துக்கொடுப்பதுடன் அமைதி, அன்பு, மற்றும் நீதி நிறைந்த உலகு உருவாக்கப்படுதற்கு இளையோரைச் செபிக்கத் தூண்டவும் முயற்சித்து வருகிறது எருசலேம காரித்தாஸ் அமைப்பு.

மத்திய அமெரிக்க நாடாகிய பனாமாவில் 2019ஆம் ஆண்டில் நடைபெறும் உலக இளையோர் நிகழ்வில் கலந்துகொள்ளும் இளையோர்க்கு இந்தச் செபமாலைகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



மாற்றத்திற்கான முகவர்கள் என்ற பொதுநிலைத்தலைவர்களுக்கான கருத்தாய்வு தேசிய பொது நிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கண்டி தேசிய குருமடத்தின் அமலமரி தியாகிகள் உருவாக்ககத்தில் 2018 ஆவணி இறுதி வாரத்தில் இடம்பெற்றது. யாழ் மறைமாவட்டத்தில் இருந்து பங்குபற்றிய ஒரு பகுதியினரின் படம் இதுவாகும்.

## தமிழ்த் தாயகத்தை கபளீகரம் செய்யும் நோக்கத்துடன் வருகின்றது மகாவலி

### யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு தெரிவிப்பு

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ் மக்களின் வாழ்விடங்களையும், வாழ்வாதாரங்களையும் ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.வி.பி.மங்களராஜா அடிகளார் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதன் முக்கிய விடயங்களை நோக்குவோம்.

தமிழ் மக்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த கொக்கிளாய், நாயாறு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய கிராமங்களில் அத்துமீறிக்குடியேறிய தென்பகுதி மீனவர்களுக்கு அங்கு நிரந்தரமாகத் தங்கியிருந்து தொழில் செய்வதற்கான காணி உத்தரவுப் பத்திரங்களை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை வழங்கியுள்ளது. இதனால் இங்கு பல தலைமுறைகளாக வாழ்ந்த தமிழ் மக்கள் காணியற்றவர்களாக்கப் பட்டுள்ளனர்.

இதுவரையில் ஏறக்குறைய 2000 ஏக்கர் காணிகள் மகாவலி அபிவிருத்தி சபையினால் கையளிக்கப் பட்டு 6000 தென்பகுதிக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களுள் இப்பகுதியைச் சேர்ந்த தமிழ்க் குடும்பங்கள் எவரும் இல்லை. ஒரு புறத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களும், வயல் காணிகளும் விடுவிக்கப்படாதிருக்கும் போது மறுபுறத்தில் மகாவலி அபிவிருத்திச்சபையும் மக்களின் காணிகளை மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் கபளீகரம் செய்கின்றது. இத்தனைக்கும் மகாவலி நீர் வவுனியா மாவட்டத்திற்கே இதுவரை வரவில்லை. வருகின்ற மகாவலி நீர் அநுராதபுர மாவட்டத்திற்கே போதாமல் இருக்கும் போது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இந்நீரில் ஒரு துளிதானும் வரும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஆயினும் இத்திட்டத்தின் பெயரால் குடியேற்றங்கள் மட்டும் இடம்கின்றமை. இப்பகுதியில் குடிப்பரம்பலை மாற்றித் தமிழரின் விகிதாசாரத்தைக் குறைக்கும் அரசின் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான முயற்சியென எண்ணத்தோன்றுகிறது.

தொல்லியல் ரீதியாக வடபகுதியின் வரலாறுகளை மறைக்கும் அல்லது அழிக்கும் செயற்பாடுகளும் இங்கு இடம்பெறுகின்றன. இதன் ஒரு வெளிப்பாடாக செம்மலை தமிழ் கிராமத்தின் நீராவிப் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் தற்போது பௌத்த அடையாளங்கள் இருப்பதாகக் கூறி பெரிய விகாரை ஒன்றை அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் இவ்விடம் 2500 வருடங்கள் பழமை வாய்ந்தது எனவும் வரலாறு திரிபுபடுத்தப்பட்டு தமிழர் பாரம்பரிய பிரதேசங்கள் சிங்களக் குடியேற்றங்களாக மாற்றப்படுகின்றன எனவும் கூறப்படுகின்றது.



யாழ். பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கலாநிதி புஷ்பரட்ணம் போன்ற பல தொல்லியல் நிபுணர்கள் உள்ளனர். தொல்லியல் திணைக்களம் இவர்கள் போன்ற தொல்லியல் நிபுணர்களுடைய ஆலோசனைகளைப் பெற்றால் இதுபோன்ற உண்மை வரலாறுகளை மறைக்கும் அல்லது அழிக்கும் முயற்சிகள் இடம் பெறா.

இராணுவ ஆக்கிரமிப்பாலும், மகாவலி அபிவிருத்திச் சபையின் நிலக் கையகப்படுத்தலாலும், தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் வழிபாட்டிடங்கள் கையகப்படுத்ததாலும் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்விடங்கள், வாழ்வாதாரங்கள், வழிபாட்டிடங்கள் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.– என்று உள்ளது.

# 10 ஆண்டுகளின் பின் மே.தீவுகள் செல்லும் இங்கிலாந்து அணி

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, 10 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கிந்திய தீவுகளுக்கு, கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையை மேற்கிந் திய தீவுகள் கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதற்கமைய, எதிர்வரும் ஆண்டு இரு அணிகளுக்கிடையில் மூன்று டெஸ்ட் போட்டிகள், ஐந்து ஒருநாள் போட்டிகள், மூன்று ரி – ருவென்ரி போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறவுள்ளது.

ஜனவரி மாத நடுப்பகுதியில், மேற்கிந்திய தீவுகளுக்குச் செல்லும் மேற்கிந்தியத் தீவுகள் அணி, மார்ச் மாதம் வரை அங்கு கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதன்படி, இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, ஜனவரி மாதம் 23ஆம் திகதி பார்படோஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.



# ஆசியக் கிண்ண கிரிக்கெட்; பங்களாதேஷ் அணி அறிவிப்பு

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான 16பேர் கொண்ட பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மஷ்ரபி மோர்டா தலைமையிலான இந்த அணியில், மொஹமட் மிதுன், அரிபுல் ஹக், நஸ்முல் இஸ்லாம் ஆகிய மூன்று வீரர்கள் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஒழுக்கீனக் குற்றச்சாட்டுகளால் சிக்கியுள்ள சபீர் ரஹ்மான் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதுதவிர அனாமுல் ஹக், அபு ஜெயிட் ஆகியோரும் அணிக்குள் உள்வாங்கப்படவில்லை.

மஷ்ரபி மோர்டா (அணித்தலைவர்), சகிப் ஹல் ஹசன் (துணைத் தலைவர்), தமீம் இக்பால், மொஹமட் மிதுன், லிட்டான் தாஸ், முஸ்தாபிகுர் ரஹீம், அரிபுல் ஹக், மொஹமதுல்லா, மொஹசெடக் ஹொஸைன், நாஸ்முல் ஹொஸைன், மெயிடி ஹசன் மிராஸ், நாஸ்முல் இஸ்லாம், ரூபல் ஹொசைன், முஸ்தாபிஜுர் ரஹ்மான், அபு ஹைடர் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர், எதிர்வரும் 15ஆம் திகதி ஐக்கிய அரபு அமிரகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முதல் போட்டியில், பங்களாதேஷ் அணி, இலங்கை அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. இந்தப் போட்டி டுபாயில் நடைபெறவுள்ளது.



# புதிய மைல்கல்லை எட்டினார் கோஹ்லி

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி, டெஸ்ட் போட்டிகளில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

சவுத்தாம்டனில் உள்ள ரோஸ் பவுல் மைதானத்தில் நடைபெற்றுவரும், இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியின் போது அவர் இந்த மைல்கல்லை எட்டினார்.

இப்போட்டியின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் விராட் கோஹ்லி 9 ஓட்டங்களைப் பெற்றபோது, டெஸ்ட் போட்டிகளில் 6000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார்.

இதையடுத்து, டெஸ்ட் போட்டிகளில் விரைவாக 6000 ஓட்டங்களை கடந்த இரண்டாவது இந்திய வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். தனது 70ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் விராட் கோஹ்லி, தனது 119ஆவது இன்னிங்ஸில் இந்த மைல் கல்லை எட்டினார். முதலிடத்தில் சுனில் கவாஸ்கர் உள்ளார்.

மிக குறைந்த இன்னிங்சில் 5000 ஓட்டங்களிலிருந்து 6000 ஓட்டங்களைக் கடந்துள்ளார். முன்பு 1000 ஓட்டங்களைக் கடந்ததை விடத் தற்போது வெறும் 14 இன்னிங்சில் கடைசி 1000 ஓட்டங்களை கடந்து இந்த சாதனையைப் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க பகிரங்க ரென்னிஸ்; சகோதரியை வீழ்த்திய செரீனா

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின், பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு மூன்றாம் சுற்றுப் போட்டியில், அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் வெற்றி பெற்றுள்ளார்.

மூன்றாம் சுற்றுப் போட்டியில், அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், அவரது சகோதரியான வீனஸ் வில்லியம்ஸை எதிர்கொண்டார்.

இரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், செரீனா வில்லியம்ஸ், எவ்வித அழுத்தமும் இல்லாமல் 6-1, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில் எளிதாக வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

செரீனா வில்லியம்ஸ், நான்காவது சுற்றுப் போட்டியில், எஸ்டோனியாவின் கையா கான்பியை எதிர்த்து விளையாடவுள்ளார்.



# இலங்கை வலைப்பந்து அணியில் இரு யாழ்ப்பாண வீராங்கனைகள்



இலங்கை வலைப்பந்தாட்ட அணியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் வீராங்கனைகள் இடம் பெறுகின்றனர்.

ஆசியாவின் உயரமான வலைப்பந்தாட்ட வீராங்கனையும் அதி சிறந்த கோல் போடும் வீராங்கனையுமான தர்ஜினி சிவலிங்கம் (செலான் வங்கி), எழிலேந்தினி சேதுகாவலர் ஆகிய இருவர் இடம்பெறுகின்றனர்.

சிரேஷ்ட தேசிய வலைப்பந்தாட்ட அணியில் இரண்டு தமிழர்கள் ஏக காலத்தில் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை அணி

சத்துராங்கனி ஜயசூரிய (தலைவி), தர்ஷிகா அபேவிக்ரம (உதவித் தலைவி), கயனி திசாநாயக்க, தர்ஜினி சிவலிங்கம், சுரேக்கா குமாரி, திலினி வத்தேகெதர, கயாஞ்சலி அமரவங், நௌலி ராஜபக்ஷ, துலாங்கி வன்னிதிலக்க, துலங்கா தனஞ்சி, ஹசிதா மெண்டிஸ், எழிலேந்தி சேதுகாவலர்.

இந்நிலையில், ஆசிய வலைப்பந்தாட்ட வல்லவர் போட்டிகளில் ஐந்தாவது தடவையாகச் சம்பியன் பட்டத்தை வென்றெடுத்து இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண வலைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான தகுதியை ஈட்டும் கங்கணத்துடன் சிங்கப்பூரில் நடக்கும் 11 ஆவது ஆசிய வலைபந்தாட்ட வல்லவர் போட்டிகளில் இலங்கை பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அணியில் மீண்டும் லசித் மலிங்க



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்காக இலங்கை அணியில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு வருட காலமாகச் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்காத லசித் மலிங்க, தற்போது இலங்கை அணியுடன் இணைந்து சர்வதேசப் போட்டிகளில் விளையாட உள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைக் குழாமில் லசித் மலிங்க இணைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் லசித் மலிங்க 35 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார்.

# ஜப்பானிடம் தோற்றது இலங்கை

18ஆவது ஆசிய விளையாட்டு விழாவின் ரக்பி போட்டியின் எழுவர் அரையிறுதிப் போட்டியில் இலங்கை அணி ஜப்பானிடம் 10 – 12 என்ற ரீதியில் தோல்வியடைந்துள்ளது.

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை அணி இதுவரையில் எந்தவொரு பதக்கத்தையும் வெற்றிகொள்ளாத நிலையில் நேற்று முன் தினம் நடைபெற்ற ரக்பி பிரிவுப் போட்டியில் ஆப்கானிஸ்தானை 36–0 என்ற கணக்கில் வீழ்த்தி இலங்கை அணி முன்னேறியது.

நேற்று முன்தினம் ஆரம்பமான ரக்பிப் போட்டிகளில இலங்கை அணி தனது முதல் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர் கொண்டது. இந்தப் போட்டியில் அபாரமான வெற்றியை ஈட்டிக்கொண்ட இலங்கை அணி இரண்டாவது போட்டியில் கொரியாவிடம் வீழ்ந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரண்டு போட்டிகளில் இலங்கை அணி விளையாடியது. இதில் முதலாவதாக நடைபெற்ற போட்டியில் ஆப்கானிஸ்தானை எதிர்த்தாடியது. பெரிதும் சோபிக்காத அணியான ஆப்கானிஸ்தானை 36–0 என்ற கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இதேவேளை இரண்டாவது போட்டியில் இலங்கை அணி சீனாவை எதிர்த்தாடியது. இதில் கடும்போட்டியைச் சந்தித்த இலங்கை அணி 17–12 என்ற அடிப்படையில் வெற்றியீட்டி அரையிறுதிக்கு முன்னேறியது.

அந்த வகையில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் ஜப்பானை எதிர் கொண்ட எழுவர் அடங்கிய இலங்கை அணி ஜப்பானிடம் 10 –12 என்ற ரீதியில் தோல்வியடைந்துள்ளது.

## மர்மப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் நேற்று முன் தினம் இரவு 11.30 மணியளவில் பள்ளிமுனைக் கடற்கரையில் இருந்து படகு ஒன்றில் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

நாச்சிக்குடாக் கடற்பகுதியில் மிதந்து வந்த மர்மப்பொருளை மீனவர்கள் அவதானித்துள்ளனர். ஜேசு ரஞ்சித் என்ற 39 வயதுடைய மீனவர் அந்த மர்மப்பொருளை எடுத்து படகினுள் வைத்து சோதனைக்கு உட்படுத்தினார் எனத் தெரிய வருகின்றது. இதன்போது அது வெடித்ததில் ஜேசு ரஞ்சித் உடல் சிதறி உயிரிழந்துள்ளார்.

இந்தப்படகில் இருந்தஏ.ஏ.சித்தி பிகிராடோ மற்றும் எம்.அகஸ்ரின் பிகிராடோ ஆகிய இரு மீனவர்களும் படுகாயமடைந்தமையோடு, அந்தோனி பிகிராடோ என்பவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினார்.

உயிரிழந்தவரின் சடலம் உடனடியாக மன்னார் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. காயமடைந்தவர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரனின் கருத்து அவரின் சுய கருத்தா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தா என்பதை கூட்டமைப்பு தெளிவுபடுத்த வேண்டும். அவரின் கருத்து கூட்டமைப்பின் ஏகோபித்த கருத்தில்லை என்றால் ஒட்டுமொத்தம் அவர் போன்றவர்களைச் சம்பந்தனும் மற்றைய கட்சித் தலைவர்களும் சேர்ந்து அஸ்மின் கூறிய பாணியில் விரட்டி அடிக்கவேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கேள்வி பதில் அறிக்கையிலேயே முதலமைச்சர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கேள்வி - சமஷ்டித் தீர்வு எமக்கு வேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் காலியில் கூறியுள்ளாரே? அது பற்றி?

பதில் – ஒருவேளை 2015இல் அவர் தேர்தலில் நின்றபோது சமஷ்டி வேண்டாம், தூசி தட்டிய 13ஆவது திருத்தச்சட்டம் மட்டும் போதும் என்று எமது மக்களிடம் கூறி வாக்குப் பெற்றாரோ தெரியவில்லை. அல்லது சிங்கள மக்களின் மனங்களைக் கொள்ளை கொள்ளவேண்டும் என்ற நினைப்பில் அவர் அவ்வாறு கூறினாரோ தெரியவில்லை.

அல்லது காலியில் சிறப்பு அதிரடிப்படையினரின் பலமான பாதுகாப்பின் பின்னரும் தனக்கு ஆஸ்திரேலியாவில் கிடைத்தது போல் பாதிப்பான வரவேற்பு கிடைக்குமோ என்று பயந்து அவ்வாறு கூறினாரோ தெரியவில்லை.

நான் ஒன்பது மாகாணங்களுக்கும் சமஷ்டியே உகந்தது என்று சிங்கள மனங்களை மாற்றி வருகின்றேன். எனதினிய மாணாக்கர் தமிழ் மக்களுக்குத் தான் கொடுத்த வாக்குகளை மறந்து, வட கிழக்கில் கூட சமஷ்டி வேண்டாம் என்று கூறுகின்றார் என்றால் – அதுவும் ஒற்றையாட்சியின் கீழ் சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்தியிருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கோருகின்றார் என்றால் – விரைவில் ஏதாவது பதவியொன்றை அவர் எதிர்பார்க்கின்றார் என்று அர்த்தம்.

அல்லது சிங்களவர்கள் மேலுள்ள பயமே காரணம் என்றும் நினைக்கலாம். அவரின் கருத்து அவரின் சுய கருத்தா அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கருத்தா என்பதை கூட்டமைப்பு தெளிபடுத்தவேண்டும். அவரின் கருத்து கூட்டமைப்பின் ஏகோபித்த கருத்தில்லை என்றால் ஒட்டுமொத்தம் அவர் போன்றவர்களை சம்பந்தனும் மற்றைய கட்சித் தலைவர்களும் சேர்ந்து அஸ்மின் கூறிய பாணியில் விரட்டி அடிக்க வேண்டும்.

ஐம்பதுக்கு ஐம்பது கோரி, சமஷ்டி கோரி, தனி நாடு கோரி வந்த தமிழருக்கு 13ஆம் திருத்தச் சட்டத்தை மட்டும் தந்தால் போதும் என்று அவர்கள் சார்பில் கூறுவதற்கு எந்தளவு நெஞ்சழுத்தம் வேண்டும் அவருக்கு? – என்றுள்ளது. (ஐ)

## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியப்படுத்துமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டு எதிரணி எதிர்வரும் 5ஆம் திகதி நடத்தவுள்ள பாரிய போராட்டமே நாட்டின் வரலாற்றில் நடைபெற்ற பாரிய போராட்டமொன்றாகக் கருதப்படும்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளும் மக்களைக் கண்டவுடன் ஒரு சிலர் நாட்டையே விட்டே ஓடக்கூடும்.

நாங்கள் இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கு முக்கிய காரணம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கே ஆகும். அத்துடன் எங்களின் கரங்களிலோ மனங்களிலோ எந்தவித அழுக்கான எண்ணங்களும் இல்லை.

அதனால்தான் எந்தவொரு பயமும் இல்லாமல் எமது மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பாக உண்மையை நிரூபிக்கும் பொருட்டு நீதிமன்றங்களுக்குக் கூடச் சென்று வருகின்றோம்.

நாங்கள் எப்போதும் நாட்டு மக்களின் நலன்களுக்காகக் குரல்கொடுப்போம் – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சொந்தமானவை. 522 ஏக்கர் காணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் விடுவிக்கப்படும். எஞ்சிய காணிகள் 5 ஆண்டுகள் திட்டத்தில் படிப்படியாக விடுவிக்கப்படும்.

– இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த காணிகளில் 80 சத வீதமானவை கடந்த ஜூலை 31ஆம் திகதிவரை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் 16 ஆயிரத்து 115 ஏக்கர் காணிகளும் கிழக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்து 185 ஏக்கர் காணிகளும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 16 ஆயிரத்து 115 ஏக்கர் காணிகளில் 2 ஆயிரத்து 561 ஏக்கர் காணிகள் மட்டுமே தனியாருக்குச் சொந்தமானவை. கிழக்கில் 60 ஏக்கர் தனியார் காணிகளே இராணுவத்தினரிடம் உள்ளன.

இராணுவம் முகாம்கள் எவையும் வடக்கு – கிழக்கில் மூடப்படவில்லை. அவை அந்தப் பிரிவுக்குரிய பிரிகேட் முகாம்களுடன் இணைக்கப்படுகின்றன – என்றார். (ஐ)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு கீழ்ப்படிய மறுக்கிறது என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் ராட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பதவியில் இருந்து நேற்றுடன் விலகிச் சென்ற சையிட் ராட் அல் ஹுசைன் 'திஎக்கொனொமிஸ்ட்' இதழில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

துயரத்தில் சிக்கியுள்ளவர்களின் வலுவற்ற நிலையை நான் யாழ்ப்பாணத்தில் உணர்ந்தேன். பல பத்தாண்டுகளுக்கு முன்னர் தமது காணிகளை இராணுவத்திடம் இழந்தவர்கள் இன்னமும், பெரும்பாலும் அடிப்படை வசதிகளின்றி, மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அவர்களின் நிலங்களையும் சொத்துக்களையும் விடுவிப்பதில், இலங்கை அரசு உறுதியாக இருந்தாலும்கூட, இலங்கை இராணுவம் கீழ்ப்படிய மறுக்கிறது.

இதனால், அப்பாவிகளான இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## லும்பினி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் நிறைவடைந்தமையைத் தொடர்ந்து நேபாளத்துக்கான இரண்டு நாள் அரச முறைப் பயணத்தை ஆரம்பித்தார்.

இதன் முதல் நடவடிக்கையாகப் புத்தர் பிறந்த புனித லும்பினி உட்பட சில சமயத் தலங்களுக்கு ஜனாதிபதி நேற்று விஜயம் மேற்கொண்டார்.

நேற்று முற்பகல் லும்பினி புனித பூமிக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை அந்த மாநிலத்தின் முதலமைச்சர் மற்றும் கலாசார அமைச்சர் ஆகியோர் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சமயக் கிரியைகளில் ஈடுபட்டார். லும்பினிக்கு விஜயம் செய்யும் எந்தவொரு அரச தலைவருக்கும் கிடைக்காத அபூர்வமானதொரு சந்தர்ப்பமாக, சித்தார்த்த இளவரசர் பிறந்து முதலாவது காலடி எடுத்துவைத்த இடத்தைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் இலங்கை ஜனாதிபதிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

லும்பினி இலங்கை மகா விகாரையின் பொறுப்பாளர் சங்கைக்குரிய கலஹபிடிய பிரேமரத்ன நாயக்க தேரரினால் சமயக் கிரியைகள் நடத்தப்பட்டன. ஜனாதிபதியும் தூதுக்குழுவினரும் இந்தச் சமயக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களைபெற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து லும்பினி அபிவிருத்தி மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் குறித்துக் கேட்டறிந்த ஜனாதிபதி, அந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான எந்தவொரு உதவியையும் வழங்கத் தான் தயாராக உள்ளார் எனவும் கூறினார்.

அதன் பின்னர் ஜனாதிபதி லும்பினி புனித பூமியிலுள்ள மாயா தேவி விகாரைக்கு விஜயம் செய்தார். கௌதம புத்தரின் தாயாரான மாயா தேவியின் பெயரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த விகாரை 1997ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் உலக மரபுரிமை மையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி அவர்களுக்கு விசேட நினைவுச் சின்னமொன்று வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி லும்பினி புனித பூமியிலுள்ள இலங்கை மகா விகாரைக்குச் சென்றார். இலங்கை மல்வத்தை மகா விகாரை பீடத்தினால் பரிபாலனம் செய்யப்படும் இந்த விகாரைக்குச் சென்று சமய கிரியைகளில் ஈடுபட்ட ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டுள்ள புனித தந்தத்தையும் வழிபட்டார்.

நேற்றுப் பிற்பகல் நேபாளத்தின் காத்மண்டு நகரில் உள்ள பிரபல இந்துக் கோயிலான பசுபதிநாத் கோயிலுக்குச் சென்ற ஜனாதிபதி, அங்கு சமயக் கிரியைகளில் ஈடுபட்டார். இந்த கோயில் 1979ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனத்தினால் உலக மரபுரிமை மையமாக பிரகடனப்படுத்தப்பட்டதுடன் உலகெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வருகை தருகின்றனர். (ஐ)

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகத் தடுத்து வைத்தல் தொடர்பான – அறிக்கை மீதான விவாதம் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 39 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு இலங்கை அரசின் சார்பில் பதிலளிக்கப்படும்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜெனீவா மனித உரிமை கவுன்ஸிலில் இந்த அறிக்கை தன்னிச்சையாகத் தடுத்து வைத்தல் குறித்து ஆராயும் ஐக்கிய நாடுகளின் செயற்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கமைய பல்வேறு பரிந்துரைகள் இதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இன்னும் சில தினங்களில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமை தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் பப்லோ டி கிரீப்பின் இலங்கை தொடர்பான அறிக்கையும் 39/53.1 என்ற தலைப்பில் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குச் சில தினங்களில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்த விசேட நிபுணரின் அறிக்கை தொடர்பான விவாதம் ஜெனீவாவில் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அல்லது பிரித்தானியா இலங்கை தொடர்பில் பிரேரணை ஒன்றை 2019 ஆம் ஆண்டில் கொண்டு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் அதற்கான முயற்சிகள் இந்தக் கூட்டத் தொடரிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

எதிர்வரும் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் இலங்கை தொடர்பான ஜெனீவாப் பிரேரணையின் செயற்பாட்டுக் காலம் நிறைவடைகின்றது.

இதன் பின்னர் இலங்கை பொறுப்புக்கூறல் முயற்சியை முன்னெடுக்கவேண்டுமாயின் சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய பிரேரணை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறான ஒரு பிரேரணையை 2019ஆம் ஆண்டு கொண்டு வருவதற்குத் தீவிரமாகத் தற்போது முயற்சிக்கப்படுகின்றது.

இம்முறை 39ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் மற்றுமொரு பிரேரணையை ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலின் உறுப்பு நாடுகள் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவுள்ளனர். (ஐ)

## கோதுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய சில்லறை விலை 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதால் பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலையும் அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தென்மேற்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, காலித் துறைமுகங்களில் இருந்து, 3700 கி.மீ தொலைவில் உள்ள கடல் பகுதியிலேயே இந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால், இலங்கைத் தீவில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் குறித்து பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் வளிமண்டளவியல் திணைக்களத்தின் அதிகாரி மொகமட் சாலிஹின் தெரிவித்துள்ளார். (ஐ)

## புலித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் இருக்கலாம். புலிகளின் தலைமைத்துவம் புத்திசாலித்தனமான தலைமைத்துவம் என்று கூறிய முதல் முஸ்லிமாக அஸ்மின் இருக்கக்கூடும்.

– இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வில் முதலமைச்சரைப் பதவியில் இருந்து நீக்கப் புலிகள் பாணியில் செயற்படவேண்டும் என்று மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் கூறியிருந்தார்.

அவரது அந்தக் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் வடக்கு மாகாண முதலமைச்சர் தாம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த வாராந்த கேள்வி பதில் அறிக்கையில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கேள்வி – முதலமைச்சரைப் பதவியில் இருந்து நீக்கப் புலிகள் பாணியில் செயற்படவேண்டும் என்று கௌரவ அஸ்மின் அவர்கள் கூறியுள்ளாரே?


பதில் – அண்மையில்தான் வடக்கு மாகாண சபையில் தான் பேசிய பேச்சுக்களைத் தொகுத்து ஒரு நூல் வெளியிடவிருக்கிறார் எனக்கூறி நான் அவரின் நூலுக்கு முகவுரை எழுதவேண்டும் என்றோ அல்லது வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளவேண்டும் என்றோ அழைப்பு விடுத்திருந்தார் நண்பர் அஸ்மின்.

ஆகவே தன்னுடைய கட்சியில் தனக்கு நேர்ந்தது எனக்கும் ஏற்படவேண்டும் என்ற நட்பெண்ணத்தில் அவர் இதைக் கூறியிருக்கலாம் அல்லது தனது இன மக்களுக்குப் புலிகள் கையால் கிடைத்த பரிகாரத்தை நானும் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம்.

புலிகளின் தலைமைத்துவம் புத்திசாலித்தனமான தலைமைத்துவம் என்று கூறிய முதல் முஸ்லிமாக அவர் இருக்கக்கூடும். அவரின் இந்தக் கூற்றால் முஸ்லிம்களுக்குத் தமிழ் மக்கள் செய்த தவறுக்காக தமது வருத்தத்தைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற அவரின் கொழும்பு நண்பர்களின் கோரிக்கைகள் விடுபட்டுப் போயுள்ளன என்றே கூற வேண்டும் – என்றுள்ளது. (ஐ)

# பொன்னாலையின் வரலாற்றை....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)




அவருடன் நான் அதிகம் பேசியதில்லை. ஆனால், அவருடைய அமைதியும் நிதானமும் அவர் காட்டிய பரிவும் முன் மாதிரியானவை. 1983 ஆம் ஆண்டு முற்பகுதியில் எமது சங்கம் கொழும்பில் நடத்திய பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒழுங்குசெய்திருந்த ஈழத்து எழுத்தாளர்களின் ஒளிப்படக்கண்காட்சிக்காக படங்கள் சேகரிப்பதற்கு யாழ்ப்பாணம் சென்றவிடத்தில் வரதரிடம் படம் பெற்ற பொழுது, விழாவுக்கு வேறு ஏதும் உதவிகள் தேவைப்பட்டால் தமக்குச்சொல்லுமாறு தெரிவித்தார். அவருடைய நற்பண்பை கொழும்பு வந்ததும் சங்கத்தின் செயலாளர் பிரேம்ஜியிடம் சொன்னேன்.

நூற்றாண்டு விழாவுக்காக சென்னையிலிருந்துவரும் பாரதி இயல் ஆய்வாளர் தொ.மு.சி. ரகுநாதன் யாழ் வரும்பொழுது தங்குவதற்கு உதவுமாறு பிரேம்ஜி வரதருக்கு தகவல் அனுப்பியிருந்தார்.

நான் ரகுநாதனை கல்முனை, அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு அழைத்துச் சென்றுவிட்டு, அங்கிருந்து யாழ் திரும்புவதாக நிகழ்ச்சியிருந்தது.

நாம் மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட நாளன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மானிப்பாய் எம். பியான வி. தருமலிங்கம் அவர்களின் தலைமையில் விழா நிகழ்ச்சியிருந்தது. நாம் வந்த வாகனம் முறிகண்டியில் பழுதடைந்து பயணம் தாமதித்தது. வரதர் எமது வரவுக்காக நீண்ட நேரம் காத்திருந்து விட்டு மண்டபத்திற்குச் சென்றுவிட்டார்.

நாமும் வரதரின்வண்ணார்பண்ணை வீட்டைச் சென்றடைய தாமதமானது. அங்கு வந்தவுடன் குளித்து உடைமாற்றிக்கொண்டு மண்டபத்திற்கு புறப்படும் தருணம், ரகுநாதன் வரதரின் வீட்டின் சுவரில் இருந்த ஒரு படத்தையே கண்வெட்டாமல் பார்த்து பரவசமடைந்ததுடன் எனக்கும் காண்பித்தார்.

அந்தப்படத்தில் ரகுநாதனின் இளமைக்காலம் தெரிந்தது. அவருடைய மடியில் ஒரு பெண்குழந்தை. ரகுநாதன் அந்தக்குழந்தைக்கு ஏடு துவக்கி வித்தியாரம்பம் செய்கிறார். அந்தப்படம் ரகுநாதன் 1956 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த எமது சங்கத்தின் பாரதி விழாவுக்கு வந்தசமயத்தில் எடுக்கப்பட்டது ரகுநாதனின் மடியில் அமர்ந்து வரதரின் பெண்குழந்தை தமிழ் கற்றது.

அதனைக் காண்பித்த ரகுநாதன், தமிழ்நாட்டில் ஈழத்து படைப்புகளை எழுத்தின் ஊடாகவே மனதில் சுமக்கின்றோம். ஆனால், ஈழத்தில் எங்களையே தங்கள் மனதில் இருத்தி தங்கள் இல்லங்களில் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள் என்று பெருமிதம் பொங்கக் கூறினார்.

அன்று திருமதி மகாதேவி வரதர் அவர்கள் எம்மை உபசரித்து வீரசிங்கம் மண்டபத்திற்கு வழிசொல்லி அனுப்பி வைத்தார். வரதரைப் பற்றி இந்தப் பதிவை எழுத முற்படுகையில் வரதர் பற்றிய நினைவுகளுக்குள் சஞ்சரிக்கின்றேன்.

கயமை மயக்கம் (சிறுகதை) நாவலர், வாழ்க நீ சங்கிலி மன்னா, மலரும் நினைவுகள், பாரதக்கதை, யாழ்ப்பாணத்தார் கண்ணீர், சிறுகதை பட்டறிவுக் குறிப்புகள் முதலான நூல்களை வரவாக்கியிருக்கும் வரதரை கௌரவிக்கும் பொருட்டு மல்லிகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான காலப்பகுதியில் ஒரு சிறுகதைப்போட்டியை ஜீவா அறிவித்தார். கதைகளும் வந்தன. எதிர்பாராதவிதமாக போர் உக்கிரமடைந்து ஷெல் வீச்சில் மல்லிகை காரியாலயமும் பாதிக்கப்பட்ட வேளையில், அந்தப் போட்டிக்கு வந்த கதைகளும் எரிந்து சிதிலமாகிவிட்டன. அதன் பின்னர் அந்தப்போட்டி நடக்கவில்லை. இதனால் கவலையுடன் இருந்த ஜீவாவை தேற்றி ஆறுதல் சொன்ன வரதர், நீங்களும் அச்சுக்கோப்பாளர் சந்திரசேகரமும் உயிர் தப்பியதே பெரிய விடயம். போட்டியை எப்பொழுது வேண்டுமானாலும் நடத்திக்கொள்ளலாம் என்றார்.

ஆனால், அந்தச்சிறுகதைப்போட்டி அதன் பிறகு நடக்கவே இல்லை. அவ்வேளையில் நான் ஆஸ்திரேலியாவில் இருந்தேன்.

தியாகர் சண்முகம் வரதராசன் என்ற இயற்பெயர் கொண்ட வரதர், பொன்னாலையில் 01-07-1924 ஆம் ஆண்டு பிறந்தார். அவருடைய 65 ஆவது பிறந்ததின விழா 01 - 07 - 1989 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஓட்டுமடம் வீதியில் சிவலிங்கப்புலியடியில் அமைந்திருந்த இலக்கிய அன்பர்கள் சோமகாந்தன் - பத்மா தம்பதியரின் இல்லத்தில் பெரிய விருந்துபசாரத்துடன் (வடை - பாயாசத்துடன்) நடந்ததாக நெல்லை. க.பேரனின் குறிப்புகள் சொல்கின்றன.

பேராசிரியர் சிவத்தம்பியின் தலைமையில் நடந்த அந்த நிகழ்ச்சியில் சொக்கன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், மல்லிகை ஜீவா, ஏ.ரி. பொன்னுத்துரை, சோ. பத்மநாதன்,




மௌனகுரு, நீர்வைபொன்னையன், பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங், கோகிலா மகேந்திரன், தெணியான், சாந்தன், நெல்லை க.பேரன், கம்பவாரிதி ஜெயராஜ், ஈழநாடு மாணிக்கம், சோமகாந்தன், பத்மா சோமகாந்தன் ஆகியோர் உரையாற்றி வரதரை வாழ்த்தியிருக்கிறார்கள். இந்தப் பெயர் பட்டியல் பற்றி இத்தனை ஆண் டுகளுக்குப்பின்னர் இங்கு நான் குறிப் பிடுவதற்கு காரணங்கள் இருக்கின்றன.

இவர்களில் சிலர் இன்று எம்மத்தியில் இல்லை. சிலர் நோய் உபாதைகளுடன் காலத்தை ஓட்டுகின்றனர். இவர்கள் அனைவரும் இலக்கியத்திலும் கோட்பாடுகளிலும் ஒத்த கருத்துக் கொண்டவர்களும் அல்லர்! ஆயினும், சகோதர எழுத்தாளனுக்கு பிறந்தநாள் என்றவுடன் ஒன்றுபட்டுச் சென்றுள்ளார்கள். வாழ்த்தியிருக்கிறார்கள்.

அதற்கு வரதரின் இயல்புகள் மாத்திரம் காரணம் அல்ல!

போரின் நெருக்கடி உக்கிரமடைந்திருந்த வேளையிலும் இவர்கள் மத்தியில் நிலவிய சகோதர வாஞ்சை முக்கியமானது. போர் முடிவுற்றுள்ள சூழலில் முகநூல் கலாசாரத்தில் மூழ்கி உமிழ்ந்து கொண்டிருக்கும் சமகால எழுத்தாளர்கள், ஒரு காலத்தில் - போர் நெருக்கடியிலும் ஈழத்து இலக்கிய உலகம் எப்படி இருந்திருக்கிறது? என்பதை தெரிந்து கொள்ளவும்வேண்டும். என்பதற்காகவும் இந்தத் தகவல்களை பதிவு செய்கின்றேன்.




வரதர் 21-12-2006 ஆம் திகதி மறைந்ததும் ஆஸ்திரேலியா சிட்னியில் வதியும் இலக்கிய நண்பர் கானா. பிரபாதமதுவலைப் பதிவில் வரதர் பற்றிய அழகிய சித்திரம் வரைந்திருக்கிறார்.

வரதர் எப்பொழுதும் தகவல் திரட்டி ஆவணப்படுத்தும் இயல்புள்ளவராகவே வாழ்ந்தவர். அதனால்தான் அவரால் பலகுறிப்புகள் மாத்திரமன்றி, மலரும் நினைவுகள் என்ற தலைப்பில் அந்தக் கால யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பதையும் அம்மக்களின் வாழ்க்கை முறைகளையும் ஆவணப்படுத்தியிருக்கிறார். எவரும் தாம் பிறந்த ஊரை மறக்கமாட்டார்கள். வரதரும் அவ்வாறே தமது பொன்னாலை கிராமத்தை உயிர்ப்போடு பல அரிய தகவல்களுடன் ஆவணமாக பதிவு செய்துள்ளார். வரதர் பிறந்த 1924 ஆம் ஆண்டு காலத்தில் அந்த ஊரை புன்னாலை என்றே அழைத்திருக்கிறார்கள்.

புன்னாலைக்கோயில், புன்னாலைச் சாமி என்றெல்லாம் உரையாடல் வழக்குகள் இருந்திருக்கின்றன. உந்தப் புன்னாலைச் சாமியாரறிய என்று அக்காலத்தில் மக் கள் சத்தியங்கள் (பொய்ச் சத்தியங்கள்) செய்வதும் சாதாரணம் என்கிறார் வரதர். அத்தகைய புன்னாலையை, பொன்னாலை என்று பெயர் மாற்றுவதற்கும் தாம் முயன்ற கதையையும் வரதர் சொல்கிறார்.

இன்று பொன்னாலைதான் வழக்கிலிருக்கிறது. ஆனால், வரதர்தான் எம் மத்தியில் இல்லை.

வரதர் படைப்பிலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டவாறே சில சிற்றேடுகளையும் நடத்தியவர். அவ்வப்போது தனது இலக்கிய தரிசனங்களையும் இதழ்களில் பதிவுசெய்த வர்.

இலக்கியவிமர்சகர்கள் பற்றி புராண காலத்திலிருந்தும் சங்க காலத்திலிருந்தும் பல செய்திகளை அறிகின்றோம்.

பாண்டியன் அரசவையில் ஏழைப் புலவர் தருமியின் பாட்டில் குற்றம் கண்டு, விமர்சித்த புலவர் நக்கீரன் கதை தெரிந்தவர்கள் நாம். திருவிளையாடல் திரைப் படத்தில் சிவன் - தருமி - நக்கீரன் சம்பந்தப்பட்ட காட்சியை மறந்திருக்கமாட்டீர்கள்.

சோழ மன்னன் அரசவையில் நடந்த ஒரு சம்பவம் பற்றி வரதர் இவ்வாறு விவரிக்கிறார்:

கவிதை பாடும் புலவர்களுக்கு சோழ மன்னன் பரிசுகள் கொடுப்பதை அறிந்த படிப்பறிவற்ற ஒரு குடிமகனும் காவிறையே கூவிறையே என்று வாய்க்கு வந்த சொற்களையெல்லாம் சேர்த்து ஒரு கவிதையாக்கி, சோழமன்னனின் சபையில் படித்தானாம். அதைக்கேட்டு எல்லோரும் சிரிக்க, ஒரு புலவர் அவன் மேல் இரக்கம்கொண்டோ அல்லது தமது திறமையைக்காட்ட நினைத்தோ, அந்தக் கவிதைக்கு சிறப்பான பொருள் சொல்லி பரிசு வாங்கிக்கொடுத்தாராம். இலக்கிய விமர்சகர்கள் சிலரும் ஒன்றுமில்லாத ஆக்க இலக்கியங்களைக்கூட சில சமயங்களில் ஆகா... ஓகோ... எனப் புகழ்ந்து அதிலிருந்து நயங்களையும் எடுத்துக்காட்டி விடுகிறார்கள் இவ்வாறு தொடங்கும் வரதரின் ஒரு நல்ல இலக்கியம் என்ற கட்டுரை மல்லிகை 22 ஆவது ஆண்டுமலரில் (1986 ஓகஸ்ட்) வெளியாகியிருக்கிறது.

கோகிலா மகேந்திரன் எழுதிய துயிலும் ஒருநாள்கலையும்என்ற நாவல்வெளியீட்டுநிகழ்வுக்குச்சென்றிருக்கிறார் வரதர். அங்கு பலரும் நூலாசிரியரை பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். ஆனால், செங்கைஆழியான் மாத்திரம் அந்த நாவலில் தான் கண்டுபிடித்த குறைகளை நக்கீரப்பார்வையுடன் முன்வைத்து சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

அந்தச்சபையிலிருந்த வரதர், நூலாசிரியர் கோகிலா மகேந்திரனின் ஏற்புரையையும் செவிமடுத்து, குறிப்பிட்ட நாவலையும் வாங்கி வந்த படித்துவிட்டு தனது கருத்துகளை மல்லிகையில் எழுதியிருந்தார்.

சமகாலத்தில் இவ்வாறான சம்பவங்களை நயமுடன் பதிவுசெய்யும் வழக்கம் குறைந்துவருகிறது. வெளியீட்டு அரங்குகளில் வாங்கப்படும் நூல்களை படிப்பவர்களும் குறைவு! படித்தாலும் தங்கள் வாசிப்பு அனுபவத்தை எழுத்தில் பதிவு செய்பவர்களும் அபூர்வம்!

எங்கள் மூத்த எழுத்தாளர் வரதர் சக எழுத்தாளர்களை நேசித்தவர். அவர்களின் நூல்களை வெளியிட்டவர். அத்துடன் நில்லாமல் தனது மதிப்பீடுகளை எழுதிவந்தவர். அவர் வாழ்ந்த காலத்திலேயே இலங்கை தேசிய சாகித்திய விழாக்குழு அவருக்கு சாகித்திய ரத்னா விருதுவழங்கி தன்னையும் பெருமைப்படுத்திக்கொண்டுவிட்டது.

வரதர் தனது முகவரி - தொலைபேசி அட்டையை ( Visiting Card) மும்மொழியிலும் அச்சிட்டு வைத்திருந்து நண்பர்கள், உறவினர்களுக்கு தந்திருப்பவர். யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் மகன் இப்படியும் வாழ்ந்திருக்கிறார்! என்பதற்கு அந்த அட்டையும் ஒரு சான்று!

கார்களில் சிங்கள ஸ்ரீ எழுத்தினை தார்பூசி அழித்து தமிழினத் தேசியக் கலாசாரத்தில் எழுச்சிகொள்ள முயன்ற மண்ணில், இன்று முதல்வர் முதல் அவரது அமைச்சர்களின் கடிதத்தலைப்புகளில் சிங்கள மொழியும் இடம்பெற்றுள்ளது. வரதர் தனது அட்டையில் மும்மொழியை யும் பதிவுசெய்து அன்றே முன்மாதிரியானார். காலம் எவ்வளவு விடயங்களை பதிவுசெய்துகொண்டு நகர்ந்துகொண்டி ருக்கிறது.

வரதரும் எங்களை விட்டுப்பிரிந்து விட்டார்.

நண்பர் , பேராசிரியர் மௌனகுரு சொல்வதுபோன்று - காலம் தனது கடமையைச் செய்துகொண்டிருக்கிறது.

*

# மாட்டுவண்டிச் சவாரி மாபெரும் போட்டி - 2018

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையமும்
புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக் கழகமும்
இணைந்து நடத்தும்
மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி.

இடம் : புதுவெளி சவாரித் திடல், புளியங்கூடல்
காலம் : இன்று 02.09.2018 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 1.00 மணி

அ, ஆ, இ, ஈ பிரிவுகளில்

1 ஆம் இடம் பெறும் காளைகளுக்கு தங்கப்பதக்கங்கள் (ஒரு பவுண்)
2 ஆம் இடம் பெறும் காளைகளுக்கு தங்கப் பதக்கங்கள் (அரை பவுண்)
3 ஆம் இடம் பெறும் காளைகளுக்கு 24” LED தொலைக்காட்சிகள்
4 ஆம் இடம் பெறும் காளைகளுக்கு மிக்ஷிகள்
என்பவற்றுடன் மேலும் பல ஆறுதல் பரிசுகள்.

வடக்கு மாகாணத்தின் தீரமிகு காளைகளின் ஆக்ரோஷமான போட்டியைக் காண புதுவெளி சவாரித் திடலுக்கு அணி திரள்வீர்! தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களை மேம்படுத்தும் எமது முயற்சிக்கு கரம் கொடுப்பீர்!



பங்குபற்றும் காளைகளுக்கு பதிவுக்கட்டணம் இல்லை.
தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகாமாரி சனசமூக நிலையமும்
விளையாட்டுக் கழகமும்
புளியங்கூடல்.

தொடர்பு: 077 7322 488, 077 236 5642

# New Science World

NEW SCIENCE WORLD VICTORY MUST

Navalar Road Junction, Brown Road, Jaffna.

## 2019 A/L DAY CLASSES

2018 August பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது

**Physics**
திரு. R. குகன்
திரு. R. குமரன் } 11.30 am - 1.30 pm.

**Chemistry**
திரு. டயஸ்
திரு. K.T. சிவகுமார் } 9.30 am - 11.30 am.

**Biology**
திரு. N.T. கஜேந்திரன் - 7.30 am - 9.30 am

**Com. Maths**
திரு. S. கிருஷ்ணா - 7.30 am - 9.30 am
(யாழ். முன்னாள் பிரபல ஆசிரியர்)
திரு. S.S. செந்தில்றாஜ் - செவ், புதன், வெள்ளி 4.30 pm - 6.00pm
திரு. T. சஞ்சீவன் - சனி, ஞாயிறு
English medium 10.00 am - 12.00

ஆரம்பம் : 05.09.2018 புதன் காலை 7.30

தொடர்புகளுக்கு: 077 336 4055/ 021 221 6690
www.newscience world.net

# KINGS ELECTRONICS(PVT) LTD

SPECIAL OFFER

## மாபெரும் மலிவு விற்பனை SEPTEMBER 15 வரை

மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

| | |
|---|---|
| Samsung 32” | -28,750/= |
| LG 32” | -29,600/= |
| Hisence 32” | -22,400/= |
| Sony 32 | -34,500/= |
| VideoConn 32” | -22,900/= |
| Innovex 24” | -17,400/= |
| Panasonic 32” | -26,250/= |
| Abans 32” | -21,900/= |
| Sony 40” | -87,000/= |
| Maxmo 32” | -18,750/= |
| Haier 32” smart | -28,900/= |
| Unic Ulta | -19,900/= |
| Haier 32” | -20,500/= |
| Innovex 20” | -12,250/= |
| JVC 24” | -16,750/= |

MAXMO 40” LED TV 48900/= Free DVD PLAYER

SAMSUNG R19 REFRIGERATOR 35900/= 10 YEARS WARRANTY

INNOVEX WASHING MACHINE 34500/= FIVE YEAR WARRANTY

Sofa 3+1+1 RS.39,900/= ONLY

SISIL SL-EC0192 REFRIGERATOR RS.36.900/=

Abans FULLY AUTOMATIC WASHING MACHINE RS.32,500/= 5 YEAR WARRANTY

INVERTER LG TOP LOADER WASHING MACHINE 12KG LGWM2312VSAM 64,500/=

SAMSUNG 55” 4K SMART RS.164,000 ONLY

Hisense 55 4K SMART RS.126,900 ONLY

SAMSUNG 43” 4K SMART RS.94,900 ONLY

LG INVERTER REFRIGERATOR GL-B272SM 10 YEARS WARRANTY 63,900/=

lG Dual Inverter AC 10 YEARS WARRANTY 12000BTU 99,900/=

Buy Now

0212216999 0763594665 KingsJaffna. 12, Point Petro Road, Jaffna.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.